# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 77 — 1973 සැප්තැම්බර් 14 වැනි සිකුරාදා — 1973.09.14

77 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II அ) — விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் ... ... ... | 925 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் ... | 945 |


*கவனிக்க.—நீதி நிருவாகம் சட்டமூலமும் இலங்கைப் பெற்ரோலியக் கூட்டுத்தாபனம் (திருத்தம்) சட்டமூலமும் 1973 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*

# பதவிகள் — வெற்றிடம்

## இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத் தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத் தாகும் பொது நிபந்தனைகள்

### 1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள்

1 : 1 விண்ணபபதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். " இலங்கையர் " என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தில் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரஜையாக இருப்பவராகும்.

1 : 2 ஏதாவது ஒரு பதவிக்கான வேட்பாளர், அப் பதவிக்கு சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதனினும் உயர்வான பரீட்சையில் சித்தியடைந்திருப்பது ஆகக் குறைந்த கல்வித் தகைமையென விதிக்கப்பட்டிருக்குமிடத்து, சிங்கள மொழி மூலம் கல்வி பயின்ற சிங்களவராக இருப்பின் அவர் சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்கள மொழியில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (1961 ஜனவரி 1 க்கு முந்திய ஒரு திகதியிலிருந்து அரச சேவையில் இருப்போருக்கும் அரச சேவையில் உள்ள பிற பதவிகளுக்கு நியமனத்தை நாடும் அத் தகையோருக்கும் இத் தேவை ஏற்புடைத்தாகாது.)

1 : 3 விதிக்கப்பெற்ற சிங்கள வினைத்திறமைத்திறன் தேர்வினில் சித்தி எய்தத் தவறியமைக்காக தகுதிகூர் சோதனைக்கான நியமனங்கள் நிறுத்தி வைக்கப்பட்ட புதிதாகச் சேர்ந்த" அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமாயின் 640 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிரூபத்தின் நியதிகளுக்கமைவாக விதிக்கப்பெற்ற உயர்ந்த சிங்கள வினைத்திறன் தேர்விலிருந்து விலக்களிக்கும் உரிமையை அவர்களுக்குக் கொடுக்கத்தக்க தகைமையை அவர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

### 2. படிகள்

2 : 1 அரச சேவையில் உள்ள திருமணமான உத்தியோகத்தர்களுக்கு அவர்களது பதவிகளுக்கு ஏற்புடைய திரட்டிய மாத வேதனத்துடன் மேலதிகமாக தாபனக் கோவையின் —— ஆம் அத்தியாயத்தின் 1 ஆம் பிரிவில் தரப்பட்டபடி விவாகப் படியும் வழங்கப்படும்.

2 : 2 மாத வேதனம் பெறும் அரச உத்தியோகத்தர்கள், அவர்கள் 180 ரூபாவிலிருந்து 250 ரூபா வரையில் (சகல படிகளும் உட்பட) வேதனமாக கூலியாகப் பெறும் தொகுதியினரைச் சேர்ந்தவராகின், அவர்களுக்கு விசேட படியாக ரூபா 7.50 கொடுக்கப்படும். அது தேவையானவிடத்து சரிசெய்யப்படுவதற்கு உள்ளாகும்.

### முக்கிய அறிவித்தல்

*இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.*

**3. சேவை நிபந்தனைகள் : பொது**

**3 : 1** நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக் களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

**3 : 2** அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தி யோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

**3 : 3** அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**4. நிரந்தரப் பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர் களுக்கு ஏற்புடைத்தாகும் சேவை நிபந்தனைகள்**

**4 : 1** நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோ கத்தர்கள் மேலே 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந் தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின் வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண் டும் :—

**4 : 1 : 1** சகல நியமனங்களும், ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய, மூன்று வருடத்துக் குத் தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத் தில் காரணம் எதும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

**4 : 1 : 3** அரசாங்க சேவையில் "புதிதாகச் சேர்ந்த" அரச உத்தியோகத்தர்கள் யாவரும் அரசாங் கத்தின் அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்துக்காக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் செய் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் தற்போதுள்ள எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அல்லது அரசாங்கத்தின் மொழிக் கொள் கைக்கு பயன் ஏற்படும் வண்ணம் இனி மேல் புகுத்தக்கூடிய சட்டங்களுக்கும் விதி களுக்கும் அமையுமாறு வேண்டப்படுவர்.

**4 : 1 : 3** சகல அரச உத்தியோகத்தர்களும், தமது தகுதிகாண் காலத்தின்போது அரசகரும மொழியில் வேலை செய்யும் அறிவைப் பெற் றுக்கொள்ளும்படி வேண்டப்படுவர்.

**4 : 1 : 4** தகுதிகாண் காலம் நிறைவு எய்திய பின்பு பதவியை உறுதி செய்வது, பிறவற்றுள் நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து முத லாவது வருடத்தினுள் முதலாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் லாவது வருடத்தினுள் முதலாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் இரண்டு வருடத்தினுள் இரண்டாந்தர சிங் கள வினைத்திறன் தேர்வில் சித்தி எது வதிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வரு டத்தினுள் மூன்றும் தரச் சிங்கள வினைத் திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் தங்கி யுள்ளது. ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம், விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப் படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 4 : 1 : 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுள் ஏற்புடைத் தாகும் அத்தகைய காலம் வரையில் செய லில் இருக்கும்.

**4 : 1 : 5** தகுதிகாண் நிலைக்கால முடிவு வரையில் சிங் கள மொழியில் விதிக்கப்பெற்ற வினைத் திறனை அடையாவிட்டால் தாபனக் கோவை யின் 11 ஆம் அத்தியாயத்தின் 12 : 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரயோகமாகும்.

**4 : 1 : 6** சிங்கள மொழி மூலம் சேர்த்துக்கொள்ளப் பட்டவர்கள் மீது 4 : 1 : 3 ஆம் 4 : 1 : 4 ஆம் 4 : 1 : 5 ஆம் பிரிவுகள் பிரயோகிக்கப் படமாட்டா.

**4 : 1 : 7** அரச சேவையின், நிரந்தரமான பதவி யொன்றில் ஏற்கனவே பதவி உறுதி செய் யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவி யொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல் பாகவே தகுதிகாண் நிலையில் இருக்கவேண் டியதில்லை.

**4 : 1 : 8** தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத் திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய் வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்ப தனைச் சோதனை செய்து அறிவதற்கு அவர் கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவ பரிசோதனைக்கு உட் படல் வேண்டும்.

**5. நியமன நியதிகள்**

**5 : 1** அரச சேவையில், நிரந்தரமான பதவிகளிலா யினும் மாதச் சம்பளமுள்ள தற்காலிக பதவிகளிலா யினும் 1.1.72 க்குப் பின்பு நியமனம் பெற்ற அரச உத்தியோகத்தர்கள் (நாட் சம்பளம் கொடுக்கப்படுபவர்கள் நீங்களாக) யாவரும் தமது திரட்டிய வேதனத்தின் 6 சத வீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கம் நிதியாண்டின் இறு தியில் கொடுக்கப்படும் திரட்டு வேதனத்தின் 9 சத வீதத்தைக் கொடுத்துதவும். அத்தகைய பதவியை வகிப் பவர் (அவர் விரும்பினால்) கொடுத்துதவும். அத்தகைய் பதவியை வகிப்பவர் (அவர் விரும்பினால்) அவரது மாதத் திரட்டு வேதனத்திலிருந்து 6 சத வீதம் வரையில் அவரது விருப்பப்படி, சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்த லாம். ஆனால் அத்தகைய உதவு தொகை மீது அரசாங் கம் எந்தவித தொகையும் செலுத்தாது.

**5 : 2** 1971.12.31 க்கு முன்பு அரச சேவையில் ஓய் வூதியமுள்ள நிரந்தரமான பதவிகளை வகித்த அரச உத்தியோகத்தர்கள் 1972.1.1 க்குப் பின்பு அச்சேவையில் உள்ள நிரந்தரமான பதவிகளில் நியமிக்கப்பட்டால் அவர் கள் அவர்களது ஓய்வூதிய உரிமைகளை வைத்திருப்ப தற்கு அனுமதிக்கப்படுவார். அத்தகைய அரச உத்தி யோகத்தர்கள் முன்பு போல விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பணம் செலுத்துதல் வேண்டும்.

**6. யுத்த சேவைச் சலுகை**

**6 : 1** ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண் டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப் படைகளில் சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர் பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள், அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காது

விடின், 1939 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் உள்ள அச் சேவைக் காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1946 ஆம் ஆண்டு ஆகஸ்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன், அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருந்திருத்தல் வேண்டும்.

**7. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்**

7 : 1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

7 : 2 வேட்பாளர்கள், குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

7 : 3 ஒரு வேட்பாளரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய வேட்பாளரைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

7 : 4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப் பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் அதரிவு செய்யப்பட்ட பின்பு அப் பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

7 : 5 விளம்பரத் தேவைகளுக்கு அமைவுபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**8. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை**

8 : 1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும் ; அதிம், பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

---

**இலங்கை விமானப் படை**

**படவரைதல் அறிஞர் பதவி**

**இலங்கை விமானப் படையில் II ம் வகுப்புப் படவரைஞர் பத**விக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுக்கப்படும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 1973 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15 ந் திகதியிலோ அல்லது அதற்கு முன்பாகவோ எனக்கு அனுப்பப்படல் வேண்டும்.

2. சம்பளமுறை

திரட்டிய சம்பளம் : ரூ. 3,576 20×144—ரூ. 6,456

உத்தேசம் : ரூ. 1,380—20×120—ரூ. 3,780

3. வயதெல்லை

25 வயது தொடக்கம் 35 வயது வரை, அரசினர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு இவ்வயதுக்கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது.

4. சேவை நிபந்தனைகள்

பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளமற்றதுமாகும். அரசாங்க சேவை சகாய நிதிக்கு பணம் செலுத்தப்படும்.

5. கல்வியும் மற்றத் தராதரங்களும்

(i) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்தர பரீட்சைகளில் ஆரம்ப கணிதத்துடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது கல்விப் பொதுத் தராதர (சாதாரணப்) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் பாஷைகளுடன் ஆரம்ப கணிதம் உட்பட ஆறு பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத தருணங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ii) இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் ஒரு வருட முழு நேர வகுப்பிலிருந்து படவரைஞர் பயிற்சி நெறியை அல்லது இதற்குச் சமமான வேறு நெறியை சித்தியுடன் பூர்த்தி செய்தவராகவும் அல்லது அரசாங்க சேவையில் ஐந்து வருடங்கள் இயந்திரப் பொறியியல் படவரைதல் அறிஞராக அனுபவம் பெற்றவராகவும் அல்லது நன்மதிப்பு வாய்ந்த இயந்திரப் பொறியியல் நிறுவனத்தில் அல்லது அதிகாரம் பெற்ற பொறியியலாளரிடம் அல்லது அதிகாரம் பெற்ற கட்டடக் கலைஞரிடம் அல்லது அதிகாரம் பெற்ற படவரைதல் கந்தோரில் அல்லது வேலைப்பகுதியில் மூன்று வருடங்கள் வகுப்பிலிருந்து பயிற்றப்பட்ட அனுபவத்துடன் இரண்டு வருடங்கள் இயந்திரப் பொறியியல் படவரைதல் அறிஞராக அனுபவம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—மேல் குறிப்பிட்ட விபரங்களுடன் கீழ்க்குறிக்கப்பட்டிருக்கும் ஒன்று அல்லது அதற்குக் கூடுதலான தராதரங்களுடைய விண்ணப்பதாரிகள் விரும்பப்படுவர் :—

(அ) சாதாரண வடிவமைப்பு வேலைகளிலும், பொறிவிபரங்களையும் தரமாக வெளியுருவப்படங்களை உருவாக்குவதில் அனுபவமும்,

(ஆ) இலங்கை தொழிற் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியில் சித்தி எய்தியும் ஒரு வருடத் தொழிற் பயிற்சியில் பயிற்றப்பட்ட அனுபவமும்,

(இ) இலங்கைத் தொழிற் பயிற்சிக்கல்லூரியின் இயந்திரப் பொறியியல் மாலை பயிற்சியில் தேர்ச்சிப் பேறும்,

(ஈ) பிற நன்மதிப்பு வாய்ந்த பொறியியல் பெறுபேறுகள்.

6. கீழ்க்கண்ட சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புச் சான்றிதழ்,

(ஆ) கூடுதலான கல்வித்திறமையைக் காட்டும் சான்றிதழ்கள்,

(இ) தொழிற்பயிற்சியும் அனுபவத்திற்கும் ஆதாரமான சான்றிதழ்கள்,

(ஈ) அண்மையில் பெற்றுக்கொண்ட இரண்டு நற்சான்றிதழ்கள் (அரசாங்க சேவையிலிருக்கும் அபேட்சகர்கள் நற்சான்றிதழ்கள் அனுப்பத்தேவையில்லை).

7. அரசாங்க சேவையில் நியமனங்கள் பெறுவதற்குரிய சேவைப் பொது நிபந்தனைகளை இவ்வரசாங்க வர்த்தமானியின் இரண்டாம் உட்பிரிவின் ஆரம்பத்திலே பார்த்துக்கொள்க.

ஏ. சிவகுரு,
சிவில் பரிபாலன உத்தியோகத்தரும்,
கணக்காளரும்,
இலங்கை விமானப்படைத் தளபதிக்காக.

தலைமைக்காரியாலயம்,
இலங்கை விமானப்படை,
த. பெ. இல. 594,
கொழும்பு 2,
1973 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 1 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்பத்திரம்

இலங்கை விமானப் படை—படவரைதல் அறிஞர் பதவி

1. முழுப் பெயர் :————.

2. தபால் விலாசம் :—.

(1) வீட்டு விலாசம் :————.

(2) அலுவலக விலாசம் :————.

3. பிறந்த திகதி :————.

4. தேசிய இனம் :————.

5. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ? :————.

6. கல்வித்தகைமைகள் :————.
(சித்தியெய்திய சோதனைகளையும் பாடங்களையும் சித்திகளுடன் குறிப்பிடுக)

7. தொழில் நுட்பக் கல்வித் தராதரங்கள் :————.

8. தொழிற் பயிற்சி, பயிற்சி செய்முறை அனுபவம் ஆகிய வற்றின் விபரங்கள் திகதிளுடன் :————.

9. பள்ளிக்கூடம் விட்ட நாள் தொடங்கிப் பார்த்த தொழில் பற்றிய விபரங்கள் :————.

10. நற்சான்றிதழ்கள் கொடுத்துதவியவர்களின் பெயர்களும் தகுதிகளும் :————.

இவ்விண்ணப்பப் பத்திரத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதியளிக்கிறேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப் படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும் நியமிக்கப் படுவதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்டஈடின்றி விலக்கப்படுவதற்கும் பாத்திரமாவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

9-317—14.09.73 ந திகதிய வர்த்தமானி இல. 77.

---

இல : 11/1/2

வர்த்தகத் திணைக்களம்

உதவி வர்த்தக அதிபதி பதவி

வர்த்தகத் திணைக்களத்திலுள்ள உதவி வர்த்தக அதிபதி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் படிவங்களில் எழுதப்பெற்று செயலாளர், வெளிநாட்டு உள்நாட்டு வியாபார அமைச்சு, த. பெ. இல. 560, கொழும்பு 2 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :—

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள்—1973 ஒக்டோபர் 5 ஆந் திகதி.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—1973 ஒக்டோபர் 12 ஆந் திகதி.

குறிப்பு.—(i) அச்சிட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிட்டதும் 9"×4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். அத்துடன் அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையில் உள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும் ;

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் தபாலில் தவறிவிட்டது அல்லது தாமதித்து விட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவார் ;

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கைப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டிற்கு அண்மையிலுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு வெளிநாட்டு உள்நாட்டு வியாபார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

1. மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணஞ் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—பதவிகள் நிரந்தரமானது. நியமனம் ஏற்பாட்டு நிதிய அடிப்படையிலிருப்பதுடன் மூன்று வருட காலத்துக்கு தகுதிகாண் நிலையிலிருக்கும்.

3. சம்பளங்களும் படிகளும்.—இப் பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—வருடாந்தம் 6,720 ரூபாவிலிருந்து ரூபா 360 கொண்ட 12 வருட ஏற்றங்களாலும், ரூபா 480 கொண்ட 11 வருட ஏற்றங்களாலும், வருடாந்தம் ரூபா 16,320 வரை செல்லும். அத்துடன் ரூபா 11,040 க்கும் ரூபா 14,480 க்கும் முன் திறமைத்தடையும் கொண்டதாகும்.

(1.10.69 க்கு முன்பு உத்தேச அடிப்படைச் சம்பளம் வருடாந்தம் 4,080 ரூபாவிலிருந்து ரூபா 360 கொண்ட 12 வருட ஏற்றங்களாலும் ரூபா 480 கொண்ட 10 வருட ஏற்றங்களாலும் வருடாந்தம் ரூபா 13,200 ரூபா 8,400 க்கும் ரூபா 11,760 க்கும் முன் திறமைத்தடையுண்டு)

குறிப்பு.—(i) நியமனஞ் செய்யப்பட்டவர் மேற்கூறப்பட்ட சம்பள அளவுத் திட்டத்தில் வருடத்திற்கு ரூபா 11,040 க்கு மேல் தொடர்ந்து செல்வதற்கு முன்பு, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில், பொருளியல், நிதி, தொழில் நிருவாகம் அல்லது சர்வதேச வியாபாரம் ஆகியவற்றில் பட்டப் பின்பயிற்சித் தன்மை அல்லது தகுதித் தேர்வுப் பத்திரம் பெறுதல் வேண்டும். அல்லது பயிற்சி நெறி அனுமதிக்கு அடிப்படையான பட்டக் கல்வியை முன் நிபந்தனையாகக் கொண்ட சருவதேச அமைப்புகளால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட சருவதேச நிறுவனங்களால் ஏற்படுத்தப்பட்ட இப்பாடங்களின் மீதிலான சிறப்புத் தேர்ச்சிப் பயிற்சி நெறியை வெற்றிகரமாக முடித்திருத்தல் வேண்டும்.

(ii) ஓர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பொருளியல் அல்லது வர்த்தகத்தில் எம். எஸ். சி. அல்லது பி. எச். டி. பட்டம் பெற்ற அபேட்சகர் இந் நியமனத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் மேற்கூறப்பட்ட சம்பளத் திட்டத்தில் தொடக்கச் சம்பளமாக வருடாந்தம் ரூபா 7,800 க்கு (திரட்டிய) உரித்துடையவராவார்.

4. வெளிநாட்டுச் சேவை.—உத்தியோகத்தர்கள் காலத்துக்குக் காலம் வெளிநாட்டுச் சேவைக்கு அனுப்பப்படலாம். அப்படி வெளிநாட்டுச் சேவைக்கு அனுப்பப்படுமிடத்து அவர்கள் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு சேவைப் படிக்கு உரித்துடையவர்ாவர்.

5. தேவையான தகைமைகள்.—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்கு திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலம் உடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் பொருளியல் அல்லது வர்த்தகத்தில் முதற்றர அல்லது இரண்டாந்தர விசேட தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்ற பட்டதாரியாகவோ அல்லது பொருளியல் அல்லது வர்த்தகம் ஒரு பாடமாகக் கொண்ட முதற்றர அல்லது இரண்டாந்தர விசேட தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்ற பட்டதாரியாகவோ அல்லது

(ii) அங்கீகரிக்கப்பட்ட ஓர் பல்கலைக்கழகத்தின் பொருளியல் அல்லது வர்த்தகத்தில் பி. எச். டி. அல்லது எம். எஸ். சி. பட்டமுடையவராகவோ இருத்தல் வேண்டும்.

(இ) 1973.10.5 இல் 35 வயதுக்குக் கூடியவரல்லாதவராயும் இருத்தல் வேண்டும். (இக் கூடிய வயதெல்லை அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்குப் பொருந்தாது)

6. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாண தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்பட்மாட்டாது)

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு. இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாய் இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்தகமை, தொழில்நுட்பத் தகமைச் சான்றிதழ்கள் அல்லது இரண்டிலொன்று.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(i) சாதனங்களையாயினும் சாதனங்களின் பிரதிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக் கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமப்பிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

7. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவர்களுக்கூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும். எனினும், அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை வெளிநாட்டு உள்நாட்டு வியாபார அமைச்சின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அவ் அறிவித்தல் அவருக்குக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

8. விண்ணப்பமும் சேவை சம்பந்தமான வேறு தொடர்புகளும் செயலாளர், வெளிநாட்டு உள்நாட்டு வியாபார அமைச்சு என முகவரியிட்டு அனுப்பப்படல் வேண்டுமேயன்றி வெளிநாட்டு உள்நாட்டு வியாபார அமைச்சிலுள்ள அல்லது வர்த்தகத் திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்கும் நேராக அனுப்பக் கூடாது.

9. சகல விண்ணப்பங்களும் பெற்றுக்கொண்டமை பற்றி அறிவிக்கப்படும். பெற்றுக்கொண்டமைக்கான அறிவித்தலை கடைசித் திகதியிலிருந்து மூன்று வாரத்திற்குள் பெறாதவர்கள் உடனடியாக, வெளிநாட்டு உள்நாட்டு வியாபார அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பதாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை ஏதும் உடையராகார்.

ஜே.பி. கெலேகம,
செயலாளர்,
வெளிநாட்டு உள்நாட்டு வியாபார அமைச்சு.

வெளிநாட்டு உள்நாட்டு வியாபார அமைச்சு,
த. பெ. இல. 560,
யூனியன் இடம்,
கொழும்பு 2, 1973 செப்டெம்பர் 3.

9-320—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77.

---

## விலைமதிப்புத் திணைக்களம்

பரிசோதகர் பதவிகள் தரம் II

விலைமதிப்புத் திணைக்களத்தில் பரிசோதகர் தரம் II பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரிப் படிவத்தில் அமைந்தனவாய் 1973.10.15 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பளம் வருடமொன்றுக்கு ரூபா 4,152—144—6,456. ரூபா 5,304 பெற முன்னர் வினைத்திறமைகாண் தடையுண்டு.

நியமனம் பெற்றோர் வினைத்திறமைகாண் தடைக்கு மேல், பதவியேற்றப்படுவதற்கு முன்னர் குறிப்பிட்ட பரீட்சைகளில் சித்தியடையும்படி கேட்கப்படுவார்கள்.

3. **பணிக்கமர்த்தும் நியதிகள்.**—பதவிகள் நிரந்தரமானவை ஆனால் இளைப்பாற்றுச் சம்பளமில்லாதது. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் மூன்று வருட காலத்திற்கு சோதனைக்கால நிலையில் நியமிக்கப்படுவர். அரசாங்க சேவை சேமலாப நிதிக்கு உதவு தொகை அளிக்கப்படல் வேண்டும். இளைப்பாற்றுச் சம்பளமுடையதான பதவிகளை ஏற்கெனவே வகித்துவரும் அபேட்சகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர்கள் தமது இளைப்பாற்றுச் சம்பள உரிமையைத் தொடர்ந்து அனுபவிப்பார்கள். அவர்கள் தீவின் எப்பாகத்திலேனும் சேவை செய்யும்படி அழைக்கப்படுவதோடு தேவையான இடங்களுக்கு போக்குவரத்துச் செய்யும்படியும் கேட்கப்படுவார்கள். பிரயாணப்படிகள் பிரமாணங்களின்படி கொடுக்கப்படும்.

4. **தேவையானதகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பகாரரும் அவர்—

(அ) சிறந்த நற்குணமுடையவரும், உடல்நலமுடையவரென்பதற்கும் ;

(ஆ) 1973.10.15 ந் திகதியன்று 18 வயதிற்குக் குறையாததும், 30 வயதிற்கு மேற்படாதரென்பதற்கும் ; (ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ளவர்கள் விடயத்தில் வயதுக்கட்டுப்பாடில்லை) ;

(இ) க. பொ. த. (சாதாரண நிலை) பத்திரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் தோன்றி கணிதத்தில் திறமையுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்தவரென்பதற்கும் அல்லது சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் கணிதத்தில் திறமையுடன் சித்தியடைந்தவரென்பதற்கும் அல்லது ;

(ஈ) கணிதத்தை ஒரு பாடமாக க. பொ. த. (உயர் நிலை) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்து அல்லது க. பொ. த. (சாதாரண நிலை) பரீட்சையில் கணிதத்தில் திறமையுடன் க. பொ. த. (உயர் நிலை) பரீட்சையில் சித்தியடைந்தவரென்பதற்கும் ; அல்லது

(உ) கணிதத்தை ஒரு பாடமாக உயர்ந்த பரீட்சையொன்றில் சித்தியடைந்தவரென்பதற்கும் திருப்திகரமான சான்று அளித்தல் வேண்டும்.

மேற்கூறியவற்றோடு, மேலதிகமாக பின்வரும் தகைமைகள் ஒன்றை உடையவராயிருத்தல் வேண்டும் :—

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் தொடக்கத் தேர்வுப் பரீட்சை ; அல்லது

(ஆ) இலங்கை விவசாயப் பாடசாலையில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை ; அல்லது

(இ) நில அளவையிலும் மட்டம் பார்த்தலிலும் நில அளவையாளர் நாயகத்தின் அனுமதிப்பத்திரம் ; அல்லது

(ஈ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் விலைமதிப்புத் தகுதித் தேர்வுப் பயிற்சியில் அல்லது உயர் தேசிய விலைமதிப்பு தகுதித் தேர்வுப் பயிற்சியில் இரண்டு ஆண்டுகள் திருப்திகரமாகப் பூர்த்திசெய்திருக்க வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள், அவர்களின் விண்ணப்பங்களுடன் பின்வரும் பிரதிகளை இணைக்க வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சைச் சான்றிதழோ உதவி பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குவிதி சட்டக் கோவையின் பொருட்டு வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) ;

(ஆ) ஆகக் கூடுதலான கல்வித் தகைமைச் சான்றிதழ் ;

(இ) கல்வித் தகைமைகள், நியமனத்திற்கு தகுதி, குணம் சம்பந்தமாகச் சமீபத்தில் பெற்ற மூன்று சான்றிதழ்கள். (இப்பிரதிகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது)

6. இந்த வர்த்தமானியின் பகுதி I பிரிவு (IIஅ) ன் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவையின் நியமனங்களுக்கு ஏற்புடையனவான பொது நிபந்தனைகளைக் கவனிக்குமாறு கோரப்படுகின்றனர்.

எல். ஓ. த சில்வா,
பதிற் பிரதம விலைமதிப்பாளர்.

விலைமதிப்புத் திணைக்களம்,
கபூர் கட்டிடம், மூன்றாம் மாடி,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஆகஸ்டு மீ 31 ந் வ.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

*விலைமதிப்புத் திணைக்களத்தின் பரிசோதகர் தரம் II பதவிக்கான விண்ணப்பம்*

**முக்கிய குறிப்பு.**—விண்ணப்பப் படிவத்தைக் கொண்ட உறையின் மேல் பக்க இடது மூலையில் " பரிசோதகர் தரம் II பதவிக்கான விண்ணப்பம் " எனக் குறிப்பிடப்பட்டு பதில் பிரதம விலைமதிப்பாளர், விலைமதிப்புத் திணைக்களம், கபூர் கட்டடம், மூன்றும் மாடி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

1. முழுப் பெயர் (தெளிவான எழுத்துக்களில்) : ———.

2. முகவரி : ————.
(முகவரியில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால் உடனே அறிவிக்க வேண்டும்)

3. (அ) பிறந்த திகதி : —
(பிறப்புச் சான்றிதழ் பிரதி இணைக்கப்பட வேண்டும்)
ஆண்டு :————. மாதம் :————. நாட்கள் :————.
(ஆ) 1973.10.15 ந் திகதியன்று சரியான வயது :—
ஆண்டு :———. மாதம் :————. நாட்கள் :————.
(இ) பிறப்பிடம் :————.

4. வம்சாவழியாலா அல்லது பதிவு மூலமா நீர் இலங்கைப் பிரசை :—
(பதிவு மூலமாகவெனில் விபரம் தருக)

5. விவாகமானவரா, விவாகமாகாதவரா, விதவையா அல்லது தார மிழந்தவரா ? : ————.

6. பாடசாலைக் கல்வி, உயர்தொழில், தொழில்நுட்பக் கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)

7. பின்வரும் பாடங்களின் சித்தியெய்திய ஆகக் கூடிய பரீட்சை :—
(1) சிங்களம் : ————.
(2) தமிழ் : ————.
(3) ஆங்கிலம் : ————.

8. 12 வயதிற்குப் பின்னர் நீர் கல்விகற்ற பாடசாலைகள், கல்லூரிகள் ஏனைய நிறுவனங்கள் :—

| | பொதுக் கல்வி—பாடசாலை கல்லூரி | | உயர் தொழில், தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் | |
|---|---|---|---|---|
| | தொடக்கம் | வரை | தொடக்கம் | வரை |
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |

9. விளையாட்டு பற்றிய விவரங்களும் பாடசாலையில் அல்லது கல்லூரியில் பங்குபற்றிய விசேட நிகழ்ச்சிகளும் : ————.

10. பாடசாலையிலிருந்து விலகிய காலம் தொடக்கம் செய்த தொழிலும்/அல்லது பயிற்சியும் : ————.

11. அரசாங்கத் திணைக்களமெதனிலும் அல்லது அரசாங்கக் கூட்டுத் தாபனமெதிலும் பணியாற்றினுல் அதனின்றும் நீக்கப்பட்டதற்குரிய காரணம் :————.

12. சட்ட நீதிமன்றத்தில் குற்றவியல் தவறிற்காக எப்போதாவது குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ? அவ்விதமெனில் குற்றத்தையும், தண்டனையையும் குறிப்பிடுக : ————.

13. குறிப்பிடவேண்டிய பிற தகவல்கள் : ————.

14. நற்சான்றிதழ்கள் பெற்றுக்கொண்டவர்களின் பெயர்களும், பதவிகளும், முகவரிகளும் : ————.

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னுல் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை, சரியற்றவை என்று தெரிவு செய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனுக்கப்படுவேன் என்றும் நியமனம் பெற்ற பிற்பாடு சரியற்றவை என்று கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி பதவியால் நீக்கப்படுவேன் என்றும் நான் அறிந்திருக்கிறேன்.

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி : ————.

விண்ணப்பக்காரர் அரசாங்க சேவையிலிருப்பின் அத்திணைக்களத் தலைவரின் அறிக்கை.

————,
திணைக்களத் தலைவரது கையொப்பம்.

திகதி :————.

9–267—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77

---

### கல்வி அமைச்சு

*தத்துவம் பெற்ற கட்டடக் கலைஞர் பதவி*

கல்வி அமைச்சின் கீழுள்ள கல்வித் தேவைக் கட்டட ஆராய்ச்சி நிலையத்தில் நிலவும் கட்டடக் கலைஞர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் படிவ முறையில் தயாரிக்கப்பட்டு " செயலாளர் (பொது நிர்வாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு " என்ற முகவரிக்குப் பதிவஞ்சல் மூலம் கீழே கொடுபட்டுள்ள திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் " கட்டடக் கலைஞர் பதவி " எனத் தெளிவாக அடையாளமிடப்பட வேண்டும் :—

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 15.10.1973 ;

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 01.11.1973.

**குறிப்புகள்**

(i) விதிக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கமையத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் ;

(ii) விண்ணப்பம் ஒன்றேனும் அத்தகைய விண்ணப்பம் பற்றிய கடுதமேனும் அஞ்சலில் காணுமற்போனது அல்லது தவறிவிட்டது என்னும் குற்றச்சாட்டு எதுவும் சீர்தூக்கப்படமாட்டாது. கடைசி நாள்வரை தமது விண்ணப்பங்களைத் தாமதிக்கும் அபேட்சகர்கள் தாமே தமக்கு இடைஞ்சலைத் தேடுபவராவர் ;

(iii) கடல் கடந்த நாடுகளிலிருந்து விண்ணப்பிக்கும் அபேட்சகர்கள், விரும்பினுல் தமது விண்ணப்பங்களை கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கும் பொருட்டு தாம் வதியும் நாட்டின் அல்லது அண்மையிலுள்ள நாட்டின் இலங்கைக் குடியரசுப் பிரதிநிதியின் அலுவலகத்துக்கு, விதிக்கப்பட்ட திகதிக்குள் அனுப்பி வைக்கலாம் ;

(iv) **மருத்துவ சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கைக் குடியரசு அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்படும் இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாய் இருக்கின்ருர்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்.**—(அ) இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—

ரூ. 7,800–360/9—480/11—ரூ. 16,320

ரூ. 9,600 ரூ.12,000 ரூ. 14,400 ஆகிய படிகள் பெறமுன் வினைத்திறமைகாண் தடைகள் உண்டு.

(ஆ) பிரித்தானிய கட்டடக் கலைஞர் வேத்தியல் நிலைய அல்லது அவுஸ்திரேலிய கட்டடக் கலைஞர் வேத்தியல் நிலைய உறுப்பினர் தகைமை பெற்று 5 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் திரட்டிய சம்பளத்தில் 5 வருடாந்த உயர்ச்சிகளுடனுன சம்பளப் படியில் நியமிக்கப்படுதற்கு உரித்துடையவராவர்.

(இ) வருடாந்தம் ரூ. 9,600 ஆன சம்பளப் படிக்கு மேல் செல்தற்கு ஓர் உத்தியோகத்தர் பிரித்தானிய கட்டடக் கலைஞர் வேத்தியல் நிலைய அல்லது அவுஸ்திரேலிய கட்டடக் கலைஞர் வேத்தியல் நிலைய உறுப்பினர் தகைமையைப் பெற வேண்டும்.

**குறிப்பு.**—1.10.69 க்கு முன்னரான ஒத்த வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் ரூ. 5,160–9/360–10/980 ரூ. 13,200 ஆகும்.

3. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**

(i) இப்பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்படும் அபேட்சகர், அரசாங்கத்தின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடைய பதவியை ஏற்கனவே வகிக்காவிடின் அரசாங்க சேவைச் சேமலாப நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர், நியமனத் திகதியின் போது அரசாங்கத்தின் கீழ் அல்லது உள்ளூராட்சிச் சபையின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடைய பதவி ஒன்றினை வகிப்பவராயின் அவர் தொடர்ந்து உபகாரச் சம்பள உரித்தந்தஸ்தை அனுபவிப்பார். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் அரசாங்க சேவையில் ஏற்கனவே இல்லாவிடின், முதற்கண் 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவார். நிரந்தரமானதும் உபகாரச்

சம்பள உரித்துடையதுமான பதவி ஒன்றினை வகிக்கும் ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து ஒரு வருட காலத்துக்குப் பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார்.

(ii) நியமதாரியைத் தொடர்ந்து சேவையில் வைத்திருத்தற்கு அவர் தகுதியற்றவரெனத் தகுதிகாண் காலத்தில காணப்படுமிடத்து அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை அவர் வகித்திருப்பின், அவர் அவருடைய நிலையான பதவிக்கு தகுதிகாண் காலத்தில் எந்நேரத்திலேனும் அக்கால முடிவிலேனும் திருப்பி அனுப்பப்படுவார். நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான பதவி ஒன்றினை அவர் வகித்திராவிடின் அவருடைய சேவை நிறுத்தப்படும்.

(iii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர், அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை, குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்தற்பொருட்டு ஏற்கனவே ஆக்கப்பட்டுள்ளவையும் இனி மேல் ஆக்கப்படக் கூடியனவையுமான விதிகளுக்கு அமைய வேண்டும்.

4. **கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்.**—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்பவராகத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 22 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசாங்கத்தின் கீழ் நிரந்தர நியமனங்களை வகிப்பவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது) ;

(ii) சிறந்த ஒழுக்கமும் தேகாரோக்கியமும் உடையராய் இருக்க வேண்டும் ;

(iii) கல்வித் தகைமைகளும் உயர்தொழில் தகைமைகளும் ;

(i) பிரித்தானிய கட்டடக்கலைஞர் வேத்தியல் நிலைய உறுப்பினர் தகைமை : **அல்லது**
அவுஸ்திரேலிய கட்டடக் கலைஞர் வேத்தியல் நிலைய உறுப்பினர் தகைமை : **அல்லது**

பிரித்தானிய கட்டக் கலைஞர் வேத்தியல் அல்லது அவுஸ்திரேலிய கட்டடக் கலைஞர் வேத்தியல் நிலைய இறுதிப் பரீட்சையின் I ஆம், II ஆம் பகுதிகளில் சித்தி ;

(ii) விதிக்கப்பட்டுள்ள தகைமையைப் பெற்றபின் 5 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**மேலதிகத் தகைமைகள்.**—பாடசாலைக் கட்டடங்களைத் திட்டமிடலில் அல்லது பாடசாலைக் கட்டட ஆராய்ச்சி வேலையில் அனுபவம் பெற்றுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

5. அரசினர் சேவையிலுள்ள, தகைமையுடைய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். 1 ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின்னர் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. எனினும், விதிக்கப்படும் திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் அவை விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பகுதித் தலைவரால் பெற்றுக்கொள்ளப்பட்டனவென்றும், நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறும் அவர் சிபார்சு செய்யுமிடத்து அவை ஏற்றுக்கொள்ளப்படும். எனினும், ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பத்தின் ஒரு பிரதியை விதிக்கப்படும் திகதிக்கு முன் இவ்வமைச்சுக்கு நேரே அனுப்ப வேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாத்தனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு.—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) கல்வித் தராதரப் பத்திரங்கள் ;

(இ) உயர்தொழில்/தொழில்நுட்பத் தராதரப் பத்திரங்கள் ;

(ஈ) விண்ணப்பதாரியின் தன்மைகள், ஒழுக்கம், இப்பதவிக்கு நியமிக்கப்படுதற்கான அவருடைய தகுதி ஆகியவற்றைக் குறிப்பிடும் மூன்று சமீபகால நற்சாட்சிப் பத்திரங்கள் (அரசினரின் கீழ் ஏற்கனவே சேவையிலுள்ளவர்களைப் பொறுத்தளவில் இவை சமர்ப்பிக்கப்பட வேண்டியதில்லை).

7. விண்ணப்பங்களும் ஏனைய உரிய சாதனங்களேனும் கடிதங்களேனும் இவ்வமைச்சின் செயலாளரின் உத்தியோக விலாசத்துக்கே அனுப்பப்பட வேண்டும் ; எக்காரணத்தையிட்டும் அவைகள் எவ்வுத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படலாகா.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. சகல விண்ணப்பங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக்கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத் தவறும் விண்ணப்பதாரிகள், கல்வி அமைச்சின் செயலாளருக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுவதற்கான உரித்தை இழப்பார்.

பீ. உடகம,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

தொடரெண் : பொ. நி/22/230,
பொது நிர்வாகக் கிளை,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1973 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 04 ந் வ.

**விண்ணப்ப மாதிரிப் படிவம்**

($8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$ அளவு அரைத்தாள்களில் தயாரிக்கப்பட்ட வேண்டியது)

**கல்வி அமைச்சின் கீழுள்ள கல்வித் தேவைக் கட்டட ஆராய்ச்சி நிலையத்திலுள்ள கட்டடக் கலைஞர் பதவி**

1. பெயர் (முதலெழுத்துகளுடன்) : திரு./திருமதி/செல்வி : ————

2. முழுப்பெயர் : ————.

3. உத்தியோக முகவரி : ————.

4. சொந்த முகவரி : ————.

5. (அ) இலங்கையரா ? : ————.
(ஆ) அங்ஙனமாயின், வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா ? : ————.

6. பிறந்த திகதி :—
வருடம் :————. மாதம் :————. நாள் :————.

7. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்றுள்ளபடி சரியான வயது :—
வருடம் :————. மாதம் :————. நாள் :————.

8. தற்போதைய பதவி பற்றிய விபரங்கள் :—
(அ) பதவி : ————.
(ஆ) நிரந்தரமா தற்காலிகமா ? : ————.
(இ) உபகாரச் சம்பள உரித்துடையதா, அற்றதா ? ————
(ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறீரா ? : ————.
(உ) திணைக்களம் : ————.
(ஊ) நிலையம்/வேலை இடம் : ————.
(எ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் : ————.
(ஏ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டத்திலான தற்போதைய படி : ————.

9. கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள் :—

| பரீட்சை | வருடம் | பாடங்கள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

10. உயர்தொழில்/தொழில்நுட்பத் தகைமைகள் பற்றிய விபரங்கள் :—

| தராதரப் பத்திரம் | வழங்கிய நிலையம் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

11. பொதுக் கல்வி கற்ற நிலையங்கள் :—

| நிலையம் | வகுப்பு | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |

12. தொழில்நுட்ப/உயர்தொழில் கல்வி கற்ற நிலையங்கள் :—

| நிலையம் | பின்பற்றிய பயிற்சிநெறி | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

13. முன்னைய நியமனங்கள் (காலவரன் ஒழுங்கில் சுருக்கமாகக் கொடுபடவேண்டியது) :—

| திணைக்களம் | நிலையம/ வேலை இடம் | பதவி | நிரந்தரமா தற்காலிகமா | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |
| 5. | | | | | |
| 6. | | | | | |

14. மேலதிக தகைமைகள் பற்றிய விபரங்கள் :—

| வேலைக்கமர்த்தப்பட்டுள்ள நிலையம் | வேலையின் தன்மை | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| | | | |

15. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக யாதேனும் குற்றத்தீர்ப்பு உம்மீது அளிக்கப்பட்டதா ? :————
(அங்ஙனமாயின் விபரங்களைக் கொடுக்கவும்)

16. விண்ணப்பதாரி அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டவரா ? : ————.
(அங்ஙனமாயின் விபரங்கள் கொடுக்கவும்)

17. விண்ணப்பதாரி பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு ? : ————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன் இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்டஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :————.

9–316—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77

---

**கல்வி அமைச்சு**

இலங்கைக் கல்விச் சேவையின் I ஆம் வகுப்பிலுள்ள பதவிகள்

கல்வி அமைச்சின் கீழுள்ள இலங்கைக் கல்விச் சேவையின் I ஆம் வகுப்பிலுள்ள பதவிகளுக்கு இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

I ஆம் வகுப்பின் கீழ் அடங்கும் பதவிகள் பின்வருவனவாகும் :—

(அ) கல்விப் பணிப்பாளர், I ஆம் தரம் ;

(ஆ) பரீட்சை ஆணையாளர் ;

(இ) ஆணையாளர், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

விண்ணப்பங்கள், கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட்டு " செயலாளர், கல்வி அமைச்சு (கல்விச் சேவைக் கூறு, பொது நிர்வாகக் கிளை), மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற முகவரிக்கு 06.10.1973 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் " இலங்கைக் கல்விச் சேவையின் I ஆம் வகுப்பிலுள்ள பதவிகள் " எனத் தெளிவாக அடையாளமிடப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—(i) இப்பதவிகள் நிரந்தரமானவை. தெரிவுசெய்யப்படும் அபேட்சகர்கள். அரச சேவையில் உபகாரச் சம்பள உரித்துடைய பதவி ஒன்றினை எற்கனவே வகிக்காவிடின் அரசாங்க சேவை சேமலாப நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் அரச சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் உபகாரச் சம்பள உரித்துடைய பதவிகளை எற்கனவே வகிப்பவர்களாயின் அவர்கள் தொடர்ந்து உபகாரச் சம்பள உரிமைகளை அனுபவிப்பர். நியமதாரிகள் அரச சேவைக்கு புதிய முறைப்படி நியமிக்கப்படுபவர்களாயின் அவர்கள் முதற்கண் மூன்று வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவார்கள். சேவையிலுள்ள நிரந்தர, உபகாரச் சம்பள உரித்துடைய உத்தியோகத்தர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் ஒரு வருட காலத்துக்குப் பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார்:

(ii) ஒரு பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர் ஒவ்வொருவரும் நியமனத் திகதியிலிருந்து முறையே மூன்று வருட காலத்துக்குள்ளும் ஐந்து வருட காலத்துக்குள்ளும் முதலாவது வினைத்திறமைகாண் இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளில் சித்தியடைய வேண்டும். வினைத்திறமைகாண் தடைகளை விதிக்கப்பட்ட காலத்துள் பூர்த்தி செய்யத் தவறுமிடத்து வேதன எற்றம் பிற்போடப்படும். அனுமதிக்கப்பட்ட காலத்துக்கு மேலதிகமாக எடுக்கப்படும் காலம் வேதன எற்றம் பிற்போடப்பட்ட காலமாகக் கருதப்படும். உத்தியோகத்தர்கள், வினைத்திறமைகாண் தடைகளைப் பூர்த்திசெய்யும் வரை, உயர் பதவிகளுக்கு விண்ணப்பித்தற்கும் உரித்திலராவர்.

**முதலாவது வினைத்திறமைகாண் தடை.**—பின்வருவனவற்றிலான ஒரு பரீட்சையைக் கொண்டதாகும் :—

(அ) அரசாங்க சேவை ஆணைக்குழு விதிகளும் அரசாங்கப் பிரமாணங்களும் ;

(ஆ) கணக்கீட்டு முறை ;

(இ) கல்விச் சட்டம், நிர்வாகம், மேற்பார்வை ;

(ஈ) இரண்டாவது மொழி.

**இரண்டாவது வினைத்திறமைகாண் தடை.**—இரண்டாவது வினைத்திறமைகாண் தடையைப் பூர்த்திசெய்யும் பொருட்டு உத்தியோகத்தர்கள் ஓர் உயர்தொழில் தகைமையையேனும் கல்வியிலான ஒரு பட்டப்பின் தகைமையையேனும் பெற வேண்டும். இது, அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் கல்வித் தகுதித் தேர்வுச் சான்றிதழ் அல்லது சமமான தகைமை அல்லது கல்வியிலான கலை முதுமாணிப் பட்டம் அல்லது கலாநிதிப் பட்டமாக அமையும். கல்வியில் கல்விமாணிப் பட்டம் (க. க.) பெற்றுள்ளவர்கள் உயர் தொழில் தகைமையையேனும் கல்வியிலான பட்டப்பின் தகைமையையேனும் பெறுவதிலிருந்து விலக்களிக்கப்படுவார்கள்.

**குறிப்பு.**—இலங்கைக் கல்விச் சேவை விளக்கப் பிரமாணத்தின் 14 ஆம் பந்திக்கமைய இச்சேவைக்குள் அடக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கு, வினைத்திறமைகாண் தடைத் தேவைகளைப் பூர்த்தி செய்தற்கு (இலங்கைக் கல்விச் சேவை நடைமுறைக்கு வந்த திகதியான) 15.10.71 இலிருந்து 5 வருடங்கள் வழங்கப்படும். எனினும், அத்திகதியிலிருந்து 5 வருடங்களுக்குள் வினைத்திறமைகாண் தேவைகளைத் திருப்திகரமாகப் பூர்த்திசெய்ய வேண்டுமென்ற நிபந்தனைக்கமைய இவ்வைந்து வருட காலத்துக்குள் பதவி உயர்ச்சி பெறுதற்கு அவர்கள் உரித்துடையராவர். அத்தகைய நிபந்தனைக்கமையப் பதவி உயர்ச்சி பெற்றுள்ள (இலங்கைக் கல்விச் சேவையின் I ஆம் வகுப்பு உத்தியோகத்தர்கள் தவிர்ந்த) எவ்வுத்தியோகத்தரினதும் வேதன எற்றம், விதிக்கப்பட்ட காலத்துக்குள் அவர் வினைத்திறமைகாண் தேவைகளைப் பூர்த்திசெய்யத் தவறினால் பிற்போடப்படும். நிபந்தனையின் பெயரில் I ஆம் வகுப்புப் பதவி உயர்ச்சி பெறும் உத்தியோகத்தர்களைப் பொறுத்தளவில், வினைத்திறமைகாண் தேவைகளைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்யும் வரை I ஆம் வகுப்புக்கான அளவுத் திட்டத்தின்

ஆரம்பப்படியில் தேக்கமுற நேரும். (15.10.76 க்குப் பின் நிபந்தனைக்கமையும் பதவி உயர்ச்சிகள் எதுவும் வழங்கப் படமாட்டா.)

3. **வேதனமும் படிகளும்.**—இப்பதவிகளுக்குரிய திரட்டிய வருடாந்த வேதன அளவுத் திட்டம் பின்வருமாறு :— ரூ. 18,840—2/600—20,040 ; மேலே II ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள வினைத்திறமைகாண் தேவைகளைப் பூர்த்தி செய்தற்கமைய.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவராகத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த ஒழுக்கமும் உடல்நலமும் உடையவராய் இருக்க வேண்டும் ;

(ஆ) பட்டப்பின் பட்டமேனும் தகுதித் தேர்வுச் சான்றிதழேனும் சமமான தகைமையேனும் பெற்றிருக்க வேண்டும் ;

(இ) (i) இலங்கைக் கல்விச் சேவையின் II ஆம் வகுப்பில் குறைந்த பட்சம் ஒரு வருட திருப்திகரமான சேவை பூர்த்திசெய் திருப்பதுடன் தனது பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் ; அல்லது

(ii) கல்வி அமைச்சில் அல்லது கல்வி அமைச்சினைச் சார்ந்த எத் திணைக்களத்திலேனும் எந் நிறுவனத்திலேனும் (உதாரணமாக பல்கலைக் கழகங்கள், பல்தொழில்நுட்ப நிறுவனங்கள், ஆசிரியர் கலாசாலைகள் போன்றவற்றில்) வருடாந்தம் ரூ. 17,640 க்குக் குறையாத உச்ச நிலையுடைய வேதன அளவு சார்ந்த பதவி ஒன்றினை வகிப்பவராகவும் அப்பதவியில் உறுதிப்படுத்தப்பட்டவராகவும் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று வருடாந்தம் ரூ. 14,880 க்குக் குறையாத வேதனம் பெறுபவராகவும் இருக்க வேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு.—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) ;

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது கல்வித் தராதரப் பத்திரம்;

(இ) குணச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர் கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும் ;

(ஈ) உயர்தொழில் தகைமைய அல்லது தொழில்நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

குறிப்பு.—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தத்தம் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின் பெற்றுக்கொள்ளப்படும் அத்தகைய விண்ணப்பம் எதுவும், அது விதிக்கப்பட்ட திகதிக்கு முன் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரால் பெற்றுக்கொள்ளப்பட்டு தாமதத்துக்குத் தகுந்த காரணங்களைக் காட்டி அதனை ஏற்றுக்கொள்ளுமாறு அவர் சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. விண்ணப்பமேனும் அது சம்பந்தமான வேறு எக்கடிதமேனும் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டுமேயன்றி இவ்வமைச்சிலுள்ள எந்த உத்தியோகத்தரின் சொந்த முகவரிக்கு அனுப்பப்படலாகாது.

8. அரச சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையும் இவ்வர்த்தமானியின் முற் பகுதியில் I ஆம் பகுதி II ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையுமான பொது நிபந்தனைகளுக்கும் 12.10.1971 ஆந் திகதிய 14,979/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுமான இலங்கைக் கல்விச் சேவை விளக்கப் பிரமாணத்துக்கும் கவனம் கோரப்படுகிறது.

9. விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும்.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

தொடரெண் : பொ. நி/25/369,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1973 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 05 ந் வ.

**விண்ணப்ப மாதிரிப் படிவம்**

(8" × 13½" அளவு வைத்தாள்களில் தயாரிக்கப்பட வேண்டியது)

இலங்கைக் கல்விச் சேவையின் I ஆம் வகுப்பிலுள்ள பதவிகள்

1. பெயர் (முதலெழுத்துகளுடன்) : திரு./திருமதி/செல்வி : ————
2. முழுப்பெயர் : ————.
3. உத்தியோக முகவரி : ————.
4. சொந்த முகவரி : ————.
5. (அ) இலங்கையரா ? : ————.
   (ஆ) அங்ஙனமாயின், வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா ? : ————.
6. பிறந்த திகதி :—
   வருடம் :————. மாதம் :————. நாள் :————.
7. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்றுள்ள படி சரியான வயது :—
   வருடம் :————. மாதம் :————. நாள் :————
8. தற்போதைய பதவி பற்றிய விபரங்கள் :—
   (அ) பதவி : ————.
   (ஆ) நிரந்தரமா தற்காலிகமா? : ————.
   (இ) உபகாரச் சம்பள உரித்துடையதா அற்றதா? : ————.
   (ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறீரா? : ————.
   (உ) திணைக்களம் : ————.
   (ஊ) நிலையம்/வேலை இடம் : ————.
   (எ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் : ————
   (ஏ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டத்திலான தற்போதைய படி : ————.
9. கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள் : (சிங்களத் தேர்ச்சி/தமிழ் மொழிச் சான்றிதழ்கள் உட்பட)

| | பரீட்சை | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

10. உயர்தொழில் தகைமைகள் பற்றிய விபரங்கள் :—

| | தராதரப் பத்திரம் | வழங்கியவர் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |

11. பொதுக் கல்வி கற்ற நிலையங்கள் :—

| | நிலையம் | வகுப்பு | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |
| 6. | | | | |
| 7. | | | | |

12. உயர்தொழில் கல்வி கற்ற நிலையங்கள் :—

| | நிலையம் | பின்பற்றிய பயிற்சி நெறி | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |

13. முன்னைய நியமனங்கள் (காலவரன் ஒழுங்கில சுருக்கமாகக் கொடுபடவேண்டியது) :—

| திணைக்களம் | நிலையம்/ வேலை இடம் | பதவி | நிரந்தரமா தற்காலிகமா ? | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |
| 5. | | | | | |
| 6. | | | | | |

14. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக யாதேனும் குற்றத்தீர்ப்பு உம்மீது அளிக்கப்பட்டதா ? :————.
(அங்ஙனமாயின், விபரங்களைக் கொடுக்கவும்)

15. விண்ணப்பதாரி அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டவரா ? : ————.
(அங்ஙனமாயின், விபரங்கள் கொடுக்கவும்)

16. விண்ணப்பதாரி பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு ? : ————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவுசெய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்டஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

9–369—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77

---

**விவசாயத் திணைக்களம்**

செகராஜசிங்கம் உபகாரவேதனம்—இலங்கை விவசாயப் பாடசாலை

**விவசாய " டிப்ளோமா " பயிற்சி 1974–1975**

யாழ்ப்பாண குடாநாட்டைச்சேர்ந்த ரூபா 1,000/- க்கு குறைவான வருட வருமானமுள்ள விவசாயியின் மகன்மாரிடமிருந்து செகராஜசிங்கம் உபகார வேதனத்தில் இலங்கை விவசாயப்பாடசாலை, குண்டாசாலையில் இரண்டாண்டு விவசாய " டிப்ளோமா" பயிற்சி பெறுவதற்காய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஒருவர் மட்டுமே இப்பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுவர்.

இந்த உபகார வேதனத்தை பெறவிரும்புபவர்கள் 1973 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13ம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியவாறு தமது விண்ணப்பத்தை அதிபர், இலங்கை விவசாயப் பாடசாலை, குண்டசாலை என்ற விலாசத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். அவ் விண்ணப்பத்துடன் விண்ணப்பதாரி ரூபா 1,000 க்கு குறைவான வருட வருமானமுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டைச்சேர்ந்த விவசாயியின் மகன் என்பதை உறுதிப்படுத்தும் அவ்வப்பகுதி காரியதிகாரியின் அத்தாட்சிப்பத்திரம் இணைத்தல் வேண்டும்.

1. இரண்டாண்டு விவசாய "டிப்ளோமா" பயிற்சி இரு பகுதிகளைக் கொண்டது. **முதற்பகுதி—முதலாம் வருடம்**—விவசாய இரசாயனவியல், விவசாயத் தாவரவியல், விவசாயப் பொருளாதாரமும் வெளிக்களப்பரிசோதனைகளும், கமப்பொறியியல் 1, பயிர்வேளாண்மை 1, மிருகபரிபால்னம் 1, பூங்கனியியல் 1, பண்ணைக்கைவேலை 1. **இரண்டாம் பகுதி–இரண்டாம் வருடம்**— பயிர்பாதுகாப்பு, பண்ணைமுகாமை, விசாலிப்புக் கல்வி, கமப்பொறியியல் 2, பயிர் வேளாண்மை 2, மிருகபரிபாலனம் 2, பூங்கனியியல் 2, பண்ணைக்கைவேலை 2.

2. விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகள் உடையோராக இருத்தல் வேண்டும் :—

**வயது.**—1974ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி 17 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**கல்வி முன்னடியான தேவைகள்.**—விண்ணப்பதாரிகள் கமத்தொழிற்சாதனுபயிற்சிப் பாடசாலை பயிற்சிபெற்றவர்கள் உட்பட கீழ்வரும் தகைமைகள் உடையோராக இருத்தல் வேண்டும் :—

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணப்) பரீட்சையில் (1) சிங்களம் அல்லது தமிழ் பாஷை (அ அல்லது ஆ பாடத்திட்டம்) (2) தூயகணிதம்/எண்கணிதம் (3) இரசாயனம் (4) உயிரியல் அல்லது தாவரவியல் அல்லது விலங்கியல் உட்பட ஆறு (6) பாடங்களில் சித்திடைந்தவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) ஒரே முறையில் குறைந்தது ஐந்து (5) பாடங்களில் க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் சித்தி, அந்த ஐந்து (5) பாடங்களில் பாஷை அல்லது தூயகணிதம்/எண்ணிதம் அப்படிப்பெறப்பட்ட பாடங்கள் ஐந்தில் (5) ஒன்றுக இருத்தல் வேண்டும். (2 (அ) வைப் பார்வையிடுக).

(இ) க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் அல்லது அதை ஒத்த அல்லது உயர் பரீட்சையில் கீழ்வரும் பாடங்கள் இரண்டில் திறமைச்சித்தி—விவசாயம், உயிரியல் அல்லது தாவரவியல் அல்லது விலங்கியல், பௌதிகவியல், தூயகணிதம், இரசாயனவியல், புவியியல்.

3. இலங்கை விவசாயப் பாடசாலையில் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் போதனைகள் அளிக்கப்படும். மனுத்தார் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் போதனை பெறக்கூடியவராகவும், பரீட்சைக்கு தோற்றக்கூடிய தகுதி உடையவராகவும் இருத்தல் வேண்டும். இப்பாடசாலை குண்டசாலையில் அமைந்துள்ளது. மாணவர்கள் பாடசாலை விடுதியில் முழுப்பயிற்சிக்காலமும் கட்டாயமாக வதிதல் வேண்டும்.

4. இலங்கை விவசாயப் பாடசாலையில் கொடுக்கும் இந்த விவசாய "டிப்ளோமா" பயிற்சி ஒரு தொழில் முறைப் பயிற்சியாகும். எனவே இப்பயிற்சியை முடித்தபின் விவசாயத்தை அப்பியாசம் செய்யவிரும்பும் மாணவர்களுக்கும், தனியார் துறையில் வேலையைப்பெறவிரும்பும் மாணவர்களுக்குமே உத்தேசிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசு இப்பயிற்சியில் சித்தியடைவோருக்கு இலங்கை விவசாயசேவையின் கீழ் உத்தியோகம் பெற வாய்ப்பு உண்டென்றோ அல்லது உத்தியோகம் கொடுக்குமென்றோ உத்தரவாதம் கொடுக்கவில்லை என்பதை மனுச்செய்வோர் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

5. 2ம் பந்தியில் குறிப்பிட்ட தேவைகள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் கிடைத்தமை உறுதிப்படுத்தப்படமாட்டாது.

**குறிப்பு.**— விண்ணப்பதாரி நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் கீழ்வரும் பத்திரங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

1. பிறப்புச்சாட்சிப்பத்திரம்.
2. கல்வித் தராதரப் பத்திரங்கள் (2ம் பந்தியைப்பார்க்க)
3. கடைசியாக கல்விகற்ற பாடசாலை அதிபரிடமிருந்து பெற்ற பத்திரம்.
4. விண்ணப்பத்தில் குறிப்பிட்ட இருவரிடமிருந்து பெற்ற பத்திரம்.

இ. அபயரத்ன.
பிரதி விவசாயப்பணிப்பாளர்.
(விசாலிப்பு)

விவசாயத்திணைக்களம்,
பேராதனை,
1.9.73

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

செகராஜசிங்கம் உபகாரவேதனம்—இலங்கை விவசாயப் பாடசாலை

**விவசாய " டிப்ளோமா " பயிற்சி 1974–1975**

1. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் :————————.
(தெளிவான எழுத்தில்)

2. இதர பெயர்கள் :————.

3. தபால் விலாசம் மாவட்டம் உட்பட :————.

4. பிறந்த திகதி :— திகதி :———. மாதம் :——. வருடம் :——
வயது 1.1.1974 ல்:— வருடங்கள்:— மாதங்கள்:— நாட்கள்:—

5. விண்ணப்பதாரி பயிற்சியைப் பின்பற்ற இருக்கும் மொழி :——

6. கடைசியாக எடுத்த பொதுப்பரீட்சை :————.
பரீட்சையின் பெயர் :————.
திகதி :————.

7. (அ) ஐந்து (5) அல்லது அதற்கு மேற்பட்ட க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்கள் :—

| | பாடம் | தரம் | வருடம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |
| 8. | | | |

(ஆ) 7 (அ) வில் கொடுக்கப்பட்ட பாடங்கள் தவிர்ந்த, விண்ணப்பதாரி க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்கள் :—

| | பாடம் | தரம் | வருடம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |

(இ) விண்ணப்பதாரி க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் அல்லது ஒத்த அல்லது உயர் பரீட்சையில் பெற்ற திறமைச்சித்திகள் :—

| | பரீட்சை | பாடம் | தரம் | வருடம் |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |

(ஈ) வேறு தகைமைகள் :————.

8. பெற்றார் அல்லது பாதுகாவலரின் பெயரும் விலாசமும் :————.

9. பெற்றார் அல்லது பாதுகாவலரின் தொழில் :————.

10. விண்ணப்பதாரி பயிற்சிக்குப்பின் விவசாயத்தை கைக்கொள்ள நாடினால் அவருக்குள்ளவழிவகைகள் :————.

11. இலங்கை விவசாயப்பாடசாலையில் பயிற்சிபெற விண்ணப்பதாரி தகுதியானவர் என்பதை உறுதிப்படுத்தும் இருவரின் பெயரும் விலாசமும் :————.

1.

2.

தரப்பட்ட விபரங்கள் உண்மையானவை என்பதை நான் வெளிப்படுத்துகின்றேன். இதில் தரப்பட்ட விபரங்கள் பிழையாகவோ அல்லது தவறுகவோ இருப்பது தெரிவிற்கு முன் காணப்பட்டால் நான் தகுதி இழப்பேன் என்றும், தெரிவிற்குப்பின் காணப்பட்டால் எதுவித நஷ்ட ஈடும் இன்றி நீக்கப்படக்கூடியவன் என்றும் நான் அறிவேன் என்று வெளிப்படுத்துகின்றேன்.

.......................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :......................

9–261—14.09.73 ந திகதிய வர்த்தமானி இல. 77

---

இல. வெ. மு./4/159

**கல்வி அமைச்சு**

ஐக்கிய இராச்சியத்தில் செல்லுபடியான பொதுநலவரசுப் புலமைப் பரிசில்கள்—1974 ஆம் ஆண்டு

பொதுநலவரசுப் புலமைப் பரிசில், இணையுரிமைப் பரிசில் திட்டத்தின் கீழ் வழங்கப்படுபவையும் ஐக்கிய இராச்சியத்திலுள்ள உயர்தர கற்கை நிலையங்களில் 1974 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஆரம்பமாகும் கழகவாண்டு தொடக்கம் செல்லுபடியானவையுமான புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஐக்கிய இராச்சியத்தில் உயர்தர பயிற்சி நெறிகளைப் பின்பற்றுதற்கு அல்லது ஆராய்ச்சி வேலைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளை இலங்கை மாணவர்களுக்கு இப்புலமைப் பரிசில்கள் மூலம் அளிக்கப்படும். பல்கலைக் கழகங்களிலும் தொழில் நுட்பவியல் நிலையங்களிலும் நடைபெறும் இப்பயிற்சி நெறிகள் பட்டப் பின்படிப்பு மட்டத்தில் அல்லது ஆராய்ச்சி வேலை மட்டத்தில் நடைபெறுகின்றன. கற்கை நெறிகள் மட்டுப்படுத்தப்பட்டில்லை. (முதலாவது பட்டப் பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

தமது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு 1. புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமைபுரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ந் திகதிய 514 ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக் கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு 2. சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதாவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

குறிப்பு 3. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2. கால எல்லை.—புலமைப் பரிசில்கள் சாதாரணமாக 2 வருட கால அளவினதாகும். எனினும், வெகுமதி ஒன்று ஒரு கழக வாண்டு அளவினதாக அமைய வேண்டும்.

எனினும், துர்நடத்தை, வாவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு ஐக்கிய இராச்சிய அதிகாரிகளின் தற்றுணிபிற்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. தகவுத்திறன்.—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் :—

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 1974.10.1 அன்று 35 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

(iii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படுவதும் விரும்புப் பயிற்சி நெறிக்கு பொருத்தமுடையதுமான, இரண்டாம் வகுப்பு (உயர் பிரிவு) பட்டம் பெற்றிருக்க வேண்டும். எனினும், மருத்துவ பட்டங்களைப் பொறுத்தவரையில் மட்டும், ஆகக்குறைந்த தேவை அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தின் 2 ஆம் வகுப்புப் பட்டமாகும். (பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்போரின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.)

(iv) ஆங்கிலத்தில் உயர்ந்த தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். (மேலுள்ள 3 (iii) ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள தகைமைகள் கட்டாயமானவை. உயர்ந்த அல்லது சமனை தகைமைகள் பெற்றுள்ளவர்கள்கூட மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பெற்றிருக்க வேண்டும்)

குறிப்பு 1. அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக்கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.10.1974 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

குறிப்பு 2. தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (ஈ) ஆம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. அளிப்பு நிபந்தனைகள்.—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க் காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) பிரித்தானியாவுக்கு செல்வதற்கும் புலமைப் பரிசிலை முடித்துக் கொண்டு திரும்புதற்குமான பயணச்செலவு. (வெகுமதிகள் அளிக்கப்படுதற்கு முன் ஏற்படும் பிரயாணச் செலவுகள் கொடுபடா.)

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட கற்கை, ஆய்கூட, பரீட்சைக் கட்டணங்கள்.

(இ) மாதாந்தம் £ 81 வீதம் சொந்தப் பராமரிப்புக் கொடை.

(ஈ) புத்தகங்களும் உபகரணங்களுக்குமாக வருடாந்தம் £ 30 கொடையும் பொருத்தமான இடத்து ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தட்டெழுத்துப் பிரதிகள் தயாரித்தற்கும் அவற்றைக் கட்டுதற்கும் £ 25 வரை.

(உ) பிரித்தானியாவுக்குள் அங்கீகரிக்கப்படும் பிரயாணச் செலவுகளுக்கு வருடாந்தம் £ 25 வரை கொடை.

(ஊ) அயன தேசங்களிலிருந்து வரும் மாணவர்களுக்கு, சிபார்சு செய்யப்படுதற்கமைய, உடைகளின் பொருட்டு ஆரம்பத்தில் £ 55 கொடை.

(எ) மனைவிமாருடன் வரும் மாணவர்களுக்கு மாதாந்தம் விவாகச் சகாயப்படியாக £ 32 உம் அவருடன் பிரித்தானியாவில் வசிக்கும் முதலாம், இரண்டாம், மூன்றும் (16 வயதுக்குட்பட்ட) பிள்ளைகளுக்கு முறையே £ 7, £ 5, £ 4 சகாயப்படியும். மனைவி புலமைப் பரிசில் பெற்றிருப்பின் அல்லது வேதனம் பெறும் உத்தியோகத்திலிருப்பின் விவாகச் சகாயப்படி வழங்கப்படமாட்டாது.

(மேற்குறித்த வரும்படிகளின்மீது ஐக்கிய இராச்சியத்தில் வருமான வரி விதிக்கப்படமாட்டாது)

குறிப்பு.—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. **நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில் விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்விதச் செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், ஐக்கிய இராச்சியத்துக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும், அரசினர் ஊழியர்களைப் பொறுத்த வரையில் சம்பளங்கள், சகாயப்படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்தியப் பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் ஐக்கிய இராச்சியத்தில், கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்வதற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்திய சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேறவேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால், அரசாங்க உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரையில், கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையாரார். ஏனையோரைப் பொறுத்தவரையில் அவர்கள் தமது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து திரும்பியதும் அவர்களுக்கு உத்தியோகம் அளிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்கவில்லை.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக்கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்து கொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்பட வேண்டிய விண்ணப்பங்கள் 1973.9.29 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூபா 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூபா 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத் தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சின் காரியதரிசிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1973 ம் ஆண்டு செப்டம்பர் மீ 4 ந் உ.

9-315/1 —14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77.

---

இல. வெ. மூ./4/161.

## கல்வி அமைச்சு

### கனடாவில் செல்லுபடியான பொதுநலவரசுப் புலமைப் பரிசில்கள்—1974 ஆம் ஆண்டு

பொதுநலவரசுப் புலமைப் பரிசில், இணையுரிமைப் பரிசில் திட்டத்தின் கீழ் கனடா அரசாங்கத்தால் வழங்கப்படுவதும் கனடா பல்கலைக் கழகங்களில் 1974 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இடையில் ஆரம்பிக்கும் கழகவாண்டு தொடக்கம் செல்லுபடியாவதுமான புலமைப் பரிசில்களை வழங்குதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பட்டப்பின் படிப்பில் அல்லது ஆராய்ச்சி வேலைகளில் உயர்தர திட்டங்களைப் பின்பற்றுதற்கு இலங்கை மாணவர்களுக்கு வாய்ப்புகள் அளித்தலே இப்புலமைப் பரிசில்களின் நோக்கமாகும்.

கற்கைத் துறைகள் வரையறுக்கப்பட்டில்லை. எனினும், ஏற்கனவே கலாநிதிப் பட்டம் பெற்றுள்ள அபேட்சகர்களுக்கேனும், மருத்துவப் பட்டங்களுக்கு பல் மருத்துவப் பட்டங்களுக்கு அல்லது பிணியாய் நிலையப் பயிற்சிக்கேனும் இப்புலமைப் பரிசில்கள் வழங்கப்படமாட்டாதெனக் கவனிக்கவும்.

தமது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து கொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு 1.—புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ந் திக

திய 514 ம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்துக் கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு 2.—சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ம் கூட்டைப் பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

குறிப்பு 3.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2. கால எல்லை.—புலமைப் பரிசில்கள் சாதாரணமாக இரண்டு கழக ஆண்டுகளையும் இடைப்பட்ட கோடைக் காலத்தையும் கொண்ட கால அளவினதாகும்; எனினும் அளிப்பு வழங்கப்படும் நெறியைப் பூர்த்தி செய்தற்குக் குறைந்த காலம் தேவைப்படின் புலமைப் பரிசில் குறைந்தகால அளவினதாகும். புலமைப் பரிசில் பெறுபவரின் படிப்புத் திட்டத்துக்குத் தேவைப்படின் அவருடைய தேர்ச்சி நன்றுயிருப்பின் மேலதிக காலத்துக்கு அளிப்பு நீடிக்கப்படும்.

எனினும், துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டுக் கனடா அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. தகவுத்திறன்.—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் :—

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 1974.10.1 அன்று 35 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

(iii) விரும்பும் கற்கை நெறிக்கு அமைவதும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படுவதுமான இரண்டாம் வகுப்பு (உயர் பிரிவுப்) பட்டம் குறைந்த பட்சம் பெற்றிருக்க வேண்டும். (பெறுபேறுகளை எதிர் பார்த்திருப்பவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(iv) ஆங்கிலத்தில் சிறந்த தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(மேலுள்ள 3 (iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் கட்டாயமானவையாகும். சமமான அல்லது உயர்ந்த தகைமைகளைப் பெற்றிருப்பவர்களும் இத்தகைமைகளைக் கட்டாயமாகப் பெற்றிருக்க வேண்டும்).

குறிப்பு 1.—அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.10.1974 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

குறிப்பு 2.—தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்குச் சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (ஈ) ஆம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. அளிப்பு நிபந்தனைகள்.—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க் காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) கனடாவுக்குப் போய்த் திரும்பி வரும் பிரயாணச் செலவு; சாதாரணமாக, பல்கலைக் கழகச் சங்கத்தினுலும் கனடாக் கல்லூரியாலும் ஒழுங்கு செய்யப்படும் விமான மூல சிக்கன வகுப்புப் பிரயாணம்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட கற்கைக் கட்டணமும் பல்கலைக் கழக ஏனைய கட்டணங்களும் (உணவு, இருப்பிடச் செலவு நீங்கலாக).

(இ) சொந்தக் தாபரிப்புச் சகாயப்படியாக மாதாந்தம் $210.00 வீதம்.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ, வைத்தியசாலைச் செலவுகள்.

(உ) படிக்கும் வருடம் ஒவ்வொன்றுக்கு $ 120.00 வீதம் புத்தகங்களுக்கான சகாயப்படி.

(ஊ) விசேட சந்தர்ப்பங்களில், பல்கலைக் கழகத்தில் பெற்றுக் கொள்ள முடியாத விசேட புத்தகங்கள், உபகரணவேறும் பொருட்கள் ஆகியவற்றிற்கான சகாயப்படி.

(எ) கற்கும் முதல் வருடம் $ 240.00 உம் அடுத்த வருடங்கள் மாதமொன்றுக்கு $ 10.00 வீதமும் உடைகளுக்கான ஒரு சகாயப்படி.

(ஏ) விசேட சந்தர்ப்பங்களில், மாணவரின் கல்வித் திட்டத்துக்கு அவசியமெனின் கனடாவுக்குள் பிரயாணம் செய்தற்கு மொத்தம் $ 800.00 வரை பிரயாணச் செலவு.

(ஐ) புலமைப் பரிசில்கள் பெறுபவர்கள் கனடாவுக்குச் செல்லுமுன் விவாகஞ் செய்திருப்பின் அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளுக்கு ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள அறிவித்தலைப் (பந்தி 4 (i), பார்க்கவும்).

(இக்கொடுப்பனவுகள் மீது கனடாவில் விதிக்கப்படமாட்டாது).

குறிப்பு.—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. நேர்முகப் பரீட்சை.—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்விதச் செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

6. உடன்படிக்கை.—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், கனடாவிற்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றித் திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும்;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்துப் புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்த வரையில் சம்பளங்கள், சகாயப்படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. வைத்தியப் பரீட்சை.—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் கனடாவில் கற்றை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா எனப் பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியச் சபையினுல் நடாத்தப்படும் வைத்தியப் பரீட்சையில் தேற வேண்டும்.

8. உத்தேச கற்றை நெறியைப் பின்பற்றுவதால், அரசாங்க உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரையில், கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார். ஏனையோரைப் பொறுத்தவரையில் அவர்கள் தமது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து திரும்பியதும் அவர்களுக்கு உத்தியோகம் அளிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்கவில்லை.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுவதற்கும் விண்ணப்பதாரி பாத்திராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்து கொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14 இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்பட வேண்டிய விண்ணப்பங்கள் 1973.9.29 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகக் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூபா 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூபா 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத் தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சின் காரியதரிசிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1973 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 4 ந் உ.

9-315/2—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77

---

சிறு கைத்தொழிற்றிணைக்களம்

கைத்தொழில் உதவியாளர் தரம் II க்கான பதவிகள்

(பொதுவானதும் பொறிமுறையானதும்)

சிறு கைத்தொழிற்றிணைக்களத்திற் கைத்தொழில் உதவியாளர் தரம் II (பொதுவானதும் பொறிமுறையானதும்) ற்கான பதவிகட்கு இலங்கைக் குடிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதன் கீழிணைந்துள்ள படிவத்திலமைந்த விண்ணப்பங்கள் 1973-10-01 ந் தேதியன்றோ அதன்முன்போ என்னை வந்தடைதல் வேண்டும்.

2. **சம்பள அளவைத்திட்டம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத்திட்டம் ஆண்டொன்றுக்கு ரூபா 4,152—144×16—6,456 ஆவதுடன் வினைத்திறமைகாண் தடை ஆண்டுச் சம்பளம் ரூபா 5,304 விற்கு முன்பாகும்.

3. நியமன நியதிகள்—

1. பதவி நிரந்தரமானது

2. அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு உதவுதொகை செலுத்தப்பட வேண்டும்.

4. **வேண்டப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு வேட்பாளரும் தான்—

(அ) கல்வித் தகைமைகள்.—

(1) கல்விப் பொதுத் தராதர (சாதாரணம்) பரீட்சையில் சிங்களம்/தமிழ் எண்கணிதம்/கணிதம், இரசாயனம், பௌதிகம், தாவரவியல், அல்லது உயிரியல் ஆகிய பாடங்களுட்பட ஆறுபாடங்களில் இரு தடவைகட்கு மேற்படாது தோற்றிச் சித்தியெய்தியுள்ளாரெனவும்,

(2) கல்விப் பொதுத் தராதர (உயர்தரம்) ப் பரீட்சையில் இரசாயனத்திலும் தாவரவியலிலும் சித்தியெய்தியுள்ளாரெனவும்,

(ஆ) கைத்தொழில் உதவியாளர் பதவி (பொறிமுறை)—

(1) சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணம்)ப் பரீட்சையில் சிங்களம்/தமிழ், கணிதம்/எண்கணிதம். இரசாயனம், பௌதிகம் உட்பட ஆறுபாடங்களில் இருதடவைகட்கு மேற்படாது தோற்றிச் சித்தியெய்தியுள்ளாரெனவும் ;

(2) இலங்கைத் தொழினுட்பக் கல்லூரியின் கனிட்ட தொழினுட்ப உத்தியோகத்தர் தராதரப் பத்திரமோ அல்லது பொறிமுறை எந்திரவியலில் இருவருடங்கட்குக் குறையாத நெறியொன்றைப் பூரணப்படுத்திய பின் அளிக்கப்பட்ட சான்றிதழோ அல்லது வேறேதாவது அங்கீகரிக்கப்பட்ட தொழினுட்ப நிலையத்தின் சமானமான சான்றிதழோ பெற்றுள்ளாரெனவும்,

மற்றைய தகைமைகள்—

(1) நற்குணப் பண்பும் உடனலமுமுள்ளவரெனவும்,

(2) 1973-10-01 ந் தேதியன்று 18 வயதுக்குக் குறைந்தவரல்லரெனவும் 35 வயதுக்கு மேற்பட்டவரல்லரெனவும்; (ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ளோர்க்கு இவ்வயதெல்லை ஏற்புடைத்தன்று) திருப்திகரமான சான்று சமர்ப்பித்தல் வேண்டும்.

5. விண்ணப்பகாரர்கள் தமது விண்ணப்பங்களுடன்—

(1) பிறப்புச் சான்றிதழ்,

(2) மிகவுயர்ந்த கல்வித் தகைமைச் சான்றிதழ்,

(3) மிக அண்மைக்காலத்துக் குணச் சான்றிதழ்கள் ஆகியவற்றின் படிகளை (இவற்றின் படிகள் திருப்பிக்கொடுக்கப்படமாட்டா)
(மூலப் பிரதிகளல்ல) இணைத்தல் வேண்டும்.

6. அரசாங்க சேவையிலோ, உள்ளூராட்சிச் சேவையிலோ உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தத்தந் திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. கொழும்பில் நடைபெறவிருக்கும் நேர்முகப் பரீட்சையொன்றுக்கு விண்ணப்பகாரர்கள் தமது செலவிலேயே சமூகமளிக்கும்படி வேண்டப்படுவர்.

8. விண்ணப்பத்திற் காணப்படும் விபரங்கள் எதுவெனினும் சரியற்றவையெனத் தெரிவுக்கு முன் காணுமிடத்து விண்ணப்பகாரர் தகைமையற்றவராகக் கருதப்படுவதுடன் தெரிவுக்குப் பின் காணப்படுமிடத்து அவர் பதவி நீக்கத்திற்குமாளாவார்.

9. வர்த்தமானியின் பகுதி I பிரிவு II இன் முற்பகுதியிற் பிரசுரிக்கப்பட்டுள்ள, அரசாங்க சேவைப் பதவிக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகட்குத் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

சிறு கைத்தொழிற் பணிப்பாளர்.

சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு-1,
1973.09.05.

கைத்தொழில் உதவியாளர் பதவி தரம் II ற்கான மாதிரி விண்ணப்பப் படிவம்

(**கவனிக்கவும்.—விண்ணப்பத்தைத் தாங்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "கைத்தொழில் உதவியாளர் பதவி தரம் II" எனக் குறிப்பிடப்பட்டுச் சிறு கைத்தொழிற் பணிப்பாளருக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்**)

1. முழுப் பெயர் :————.
2. முகவரி :————.
3. தேதியும் பிறந்த இடமும் :————.
(பிறப்புப் பதிவுச் சான்றிதழின் படி இணைக்கப்பட வேண்டும்)
4. நாட்டினம் :————.
5. மணமானவரா, தனியாளா ? ————
6. கல்வித் தகைமைகள் அல்லது தொழினுட்பத் தகைமைகள் அல்லது இவையிரண்டும் :————.
7. கல்வித் கூடத்தை விட்டு விலகியதிலிருந்து செய்த தொழில் அல்லது பெற்ற பயிற்சி அல்லது இவையிரண்டினதும் விபரங்கள் :————.
8. முன்பு ஏதாவது அரசாங்கத் திணைக்களத்திலோ அரசாங்கக் கூட்டுத்தாபனத்திலோ கடமையாற்றியிருப்பின் அதை விட்டு விலகிய காரணங்களைக் குறிப்பிடவும் :————.
9. நீதிமன்றமொன்றில் எப்பொழுதுதாயினும் குற்றவியற்றவ றெதற்காகவேனும் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின் அக்குற்றத்தைப் பற்றியும் பெற்ற தண்டனையைப் பற்றியும் விபரங்களைக் குறிப்பிடவும் :————.
10. குணச்சான்றிதழ்கள் பெறப்பட்ட மூவரின் பெயர்களும் பதவிப் பெயர்களும் :————.

————
கையொப்பம்.

தேதி :————.

9-346—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77

---

வவுனியா மாவட்டத்தில் உள்ள முள்ளியவளைப் பகுதிக்கு சடுதி மரண விசாரணை அதிகாரிக்கான பதவி வெற்றிடம்

வவுனியா மாவட்டத்தில் உள்ள முள்ளியவளைப் பகுதிக்கு சடுதி மரண விசாரணை அதிகாரிக்கான பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே தரப்படும் மாதிரி விண்ணப்பப் பத்திரப் பிரதியில் பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் 1973 ம் வருடம் ஒக்டோபர் மாதம் 6 ந் திகதியிலோ அன்றி அதற்கு முன்னதாகவோ எமது விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

2. தீர்க்கமான சம்பளம் இப்பதவிக்குக் கிடையாது. திடீர் மரணங்களின் போது இடம்பெறும் ஒவ்வொரு மரண விசாரணைக்கும் ரூபா 10/- தரப்படும்.

3. **தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம்—**

(அ) விண்ணப்ப முடிவு திகதியின் போது 30 வயதிற்கு மேற்பட்டவராகவும் 60 வயதிற்கு உட்பட்டவராகவும்,

(ஆ) சிறந்த நல்லொழுக்கமும், உடலுறுதியும் உடையவராகவும்,

(இ) முள்ளியவளைப் பகுதியின் நிரந்தரப் பிரஜையாகவும்,

(ஈ) (i) 1925 ம் ஆண்டிற்கும் 1944 ம் ஆண்டிற்குமிடையே தமிழ்ப் பாடசாலை விடுகைப் பத்திரப் பரீட்சையில் அல்லது தமிழ்ப் பாடத்துடன் ஆங்கிலப் பாடசாலை விடுகைப் பரீட்சையில் அல்லது தமிழ் பாடத்துடன் கல்வித் திணைக்கள கனிஷ்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவராகவும்,

(ii) தமிழ்ப் பாடத்துடன் சிரேஷ்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதனிலும் கூடிய பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் இருக்க வேண்டும்.

4. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் பத்திரங்களுடன் கீழே கோரப்படும் பத்திரங்களின் பிரதிகளையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம்
(ஆ) ஆகக் கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரம்.
(இ) இரண்டு சமீபகால நற்சான்றிதழ்கள்.

5. விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

எல். பி. விக்கிரமாராச்சி,
வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி,
வவுனியா,
1973.08.30.

மாதிரி விண்ணப்பப் பத்திரம்

**வவுனியா மாவட்ட முள்ளியவளைப் பகுதியில் சடுதி மரண விசாரணை அதிகாரிக்கான பதவி வெற்றிடம்**

1. முழுப் பெயர் (தெளிவான எழுத்துக்களில்) :————.
2. விலாசம் :————.
3. நிரந்தர வசிப்பிடமும் வதியும் கால எல்லையும் :————.
4. (அ) விண்ணப்ப முடிவு திகதியின் போது சரியான வயது :————.
(ஆ) பிறந்த திகதியும் இடமும் :————.
5. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ? :————.
6. கல்வித் தகைமைகள் :————.
7. தற்போதைய தொழில் :————.
8. முன்பு வேறு தொழில்கள் புரிந்திருப்பின் அவற்றின் விபரம் :————.
9. விண்ணப்பதாரிக்கு உரிமையான ஆதனங்களின் பெறுமானமும் பரப்பும் :————.
10. யாருக்காவது கடன் கொடுக்குமதியாயின் அதன் விபரம் :————.
11. விண்ணப்பதாரி நீதி மன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டோ தண்டிக்கப்பட்டோ இருப்பின் அதன் விபரம் :————.
12. இப்பதவிக்குத் தேவையான வேறு தகைமைகள் இருப்பின் அவற்றைத் தருக :————.

என்னால் மேற்குறிப்பிட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவையென்றும் உண்மையானவையென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

9-331—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77

---

**கல்வி அமைச்சு**

பணி செய்துகாட்டுவோர் பதவிகள்

கல்வி அமைச்சின் கீழுள்ள தொழில் நுட்பக் கல்வி நிலையங்களில் கீழ்க்காணும் தொழில்களில் பணி செய்துகாட்டுவோர் பதவிகளுக்கு, கீழே விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களும் கல்வி அமைச்சின் கீழுள்ள எத்தொழில் நுட்ப நிலையத்திலேனும் திணைக்களத்திலேனும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளவர்களுமான அபேட்சகர்களிடமிருந்தும் வெளி அபேட்சகர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுபட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கமைய விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 1973 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "செயலாளர் (பொது நிர்வாகக் கிளை), மலாய் **வீதி**, கொழும்பு 2" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

**பணிசெய்து காட்ட வேண்டிய தொழில்கள்**

உலோக வேலை
மரவேலை
மோட்டார்ப் பொறி நுட்பம்
மின்சாரத் தொழில்கள்
கட்டடத் தொழில்கள்
பொறிப்படுத்தல்.

2. **சம்பள அளவுத்திட்டம்**

இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—

ரூ. 4,152—8/144—ரூ. 5,304

3. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :**

இப்பதவிகள் நிரந்தரமானவையும் உபகாரச் சம்பள உரித்தற்றவையுமாகும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் அரசாங்க சேவை சேமலாப நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். நிரந்தரமான உபகாரச் சம்பள உரித்துடைய பதவி ஒன்றினை ஏற்கனவே அரசாங்க சேவையில் வகிக்கும் ஓர் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படின் அவர் தொடர்ந்து உபகாரச் சம்பள உரிமைகளை அனுபவிப்பார்.

(i) நியமதாரி அரசாங்க சேவைக்குப் புதிய முறைப்படி நியமிக்கப்படுவராயின், மொழிக் கொள்கை நோக்கத்தின் பொருட்டு, தகுதிகாண் காலம் மூன்று வருடங்களாகும்.

(ii) அரசாங்கத்தின் கீழ் நிரந்தர பதவி ஒன்றினை வசிக்கும் ஓர் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படின் அவருடைய நியமனம் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு பதில் கடமை முறையில் அமையும்.

(iii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் தீவின் எப்பகுதியிலும் கடமை புரியுமாறு வேண்டப்படுவார்கள்.

(iv) அபேட்சகர்கள் வாய்மொழிப் பரீட்சை, செய்முறைப் பரீட்சை ஆகியவற்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

4. **தகவுத்திறன் :**

விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவராகத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசாங்க சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது)

(ii) சிறந்த ஒழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(iii) தனித்தனி தொழிலில்/தொழில்களில் அதிக சாமர்த்தியம் பெற்றிருக்க வேண்டும் (பல தொழில்களில் கைதேர்ந்துள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

**பணி செய்துகாட்ட வேண்டிய தொழில்கள்**

வார்ப்பு வேலை, காய்ச்சியொட்டும் வேலை, பொறிப்படுத்தல் வேலை, மாதிரி செய்தல், கொல்ல வேலை, தச்சு வேலை, தகர வேலை, இணைப்பு வேலை, மின்சாரத் தொழில்கள், கட்டு வேலை (கல் அடுக்குதலும் பூச்சுப் பூசுதலும்), கட்டடத் தொழில், மோட்டார்ப் பொறிநுட்பம், வேலைக்களப் பயிற்சி, உலோகவேலை, இலத்திரனியல் வேலை, சைகை காட்டுதல் (மின்சார), டீசல் பொறியியல், பேழை செய்தல்.

குறித்த தொழில்களில் ஒன்றில் அல்லது கூடிய தொகைத் தொழில்களில் அதிகம் கைதேர்ந்துள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(iv) அரசாங்க தொழில்நுட்ப நிறுவனங்களில் அல்லது அரசாங்க தொழில்நுட்பக் கல்வி நிலையங்களில் கைதேர்ந்த தொழிலாளருக அல்லது ஒரு தொழில்நுட்பத் தொழிலில் குறைந்த பட்சம் 10 வருட அனுபவம் (இது, அடிப்படைத் தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்தில் போதனாசிரியராகப் புரிந்துள்ள சேவையையும் அடக்கும்) பெற்றிருக்க வேண்டும்.

சேவைக் காலத்தில்—

(i) கைதேர்ந்த 1 ஆந் தரத்தினர்க்கான சம்பள அளவுத் திட்டத்தின் உச்சிப்படியில் (வருடாந்தம் ரூ. 1,674/– என்ற படியில்) 1 வருடத்துக்குக் குறையாத காலம் சேவை புரிந்திருக்க வேண்டும். ; **அல்லது**

(ii) குறிப்பான தெரிவுத் தரத்திலான பதவி ஒன்றில் ரூ. 1,320—72—ரூ. 2,184 என்ற சம்பள அளவுத் திட்டத்தில் வேலைக்கமர்த்தப்பட்டிருக்க வேண்டும்.

குறிப்பு.—(1) கல்வி அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்வி நிலையங்களில் அல்லது திணைக்களங்களில் வேலை செய்பவர்கள் மேலுள்ள 4 ஆம் பந்தியின் (i) ஆம், (ii) ஆம் (iii) ஆம் உப பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடன் (iv) ஆம் உப் பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ள தகைமைகளையும் பெற்றிருக்க வேண்டும்.

(2) வெளி அபேட்சகர்கள், மேலுள்ள 4 ஆம் பந்தியின் (i) ஆம், (ii) ஆம், (iii) ஆம் உப பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடன் பின்வரும் தகைமைகளையும் பெற்றிருக்க வேண்டும்.

பணிசெய்து காட்டவேண்டிய விதிக்கப்பட்ட தொழிலில் இரு வருட முழுநேர உயர்தொழில் பயிற்சி நெறி ஒன்றினைச் சித்திகரமாகப் பூர்த்தி செய்ததை அத்தாட்சிப்படுத்தி,

(அ) மருதானை, இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால், அல்லது

(ஆ) கனிட்ட தொழில்நுட்ப நிலையம் ஒன்றால், அல்லது

(இ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரித் திணைக்களத்தால் வழங்கப்படும் சான்றிதழ் ; **அல்லது**

(ஈ) சமமான அல்லது உயர்ந்த தகைமை.

(உ) உரிய தொழிலில் ஐந்து வருட செய்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

5. அரசினர் சேவையிலுள்ள, தகைமையுடைய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்படும் திகதிக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. விதிக்கப்படும் திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் எவ் விண்ணப்பமும் விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதித் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டனவென்றும், நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக் கொள்ளுமாறு அவர் சிபார்சு செய்தாலன்றி, ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

6. அபேட்சகர்களைத் தெரிவு செய்யும் விடயத்தில், கல்வி அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்வி நிலையங்களிலுள்ளவர்களுக்கும் கல்வி அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களிலுள்ளவர்களுக்கும் இவ்வொழுங்கில் முன்னுரிமை வழங்கப்படும். இவர்களிடையே தகுதிவாய்ந்த அபேட்சகர்கள் இல்லாதவிடத்து வெளி அபேட்சகர்களிலிருந்து தெரிவு நடைபெறும்.

7. விண்ணப்பதாரிகள், வேண்டப்படும் நேரத்தில் பின்வரும் சாதனங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) கல்வித் தராதரப் பத்திரங்களும் உயர் தொழில் தராதரப் பத்திரங்களும்.

(இ) செய்முறை அனுபவம் பற்றி சான்றிதழ்கள்.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ம் பாகம் (IIஅ) ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 21 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள், கல்வி அமைச்சின் செயலாளருக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

தொடரெண் : பொ. நி./5,
கல்வி அமைச்சு, மலாய் வீதி,
கொழும்பு 2,
1973 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 05 ந் உ.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

கல்வி அமைச்சு

**பணிசெய்துகாட்டுவோர் பதவி*** ..........................

(*பணி செய்துகாட்டும் தொழிலைக் குறிப்பிடுக.)

1. முழுப்பெயர் (தெளிவாக எழுதவும்) :————.

2. அஞ்சல் முகவரி :————.

(முகவரியில் ஏற்படும் யாதேனும் மாற்றம் உடனே அறிவிக்கப்பட வேண்டும்)

3. நாட்டினம் :————.

(இலங்கையரா எனவும் அங்ஙனமாயின் (அ) வம்சாவழி காரணமாகவா அல்லது (ஆ) பதிவு காரணமாகவா எனவும் குறிப்பிடவும். பதிவு காரணமாக இலங்கைப் பிரசையாயின் பிரசாவுரிமைச் சான்றிதழின் தொடரெண்ணையும் திகதியையும் குறிப்பிடுக)

4. (அ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்றுள்ளபடி சரியான வயது :— வரு : மா ; நாள் :

(ஆ) பிறந்த திகதி :— வருடம் : மாதம் : நாள் :
(பிறப்புச்சாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்க)

5. பின்வருவோர் பிறந்த இடம்—
(அ) விண்ணப்பதாரி :————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் :————.

6. (அ) விவாகஞ் செய்தவரா/செய்யாதவரா, தாரமிழந்தவரா ?
(ஆ) விவாகஞ் செய்தவராயின்—
(i) விவாகத் திகதி :————.
(ii) பிள்ளைகளின் எண்ணிக்கை :————.

7. (அ) 15 வயதிலிருந்து கற்ற பாடசாலைகள்/கல்லூரிகள், ஏனைய நிலையங்கள் :—

| பொதுக் கல்வி | | | உயர்தர/தொழில்நுட்பக் கல்வி (இருப்பின்) | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை/கல்லூரி | தொடக்கம் | வரை | நிலையம் | தொடக்கம் | வரை |
| | | | | | |

(ஆ) கடைசிப் பாடசாலையிலிருந்து விலகிய திகதி :—

8. கல்வித் தகைமைகளும் சித்தி அடைந்த உயர்ந்த பரீட்சையும்—திகதியுடன் :—
(அ) சிங்களத்தில்
(ஆ) தமிழில்
(இ) ஆங்கிலத்தில்

9. பெற்றுள்ள, உயர்தொழில்/தொழில்நுட்பத் தகைமைகள் அல்லது இவ்விருவகைத் தகைமைகளும்—இருப்பின் :
(அ) திகதிகளுடனும் (ஆ) நிலையங்களின் பெயர்களுடனும்.

10. பின்வரும் மொழிகளில் வாசித்தல், எழுதுதல், சம்பாஷணை செய்தல், பேச்சு மொழி பெயர்ப்பு ஆகியவற்றில் பெற்றுள்ள தேர்ச்சி:
(அ) சிங்களம்
(ஆ) தமிழ்
(இ) ஆங்கிலம்

11. நீர் அதிக சாமர்த்தியம் பெற்றுள்ள தொழில்கள் :
(4 (iii) ஆம் பந்தியைப் பார்க்க) :

12. செய்முறை அனுபவம் பற்றிய விபரங்கள் :————.
(அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள விசேட தகைமை/அனுபவம் அல்லது தகைமையும் அனுபவமும் பெற்றிருக்கிறீரா பெற்றிருப்பின் முழு விபரங்களையும் கொடுக்கவும்)

13. சட்டமுறை நீதி மன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதா? அங்ஙனமாயின் (அ) தீர்ப்பு அளிக்கப்பட்ட திகதி (ஆ) வழக்கு எண் (இ) குற்றத் தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் குறிப்பிடுக :————.

14. தற்போது வகிக்கும் உத்தியோகம்—நிலையம்/திணைக்களம்
(i) (அ) பதவி, தரம் :————. (ஆ) நியமத் திகதி :————.
(ii) உபகாரச் சம்பள உரித்துடையதா/தற்காலிகமானதா/சமயோசிதமா :————.
(iii) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக) சம்பள அளவுத் திட்டமும் :————.
(iv) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி :————.

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் செம்மையானவையும் என இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் பின்னராயின் எவ்வித நட்ட ஈடுமின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் எனவும் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் ஒப்பம்.

திகதி :————.

திணைக்கள/நிலையத் தலைவர் அத்தாட்சிப்படுத்தல்

செயலாளர்,
கல்வி அமைச்சு.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுதற்கான கடைசித் திகதி முன்/பின்* இவ்விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

விண்ணப்பம் அனுப்பப்படுகிறது ............ஆம் பந்தியில் கொடுத்துள்ள விபரங்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களுக்கமைய/சரியானவையென* இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

————,
திணைக்கள/நிலையத்*தலைவரின் ஒப்பம்
பதவிப்பெயர் :

திகதி :
*பொருத்தமற்ற சொற்களைக் கீறிவிடுக.

9-327—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77

---

**கேகாலை மாவட்டத்தில் மூன்று கோறலை பாத-புலத்கமுவை (நாபாவலை) பிரிவிற்கு முஸ்லிம் விவாகப் பதிவாளர்**

கேகாலை மாவட்டம், மூன்று கோறளை பாதபுலத்கமுவை முஸ்லிம் விவாகப்பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள் அப்பிரிவில் சிலகாலம் வசிப்பவர்கள் அல்லது பொதுமக்களால் விரும்பத்தக்கவர்களுமான விவாகமான முஸ்லிம் ஆண்கள் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும் ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும் கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிமன்ற அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிறுவனங்களிலும், கூட்டுறவுத்தாபன நிலையங்களிலும் இப்பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கும் அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப்படிவங்களில் நிரப்புவதோடு 1973 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ எமக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

கபில பத்திரன விமலதர்ம,
**மாவட்டப் பதிவாளர்.**

மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
கேகாலை, 1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ந் திகதி.

9-309—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77

### அரச வடிசாலை யாக்கம்

வெற்றிடங்கள்

அரச வடிசாலை யாக்கத்தில் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் இதன் பின்னுல் தரப்பட்ட குறிப்பிட்ட படிவத்தில் உள்ளபடி தயாரிக்கப்பட்டு பதிவு அஞ்சலில் தலைவர், அரச வடிசாலை யாக்கம், 124 பான்ஸ் இடம், கொழும்பு 7 என்ற முகவரிக்கு 1973 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 28 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும்.

விண்ணப்பம் செய்யும் பதவியின் பெயர் கடித உறையின் இடக் கைப்பக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

(பி) நிரந்தர, தற்காலிக, அமய பதவிகளுக்கு நியமிக்கப்படும் பணி செய்பவர் ஒவ்வொருவரும் தமது வேதனத்தின் 6 வீதத்தைப் பணி செய்வோர் சகாய நிதியத்துக்கு செலுத்தும்படி வேண்டப்படுவர். யாக்கத்தின் உதவு தொகை பணி செய்பவருக்குச் செலுத்தப்படும் வேதனத்தின் 9 வீதத்துக்குச் சமமானதாயிருக்கும். சட்ட முறையான ஏற்பாடுகளுக்கமைவாக இந்த வீதங்களை பணிப்பாளர் சபை இதனை மாற்றலாம்.

(எப்) (i) பணிசெய்பவர் ஒவ்வொருவரும் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இணங்கி நடப்பதுடன் இன்று நடைமுறையிலுள்ள ஏதாவது சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு பயன் விளைவிக்கும் வகையில் இனி வரும் காலத்தில் புகுத்தப்படும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி நடத்தல் வேண்டும்.

(ஜி) யாக்கத்தில் உள்ள பதவி ஒன்றுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் தாம் ஓர் இலங்கை பிரசை என்பதற்கான திருப்திகரமான அத்தாட்சியை சமர்ப்பிக்க வேண்டியது ஓர் "இலங்கைப் பிரசை" என்பது பாரம்பரியத்தால் அல்லது பதிவின் மூலம் பெற்ற குடியுரிமையாகும்.

(எச்) வேண்டப்பட்டவிடத்து பணி செய்பவர் பின்வரும் ஆவணங்களில் ஒன்றை அல்லது எல்லாவற்றையும் சமர்ப்பிக்க வேண்டியது :—

**கவனிக்க.**—சமய தீட்சை சான்றிதழ்கள் அல்லது உதவி பெறும் பாடசாலைகளின் ஒழுங்குவிதிக் கோவையின் தேவைகளுக்கென வழங்கப்படும் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(i) பிறப்புச் சான்றிதழ்.

(ii) கல்விச் சான்றிதழ்.

(iii) உயர்தொழிலும்/அல்லது தொழினுட்பத் தகைமைச் சான்றிதழ்களும்.

2. யாக்கத்திலான பதவிகள் எவற்றிற்கும் ஆதரவு தேட முனைபவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

யாக்கத்தின் பணிசெய்பவர் ஒவ்வொருவரும் தாம் யாக்கத்தில் சேர்ந்ததும் தமது சொத்துக்களை வழிப்படுத்துவதுடன் அதன் சபையினுல் தீர்மானிக்கப்பட்ட வகையிலும் விதத்திலும் ஆண்டு தோறும் தமக்குள்ள சொத்துக்களின் விபரங்களை வெளிப்படுத்துவர்.

3. வேறு யாக்கங்கள் அல்லது அரசாங்க திணைக்களங்களின் உத்தியோகத்தர்களின் விண்ண்பங்கள் யாவும் அவை தொடர்பான யாக்கத்தின் தலைவருக்கூடாக அல்லது திணைக்கள தலைவருக்கூடாகவும் அவர் தெரிவு செய்யப்பட்டவிடத்து அவ்விண்ணப்பகாரர் விடுவிக்கப்படுவாரா அல்லவா என்பதையும் குறிப்பிட்ட அனுப்பப்படாத விண்ணப்பங்கள் எதுவாளுலும் அவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

அரசாங்க சேவையில் ஏற்கனவே இருக்கும் உத்தியோகத்தர்களுக்கு இந்த வயது மேல் எல்லை பொருத்தமுடையாகாது.

#### பிரதேச முகாமையாளர்

**வயதெல்லை.**—35 க்கும் 45 க்கும் இடையில்.

**சம்பள அளவுத்திட்டம்.**—ரூபா 1250—10×50—1750

**கல்வித் தகைமைகளும் அனுபவமும்.**—நன்கு மதிக்கப் பெற்ற பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரியாகும் ஓர் அரசாங்க திணைக்களத்தில்/வியாபார தாபனத்தில்/அரச யாக்கத்தில் பொறுப்பான பதவியில் ஆகக் குறைந்தது ஐந்து ஆண்டுகள் நிறைவேற்றுனர் அனுபவம் பெற்றவராகவும் அல்லது அரசாங்க திணைக்களத்தில் அல்லது அரச யாக்கத்தில் பதினைந்து ஆண்டுகள் அனுபவம் உள்ளவராகவும் இதில் ஆகக் குறைந்தது ஐந்து ஆண்டுகளேனும் பொறுப்பு வாய்ந்த தன்மையான பதவியில் அனுபவம் பெற்றவராயும் இருத்தல் வேண்டும்.

களப்பதவியினரை மேற்பார்வை செய்வதிலும் பயிற்சி அளிப்பதிலும் அனுபவமும் விசேட அமைப்பு அல்லது நிருவாக திறனும் மதுசார் வியாபாரத்தில் மதுவகை அறிவும் கொண்டுள்ள விண்ணப்பகாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

#### உதவிப் பிரதேச முகாமையாளர்

வயதெல்லை.—25 தொடக்கம் 40 வயது வரை.

வேதன அளவுத் திட்டம்.—ரூபா1,000—10×50—1,500.

**கல்வித் தகைமைகளும் அனுபவமும்**—நன்கு மதிக்கப்பட்ட சர்வகலாசாலையின் ஒரு பட்டதாரியாகவும் ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகள் ஓர் அரசாங்க திணைக்களத்தில், வியாபார தாபனத்தில், அரச யாக்கத்தில் பொறுப்பு வாய்ந்த தராதரத்தில் நிறைவேற்றுனர் தரத்திலான அனுபவம் பெற்றவராகவும் அல்லது சி. பா. சா. அல்லது அதற்குச் சமமான சான்றிதழுடன் அரசாங்க திணைக்களத்தில் அல்லது அரச யாக்கத்தில் 15 ஆண்டுகள் அனுபவம் உடையவராகவும் அதில் ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகளேனும் பொறுப்பு வாய்ந்த நிருவாகத் தரத்தில் அனுபவம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

#### பிரதான உள்ளக கணக்காய்வாளர்

வயதெல்லை.—35 தொடக்கம் 45 வயது வரை.

வேதன அளவுத்திட்டம்—ரூபா 1250—10×50—1750.

கல்வித் தகைமைகளும் அனுபவமும்.—ஓர் தகைமையுடைய கணக்காளர் அதாவது ஏ. சி. ஏ, ஏ. சி. எம். ஏ, ஏ. சி. ஐ ஏ. அல்லது அதற்குச் சமமான தகைமையுடன் அரசாங்க திணைக்களத்தில், அரச யாக்கத்தில் அல்லது நன்கு அதிக்கப்பட்ட வியாபார தாபனத்தில் அனுபவமும் பெற்றவராய் இருத்தல் வேண்டும்; அல்லது

அரசாங்க கணக்காளர் சேவையின் ஓர் அங்கத்தவராக 10 ஆண்டுகள் கணக்காளராயும் அனுபவம் பெற்றவராய் இருத்தல் வேண்டும்.

உள்ளகக் கணக்காய்வு அனுபவமும் முகாமை தொழில் நுட்பங்களில் தொடர்புடையவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

#### செயலாளரும் சட்ட உத்தியோகத்தரும்

வயதெல்லை.—35 தொடக்கம் 45 வயது வரை

வேதன அளவுத்திட்டம்.—ரூபா 1,250—10×50—1,750

கல்வித்தகைமைகளும் அனுபவமும்.—(எ) நன்கு மதிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் சட்டத்துறைப் பட்டதாரியாகவும் ஆகக் குறைந்தது ஐந்து ஆண்டுகள் நிருவாக அனுபவம் உடையவராகவும்; அல்லது

(பி) ஆகக் குறைந்தது ஏழு ஆண்டுகள் அனுபவமுள்ள ஓர் வழக்கறிஞராகவும்; அல்லது (சி) ஆகக் குறைந்தது பன்னிரண்டு ஆண்டுகள் ஓர் பிரக்கிராசியாகவோ இருத்தல் வேண்டும்.

#### கணக்காளர்—தரம் I

வயதெல்லை—35 தொடக்கம் 45 வயது வரை

வேதன அளவுத்திட்டம்—ரூபா 1,250—10×50—1,750

கல்வித்தகைமைகளும் அனுபவமும்.—ஓர் தகைமையுள்ள கணக்காளர் அதாவது எ.சி.எ, எ.சி.எம்.எ, எ.சி.ஐ.எ. அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் அரசாங்க திணைக்களத்தால் அல்லது அரச யாக்கத்தில் அல்லது நன்கு மதிக்கப்பட்ட வியாபார தாபனத்தில் ஐந்து ஆண்டுகள் அனுபவம் பெற்றவராயும் அல்லது

அரசாங்க கணக்காளர் சேவையின் ஓர் அங்கத்தவராக 10 ஆண்டுகள் கணக்காளர் சேவையில் உள்ளவராயிருத்தல் வேண்டும்.

#### கணக்காளர்—தரம் II

வயது.—25 வயதிற்கும் 35 வயதிற்குமுட்பட.

சம்பளம்.—750 ரூபா—5×40 ; 6×50—1,250 ரூபா.

கல்வித் தகைமையும் அனுபவமும்.—தத்துவம் பெற்ற கணக்காளர் கழகத்தின் அல்லது செலவுக் கணிப்பு, கைத்தொழில் கணக்காளர் கழகத்தின் இடைநிலைப் பரீட்சை அல்லது செலவுக் கணிப்பு முகாமைக் கணக்காளர் கழகத்தின் I, II, III ஆம் பகுதிகள் அல்லது இவற்றுக்குச் சமமான தகைமையும் கணக்கு நிருவாகத்தில் மூன்றுண்டு அனுபவமும்.

#### கணக்காளர்—தரம் III

வயதெல்லை—25 தொடக்கம் 35 வயது வரை.

வேதன அளவுத்திட்டம்.—ரூபா600—10×30—900.

கல்வித் தகைமைகளும் அனுபவமும்—பட்டயம் பெற்ற கணக்காளர்களின் நிறுவகத்தின் இடைநிலைப் பரீட்சை அல்லது ஆகு செலவுக் கணக்கிடுதலும் கைத்தொழில் கணக்காளர்கள் நிறுவகத்தில் இடைநிலைப் பரீட்சையும் அல்லது ஆகு செலவும் முகாமைக் கணக்காளர்களினதும் பகுதி I, II, III ம் அல்லது அதற்குச் சமமான தகைமை பெற்றவராயுமிருத்தல் வேண்டும்.

### பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர்

**வயதெல்லை.**—40 தொடக்கம் 50 வயது வரை

**வேதன அளவுத் திட்டம்.**—ரூபா 1,250—10 × 50—1,750

**கல்வித் தகைமைகளும் அனுபவமும்.**—நன்கு மதிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டப்படிப்புடன் ஐந்து ஆண்டுகள் ஓர் பெரிய பொறுப்பில் பாதுகாப்புச் சேவையில் பொறுப்பேற்றல் அனுபவம் பெற்றவராகவும் அல்லது சி.பா.சா. அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி யெய்தியவராய் இருப்பதுடன் ஓர் பொலிஸ் உத்தியோகத்தராக (சோதனைகாரர் தரத்துக்குக் குறையாமல்) எட்டு ஆண்டுகள் அனுபவம் உடையவராகவும் அல்லது ஓர் கசட்டெட் உத்தியோகத்தனுகவோ அல்லது ஆணை பெற்ற உத்தியோகத்தராக ஏதாவது ஒரு படைச் சேவையில் நாலு ஆண்டுகள் அனுபவம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். பாதுகாப்புச் சேவையை முகாமைப்படுத்துதலில் அனுபவம் இருப்பின் அது மேலதிக தகைமையாக கருதப்படும்,

### ஆளணி முகாமையாளர்

**வயதெல்லை.**—35 தொடக்கம் 45 வயது வரை.

வேதன அளவுத்திட்டம்.—ரூபா 1,250—10 × 50—1,750

**கல்வித் தகைமைகளும் அனுபவமும்.**—நன்கு மதிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் ஓர் பட்டப்படிப்பு அல்லது நன்கு மதிக்கப்பட்ட உயர்தர தகைமையுடன் ஆளணி நிருவாகம், கைத்தொழில் தொடர்புகள் அல்லது அது சார்ந்த வேலை என்பவற்றில் 10 ஆண்டுகள் அனுபவமும் இதில் 8 ஆண்டுகள் தொழிலாளர் முகாமை அரசாங்க திணைக்களத்தில், அரசயாக்கத்தில் அல்லது ஓர் நன்கு மதிக்கப்பட்ட வர்த்தக ஸ்தாபனத்தில் தொழிலாளர் தொடர்பிலான பொறுப்புள்ள முகாமைத்தளத்தில் அனுபவம் பெற்றவராய் இருத்தல் வேண்டும்.

ஆளணியினரைக் கொண்ட பெரியதோர் நிறுவனத்தை முகாமைப்படுத்துவதில் அனுபவம் வாய்ந்த திறமை ஓர் மேலதிக தகைமையாகும், அல்லது

அரசாங்க திணைக்களம்/அரச யாக்கம் என்பனவற்றில் 15 ஆண்டு சேவை செய்து அதில் ஆகக் குறைந்தது 5 ஆண்டுகளேனும் ஆளணியினரை முகாமைப்படுத்தும் பொறுப்பிலும் கைத்தொழில் தொடர்பிலும் தாபன வேலையிலும் பொறுப்பு வாய்ந்த நிறைவேற்றுனர் தரத்தில் சேவை செய்தவராய் இருத்தல் வேண்டும். தொழிலாளர் சட்டங்களின் நல்லதோர் அறிவு வேண்டப்படுகின்றது.

### ஆளணி உத்தியோகத்தரும் நலன்புரி உத்தியோகத்தரும்

**வயதெல்லை.**—25 தொடக்கம் 35 வயது வரை.

வேதன அளவுத்திட்டம்.—ரூபா 750—5 × 40—6 × 50—1,250.

**கல்வித் தகைமைகளும் அனுபவமும்**—நன்கு மதிக்கப்பட்ட ஓர் பல்கலைக்கழகத்தின் ஓர் பட்டப்படிப்புடன் ஆகக் குறைந்தது ஐந்தாண்டுகளேனும் அரசாங்க திணைக்களம், வர்த்தக நிறுவனம் அல்லது அரசயாக்கத்தில் ஆளணி முகாமையுடன் தொழிலாளர் தொடர்புடைய நிறைவேற்று அனுபவம் பெற்றவராய் இருத்தல் வேண்டும், அல்லது

அரசாங்க திணைக்களத்தில், அரசயாக்கத்தில் 15 ஆண்டுகள் சேவை செய்தவராகவும் இதில் ஆகக் குறைந்தது ஐந்தாண்டுகளேனும் ஆளணி முகாமையில், கைத்தொழில் தொடர்பில், தாபன வேலையில், பொறுப்பு வாய்ந்த தரத்தில் அனுபவம் பெற்றவராய் இருத்தல் வேண்டும். தொழிலாளர் சட்டங்களில் நல்ல அறிவுடன் தொழில் மன்று வேலையில் அனுபவம் உடையவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

### பேணல் எந்திரி

**வயதெல்லை.**—25 வயது தொடக்கம் 35 வயது வரை.

**வேதன அளவுத் திட்டம்.**—ரூ. 750—5 × 40—6 × 50—1,250.

**கல்வித் தகைமைகளும் அனுபவமும்.**— பொறிமுறை எந்திரவியலில் ஓர் பட்டதாரியாகவும் அல்லது இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் க. தொ. உ. (பொறிமுறைப் பயிற்சி முறை) சான்றிதழ் பெற்று நன்கு மதிக்கப்பட்ட வேலைக்களத்தில் மேற்பார்வைத் தரத்தில் 7 ஆண்டுகள் அனுபவம் பெற்றவராயிருத்தல் வேண்டும்.

அல்லது

சி. பா. சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமையுடன் பொறிமுறை உபகரணங்கள் பேணுதலிலும் திருத்துதலிலும் 15 ஆண்டுகள் அனுபவமுடையவராகவும் இதில் ஆகக் குறைந்தது 7 ஆண்டுகளேனும் மேற்பார்வைத் தரத்தில் இருந்தவராயும் இருத்தல் வேண்டும்.

### வடிசாலை உத்தியோகத்தர்

**வயதெல்லை.**—25 வயது தொடக்கம் 35 வயது வரை.

**வேதன அளவுத் திட்டம்.**—ரூ. 600—10 × 30—900.

**கல்வித் தகைமைகளும் அனுபவமும்.**—நன்கு மதிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் பட்டதாரி அல்லது க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் விஞ்ஞான பாடங்களுடன் மேற்பார்வைத் தரத்தில் 5 ஆண்டுகள் அனுபவம் பெற்றவராய் இருத்தல் வேண்டும்.

அல்லது

சி. க. சா அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் இரசாயனவியல் பௌதிகவியல் என்னும் பாடங்களில் சித்தியடைந்து 10 ஆண்டுகள் மேற்பார்வை அனுபவம் பெற்றவராயிருத்தல் வேண்டும்.

### புள்ளிவிவர உத்தியோகத்தர்

**வயதெல்லை.**—25 வயது தொடக்கம் 35 வயது வரை.

**வேதன அளவுத் திட்டம்.**—ரூ. 600—10 × 30—900.

**கல்வித் தகைமைகளும் அனுபவமும்.**—நன்கு மதிக்கப்பட்ட ஓர் பல்கலைக் கழகத்தில் புள்ளி விவரவியலில் விசேட பட்டப் படிப்புடையவராயிருத்தல் வேண்டும்.

அல்லது

நன்கு மதிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் பட்டதாரியாகவும் நன்கு மதிக்கப்பட்ட நிறுவனத்தில் புள்ளி விவரவியலில் டிப்புளோமா பெற்றவராயுமிருத்தல் வேண்டும்.

### மொழிபெயர்ப்பாளர்

**வயதெல்லை.**—25 வயது தொடக்கம் 35 வயது வரை.

வேதன அளவுத் திட்டம்.—ரூ. 500—10 × 20—700.

கல்வித் தகைமைகளும் அனுபவமும்.—நன்கு மதிக்கப்பட்ட பல்கலைக் கழகப் பட்டதாரியாய் இருப்பதுடன் க. பொ. த (சாதாரணதரம்) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி எய்தியவராயும் அரசாங்கத் திணைக்களத்தில்/அரசயாக்கத்தில்/வர்த்தக நிறுவகத்தில் மொழிபெயர்ப்பில் அனுபவமுடையவராயுமிருத்தல் வேண்டும்.

அல்லது

க. பொ. த. (உயர்தரம்) சித்திஎய்தியிருப்பதுடன் க. பொ. த. (சாதாரணம்) வில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி எய்தியிருப்பதுடன் அரசாங்கத் திணைக்களத்தில்/அரசயாக்கத்தில்/வர்த்தக நிறுவகத்தில் 10 ஆண்டுகள் மொழிபெயர்ப்பாளராக அனுபவம் பெற்றவராயிருத்தல் வேண்டும்.

### எழுதுநர்—தரம் I

**வயதெல்லை.**—30 வயது தொடக்கம் 45 வயது வரை.

**வேதன அளவுத் திட்டம்.**—ரூ. 500—10 × 20—700 மாதம் ஒன்றுக்கு.

**கல்வித் தகைமைகளும் அனுபவமும்.**—சி. க. சா. அல்லது க. பொ. த. (சாதா.) பரீட்சையில் ஒரே முறையில் 6 பாடங்களில் சித்தி எய்தியிருப்பதுடன் 10 ஆண்டுகள் எழுதுனர் அனுபவம் பெற்றவராயும் இதில் ஆகக் குறைந்தது 5 ஆண்டுகளேனும் ஓர் அரசாங்கத் திணைக்களத்தில்/அரச யாக்கத்தில் மேற்பார்வைத் தரத்தில் அனுபவம் பெற்றவராயுமிருத்தல் வேண்டும்.

### எழுதுநர்—தட்டெழுத்தாளர்—தரம் II

**வயதெல்லை.**—25 வயது தொடக்கம் 35 வயது வரை.

**வேதன அளவுத் திட்டம்.**—ரூ. 340—14 × 15—550 மாதமொன்றுக்கு.

**கல்வித் தகைமைகளும் அனுபவமும்.**—சி. ப. சா. அல்லது க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் ஒரே முறையில் 6 பாடங்களில் சித்தி எய்தியவராயும் அரசாங்கத் திணைக்களத்தில்/அரச யாக்கத்தில் 5 ஆண்டுகளுக்கு திருத்திகரமான எழுதுநர் சேவையை உடையவராயும் இருத்தல் வேண்டும்.

### சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர்—தரம் I

#### சிங்களம் அல்லது ஆங்கிலம்

**வயதெல்லை.**—25 வயது தொடக்கம் 35 வயது வரை.

**வேதன அளவுத் திட்டம்.**—ரூ. 500—10 × 20—700.

**கல்வித் தகைமைகளும் அனுபவமும்.**—சி. க. சா. அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஆங்கிலத்தில் அல்லது சிங்களத்தில் திறமைச் சித்தி எய்தியவராயிருத்தல் வேண்டும்.

வேகம்

சிங்களம் : சுருக்கெழுத்து—நிமிடத்திற்கு 90 சொற்கள்
தட்டெழுத்து—நிமிடத்திற்கு 35 சொற்கள்

ஆங்கிலம் : சுருக்கெழுத்து—நிமிடத்திற்கு 120 சொற்கள்
தட்டெழுத்து—நிமிடத்திற்கு 40 சொற்கள்

அத்துடன் சேர்த்து சுருக்கெழுத்து தட்டெழுத்து வேலையில் ஆகக் குறைந்தது 5 ஆண்டு அனுபவமும் உடையவராயிருத்தல் வேண்டும்; அந்தரங்கமான வேலையில் அனுபவம் உடைய விண்ணப்பகாரருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**சுருக்கெழுத்தாளர்—தட்டெழுத்தாளர் (சிங்களம் அல்லது ஆங்கிலம்) தரம் II**

வயதெல்லை.—20 வயது தொடக்கம் 35 வயது வரையும்.

வேதன அளவுத்திட்டம்.—ரூ. 340—14×15—550.

கல்வித்தகைமைகளும் அனுபவமும்.—சி. க. சா. அல்லது க. பொ. த (சாதாரணம்) ஒரேமுறையில் 6 பாடங்களிலும் இவற்றில் ஆங்கிலம்/சிங்களம் என்பனவற்றுடன் 5 பாடங்களில் திறமைச் சித்தி எய்தியவராயும் இருத்தல் வேண்டும். ஆகக் குறைந்தது 2 ஆண்டுகளேனும் சுருக்கெழுத்துத் தட்டெழுத்தில் அனுபவம் பெற்றவராயும்,

அல்லது

இலங்கைத் தொழினுட்பக் கல்லூரியில் உயர் வர்த்தகச் சான்றிதழ் பெற்றவராயுமிருக்க வேண்டியதுடன் ஆகக் குறைந்தது 2 ஆண்டுகளேனும் சுருக்கெழுத்துத் தட்டெழுத்தில் அனுபவமும் இருக்க வேண்டும்,

அல்லது

அரசாங்கத் திணைக்களத்தில்/அரசயாக்கத்தில்/வர்த்தக நிறுவகத்தில் ஆகக் குறைந்தது 5 ஆண்டுகளேனும் சுருக்கெழுத்துத் தட்டெழுத்தில் அனுபவமுடையவராயிருத்தல் வேண்டும்.

வேகம்.—

சுருக்கெழுத்து—தட்டெழுத்தாளர் (சிங்களம்)

சுருக்கெழுத்து—நிமிடமொன்றுக்கு 60 சொற்கள்
தட்டெழுத்து—நிமிடமொன்றுக்கு 25 சொற்கள்.

சுருக்கெழுத்தாளர்—தட்டெழுத்தாளர் (ஆங்கிலம்)

சுருக்கெழுத்து—நிமிடமொன்றுக்கு 80 சொற்கள்.
தட்டெழுத்து—நிமிடமொன்றுக்கு 40 சொற்கள்.

**வடிசாலை உதவியாளர்**

வயதெல்லை.—25 வயது தொடக்கம் 35 வயது வரை.

வேதன அளவுத்திட்டம்.—ரூ. 400—10×20—600

கல்வித் தகைமைகளும் அனுபவமும்.—நன்குமதிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் பௌதிக விஞ்ஞானத்தில் பட்டம் பெற்றவராகவும்,

அல்லது

க. பொ. த (உயர் தரத்தில்) விஞ்ஞான பாடங்களுடன் சித்தி எய்தி 3 ஆண்டுகள் பரிசோதனைக் கூட வேலையில் அனுபமுடையவராயும் இருத்தல் வேண்டும். தொழிலாளரைக் கையாள்வதில் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**குத உதவியாளர்**

வயதெல்லை.—25 வயது தொடக்கம் 35 வயது வரை.

வேதன அளவுத்திட்டம்.—ரூ.400—10×20—600.

கல்வித் தகைமைகளும் அனுபவமும்.— நன்கு மதிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் பௌதிக விஞ்ஞானப் பட்டதாரியாயிருத்தல் வேண்டும்.

அல்லது

க. பொ. த (உயர்தரம்) விஞ்ஞான பாடங்களில் சித்தி எய்தி 5 ஆண்டுகள் பரிசோதனைக் கூட வேலையில் அனுபவம் பெற்றவராயுமிருத்தல் வேண்டும்.

தொழிலாளர்களை கையாள்வதில் அனுபவமுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**கணக்குப் பதியுநர்**

வயதெல்லை.—25 வயது தொடக்கம் 35 வயது வரை.

வேதன அளவுத்திட்டம்.—ரூ. 400—10×20—600 மாதமொன்றுக்கு

கல்வித் தகைமைகளும் அனுபவமும்.—(1) சிரேட்ட வர்த்தகக் கூடத்தின் இறுதிப் பரீட்சை

அல்லது

(2) இலங்கை தொழினுட்பக் கல்லூரியின் உயர் வர்த்தகச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி எய்தியிருக்க வேண்டும். அத்துடன்

(3) நன்குமதிக்கப்பட்ட வர்த்தக தாபனம் அரசாங்கத் திணைக்களம் அல்லது அரசயாக்கத்தில் 5 ஆண்டு அனுபவமுடையவராயிருத்தல் வேண்டும்.

**பாதுகாப்பு உத்தியோகத்தர்**

வயதெல்லை.—25 வயது தொடக்கம் 35 வயது வரை.

வேதன அளவுத்திட்டம்.—400—10×20—600.

கல்வித்தகைமைகளும் அனுபவமும்.—நன்குமதிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டதாரியாயும் விளையாட்டுத் தகைமைகள் உடையவராயும் இருத்தல் வேண்டும்,

அல்லது

சி. க. சா. அல்லது அதற்குச் சமமான சான்றிதழுடன் விளையாட்டுத் தகைமைகளும் பாதுகாப்பு வேலையில் 3 ஆண்டுகள் அனுபவமும் உடையவராயிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொண்டமை அறிவிக்கப்படமாட்டாது.

தலைவர்,
அரச வடிசாலை யாக்கம்.

124, பான்ஸ் பிளேஸ்,
கொழும்பு 7.
6.9.1973.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

அரசாங்க வடிசாலைகள் கூட்டுத்தாபனத்தில் ஒரு பதவிக்கான விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பிக்கும் பதவி :————.
2. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் (குடும்பப் பெயர் முதலில்) திரு/திருமதி/செல்வி (இவற்றில் எவர் என்பதைக் கூறிப்பிடவும்) :————.
3. தபால் முகவரி :————.
4. (அ) பிறந்த திகதி :————.
   வருடம்————, மாதம்————, நாள்————.
   (ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளபடி சரியான வயது :
   வருடங்கள்————, மாதங்கள்————, நாட்கள்————.
5. (i) இலங்கை பிரசையா என்பது :—
   (அ) வம்சாவழி காரணமாகவா :————.
   (ஆ) பதிவு காரணமாகவா :————.
   (ii) பதிவு காரணமாக இலங்கையர் என்றால் பதிவிலக்கமும் திகதியும் தருக :————.
6. தேசிய இனம் :————.
7. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :————.
8. (i) கல்வித் துறையில் பெற்றுள்ள மிக உயர்ந்த தகைமைகள் (சான்றிதழின் பெயரைக் குறிப்பிடவும்) :————.
   (ii) (அ) சிங்கள மொழியில் அடைந்துள்ள தேர்ச்சி :——. (பாடங்களைக் குறிப்பிடுக)
   (ஆ) தமிழ் மொழியில் அடைந்துள்ள தேர்ச்சி :————. (பாடங்களைக் குறிப்பிடுக)
   (இ) ஆங்கில மொழியில் அடைந்துள்ள தேர்ச்சி :————.
   (பாடங்களைக் குறிப்பிடுக)
9. தொழில்நுட்ப, தொழிற்றுறைகளில் பெற்றுள்ள தகைமைகள் :————.
10. அனுபவம்—விண்ணப்பிக்கும் பதவிக்கு நீர் உகந்தவர் என்பதை உயர்த்திக்காட்டும் அனுபவங்கள் ஏதுமிருப்பின் குறிப்பிடுக :————.
11. விண்ணப்பிக்கும் பதவி சம்பந்தமாக உமக்குள்ள வேறு விசேட தகைமைகள் :————.
12. நீர் தற்போது பணி புரிகின்றீரா ? பணி புரிபவராயின் வேலை கொள்வோரின் பெயர், முகவரி, வகிக்கும் பதவி, சம்பள விகிதம் என்பன பற்றிய விவரங்கள் தருக :——.

13. நீர் எக்காலத்திலாவது குற்றவியற்தவறு செய்தவராக குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கின்றீரா ? அப்படியாயின் அதுபற்றிய விவரங்கள் தருக :————.

14. உமது குணம் நடத்தை பற்றி விசாரித்தறிந்து கொள்ளக் கூடிய இருவரின் பெயரும் விலாசமும் தருக :————.

(i)
(ii)

இவ்விண்ணப்பத்தில் என்னுல் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எனதறிவுக்கெட்டிய வரை உண்மையானவை யென்றும் சரியானவை யென்றும் வெளிப்படுத்த வேண்டிய விவரங்கள் எவற்றையாவது நான் தடுத்து வைக்கவில்லே யென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். நியமனங்களுக்குரிய பொது விதிகள் நியதிகளை நான் படித்திருந்துள்ளேன் என்றும் இங்கு கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் எவையாயினும் தவருக இருப்பின் அதற்கான தண்டனைகளையும் நானறிவேன் என்றும் பிரகடனப் படுத்துகிறேன்.

————,
விண்ணப்பதாரியின் வழக்கமான கையொப்பம்.

திகதி :————.

9-401—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77

---

**களுத்துறை பெரும் பகுதியில் மகாவில பிறப்பு, இறப்பு பிரிவிற்கும் களுத்துறை, பாணந்துறை, தோட்டமுனே பிரிவிற்கு விவாக (பொது) பதிவுகாரர் பதவி**

மகாவில பிறப்பு, இறப்பு பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சில காலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்குக் குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லே கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிற தராதரங்களும், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரி, கிராம சேவையாளர், உள்ளூராட்சிச் சேவை, தபால் அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், பொலீஸ், சனசமூக, பிரசித்த வியாபார, கூட்டுறவு தாபன நிலையங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1973 ம் ஆண்டு ஐப்பசி மாதம் எட்டாம் திகதி அல்லது அதற்கு முன்னதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

எ. ட. வி. குணசேகர,
பெரும் பகுதிப் பதிவுகாரருக்காக.

பெரும்பகுதிப் பதிவுகாரர் அலுவலகம்,
களுத்துறை,
1973 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 1 ந வ.

9-241—14.09.73 ந் திகதிய வர்த்தமானினி இல. 77

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கடற்றெழில் திணைக்களம்**

நீர்க்கொழும், தங்காலே, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள கடற்றெழில் பயிற்சி நிலையங்களில் 1974 ஆம் ஆண்டு ஜனவரியில் சிங்களம்/தமிழ்மொழியில் நடாத்தப்படவிருக்கும் கடற்றெழிலாளர் பயிற்சி வகுப்புகள்

மேற்கூறப்பட்ட கடற்றெழில் பயிற்சி நிலையங்களில் 1974 ஜனவரியில் தொடங்கவிருக்கும் கடற்றெழிலாளர் பயிற்சி வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கீழ்க்குறிப்பிடப்பட்ட தகைமைகளையுடைய தகுந்த அபேட்சகர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

நீர்கொழும்பு, தங்காலே, ஆகிய இடங்களிலுள்ள கடற்றெழில் பயிற்சி நிலையங்களில் போதனுமொழி சிங்களமாகவும், யாழ்ப்பாணத்திலுள்ள கடற்றெழில் பயிற்சி நிலையத்தில் போதனுமொழி தமிழாகவும் இருக்கும்.

**2. விண்ணப்பதாரர்கள் தமது** விண்ணப்பங்களை கீழ் வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் பூர்த்தி செய்து தாம் தெரிவு செய்துள்ள பயிற்சி நிலையத்தின் அதிபருக்கு 1973 நவம்பர் 10 ஆம் திகதியன்றே அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும். தபாலில் அல்லது வேறுவிதமாக காணமற்போகும் விண்ணப்பங்களுக்கு இத்திணைக்களம் பொறுப்பாளியல்ல. கடற்றெழில் பயிற்சி நிலைய அதிபர்களின் முகவரிகள் பின்வருமாறு :—

(அ) அதிபர், கடற்றெழில் பயிற்சி நிலையம், நீர்க்கொழும்பு.

(ஆ) அதிபர், கடற்றெழில் பயிற்சி நிலையம், தங்காலே.

(இ) அதிபர், கடற்றெழில் பயிற்சி நிலையம், யாழ்ப்பாணம்.

3. **பயிற்சிக் காலமும் விரிவும்.**—இப் பயிற்சி வகுப்புகள், மீன்பிடிக்கருவி, மீன்பிடிமுறை, இயந்திரத்தைச் செயலாற்றுதல், பேணுதல் என்பவற்றையிட்ட பயிற்சியை அடக்கும். இப்பயிற்சி வகுப்புகள் கிட்டத்தட்ட 6 மாத காலத்துக்கு நீடிக்கும். ஒவ்வொரு வகுப்பிலும் 15 பேருக்கு இடமளிக்கப்படும்.

4. **பயிற்சி நிபந்தனைகள்.**—(1) பயிற்சிக்காலத்தில் பயிற்சி பெறுவோருக்கு தங்கு வசதிகள் நீர்கொழும்பு கடற்றெழில் பயிற்சியாளருக்குமட்டும் வழங்கப்படும். ஏனைய கடற்றெழில் பயிற்சி நிலையங்களான தங்காலே, யாழ்ப்பாணம் ஆகிய பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுவோருக்கு தங்குவசதிகள் வழங்கப்படமாட்டாது.

(2) பயிற்சி முடிந்ததும் பயிற்சி பெற்றவர் அரசாங்கத்தின்கீழ் தொழில் ஏதுக்கேனும் எதுவித உரிமையையும் கோரமுடியாதவராவர்.

(3) பயிற்சி வகுப்புக்களின் கால எல்லேவரையும், பயிற்சி பெறுவோர் பயிற்சி நிலையவிதிகளுக்கு அமைந்து நடக்க வேண்டியவராவர்.

(4) பயிற்சியாளரிடமிருந்து பயிற்சிக் கட்டணமேதும் அறவிடப்படமாட்டாது.

(5) நிலையத்துக்குரிய பயிற்சி வள்ளங்களில் கடலில் செயல்முறையில் செய்து காட்டுவதும் பயிற்சியில் அடங்கும்.

(6) பயிற்சி பெறுவோருக்கு நாளொன்றுக்கு ரூபா 2/- வீதம் உணவுப்படி வழங்கப்படும்.

(7) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் ரூபா 50/- வைப்புப் பணமாகச் செலுத்த வேண்டும். பயிற்சி முடிந்ததும் இப்பணம் அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படும்.

5. **தேவையான தராதரங்கள்.**—இப்பயிற்சிக்கான விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும்,

(அ) 1973 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராயும், 30 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) நல்லொழுக்கமும், நல்ல உடற்றிறன் உடையவராயும் இருத்தல் வேண்டும்.

(இ) சிங்களம்/தமிழ் கனிஷ்ட பாடசாலேத் தராதரப்பத்திரப் பரீட்சைவரையும் படித்தவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—ஜீவனேபாயத் தொழிலாக மீன்பிடியைக் கொண்டோரும், அவர்களின் ஆண்மக்களுமான அபேட்சகர்களுக்கு முதன்மை அளிக்கப்படும்.

(6) விண்ணப்பதாரர் பின்வருவனவற்றை பிரதிகளை (மூலச் சான்றிதழ்களை அல்ல) தங்கள் விண்ணப்பங்களுடன் இணைக்க வேண்டும்.

(அ) பிறப்பு பதிவுச் சான்றிதழ்.

(ஆ) தாம் பெற்ற ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) இரு நற்சாட்சிப் பத்திரங்கள்.

(ஈ) விண்ணப்பதாரரினதும் அன்னர் தந்தையினதும் தொழில்களைக் குறித்து கிராம சேவகரிடமிருந்து ஒரு அத்தாட்சிப்பத்திரம்.

7. அபேசகர் ஒரு குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்குப் பிரசன்னமாகத் தயாராக இருக்க வேண்டும். இது சம்பந்தமாக பிரயாணச் செலவோ அல்லது வேறு செலவுகள் எதுவுமோ வழங்கப்படமாட்டாது.

8. இவ்வகுப்புகளில் சேர்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களுக்கு வகுப்புகள் ஆரம்பிக்கும் திகதி அறிவிக்கப்படும்.

ஏ. ஐ. முகைதீன்,
கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்,
கொழும்பு-3, 1973.09.03.

கடற்றொழிலாளர் பயிற்சி வகுப்புக்கான விண்ணப்பப் படிவம்

சிங்களம்/தமிழ் மொழியில்—ஜனவரி 1974

1. முழுப்பெயர் :————.
(அ) முதற்பெயர் :————.
(ஆ) ஏனைய பெயர்கள் :————

2. தபால் முகவரி :————.

3. (அ) 1973 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதியில் சரியான வயது
வருடங்கள் :———. மாதங்கள் :———. தினங்கள் :—.
(ஆ) பிறந்த திகதி :————

4. நாட்டினம் :————.

5. விண்ணப்பதாரரின் தற்போதைய தொழில் :————

6. விண்ணப்பதாரர் தொழில் செய்யுமிடம் :————.

7. விண்ணப்பதாரர் மீனவராயிருந்தால் :————.
(அ) மீன்பிடி ரகம்.
(ஆ) வள்ளத்தினதும் கருவியினதும் சொந்தக்காரனா?
(இ) ஒரு இயந்திர வள்ளத்தின் சொந்தக்காரனா?

8. விண்ணப்பதாரரின் தந்தையின் தற்போதைய தொழில் :—————.

9. விண்ணப்பதாரரின் தந்தை தொழில் செய்யுமிடம் :————.

10. விண்ணப்பதாரர் விவாகமானவரா? விவாகமாகாதவரா, அல்லது தாரமிழந்தவரா (விவாகமானவராயின் பிள்ளைகளின் தொகையைத் தருக)

11. கல்வித் தராதரம்.

12. ஏற்கனவே பெற்றுள்ள பயிற்சி ஏதாவது இருப்பின் விபரங்கள் :—

13. இப்பயிற்சிக்கு உரிமைகோரும் விசேட காரணங்கள் :—

திகதி :————. ————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

9-287/1—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77

---

கடற்றொழில் திணைக்களம்

நீர்கொழும்பு, தங்காலை, யாழ்ப்பாணம், ஆகிய இடங்களிலுள்ள கடற்றொழில் பயிற்சி நிலையங்களில் 1974 ஆம் ஆண்டு ஜனவரியில் சிங்களம்/தமிழ்மொழியில் நடாத்தப்பட இருக்கும் பழுதுபார்க்கும் இயந்திரவினைஞர் பயிற்சி வகுப்புகள்

மேற்குறிப்பிட்ட கடற்றொழில் பயிற்சி நிலையங்களில் 1974 ஜனவரியில் தொடங்க இருக்கும் பழுதுபார்க்கும் இயந்திர வினைஞர் பயிற்சி வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள தகைமைகளையுடைய தகுந்த அபேட்சகர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

நீர்கொழும்பு, தங்காலை ஆகிய இடங்களிலுள்ள கடற்றொழில் பயிற்சி நிலையத்தில் போதனாமொழி சிங்களமாகவும், யாழ்ப்பாணத்திலுள்ள கடற்றொழில் பயிற்சி நிலையத்தில் போதனாமொழி தமிழாகவும் இருக்கும்.

2. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை கீழ் வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் பூர்த்தி செய்து தாம் தெரிவு செய்துள்ள பயிற்சி நிலையத்தின் அதிபருக்கு 1973 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக அனுப்பவேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும். தபாலில் அல்லது வேறுவிதமாகக் காணமற்போகும் விண்ணப்பங்களுக்கு இத்திணைக்களம் பொறுப்பாளியல்ல. கடற்றொழில் பயிற்சி நிலைய அதிபர்களின் முகவரிகள் பின்வருமாறு :

(அ) அதிபர், கடற்றொழில் பயிற்சி நிலையம், நீர்கொழும்பு.
(ஆ) அதிபர், கடற்றொழில் பயிற்சி நிலையம், தங்காலை.
(இ) அதிபர், கடற்றொழில் பயிற்சி நிலையம், யாழ்ப்பாணம்.

**3. பயிற்சிக் காலமும் விரிவும் :** இப்பயிற்சி வகுப்புகள் கோட்பாடுதத்துவங்கள், இயந்திரத்தைச் செயலாற்றுதல், பேணுதல், வள்ளங்கள் சமைத்தல், கடலக என்ஜின்களைப் பழுதுபார்த்தலும், சுத்திசெய்தலும் என்பவற்றைக் கொண்ட பயிற்சியை அடக்கும். இப்பயிற்சி வகுப்புகள் கிட்டத்தட்ட 12 மாத காலத்துக்கு நீடிக்கும். ஒவ்வொரு வகுப்பிலும் 10 பேருக்கு இடமளிக்கப்படும்.

4. பயிற்சி நிபந்தனைகள் :—

(1) பயிற்சிக்காலத்தில் பயிற்சி பெறுவோருக்கு தங்கு வசதிகள் நீர்கொழும்பு கடற்றொழில் பயிற்சியாளருக்கும் வழங்கப்படும். ஏனைய கடற்றொழில் பயிற்சி நிலையங்களான தங்காலை, யாழ்ப்பாணம் ஆகிய பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுவோருக்கு தங்கு வசதிகள் வழங்கப்பட மாட்டாது.

(2) பயிற்சி முடிந்ததும், பயிற்சி பெற்றவர் அரசாங்கத்தின் கீழ் தொழில் ஏதுக்கும் எத்வித உரிமையையும் கோர முடியாதவராவர்.

(3) பயிற்சி வகுப்புக்களின் கால எல்லைவரையும், பயிற்சி பெறுவோர் நிலைய விதிகளுக்கு அமைந்து நடக்க வேண்டியவராவர்.

(4) பயிற்சியாளரிடமிருந்து பயிற்சிக் கட்டணமேதும் அறவிடப்படமாட்டாது.

(5) பயிற்சி நிலைய வள்ளங்களில் மீன்பிடிமுறைபற்றி கடலில் செய்து காட்டுதல் பயிற்சியில் உள்ளடங்கும்.

(6) பயிற்சி பெறுவோருக்கு நாளொன்றுக்கு ரூபா. 2/- வீதம் உணவுப்படி வழங்கப்படும்.

(7) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் ரூபா 50/ ஐ வைப்புப் பணமாக செலுத்த வேண்டும். பயிற்சி முடிந்ததும் இப்பணம் அவர்களுக்குத் திருப்பிக் கொடுபடும்.

5. தேவையான தகைமைகள்.—இப்பயிற்சிக்கான விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும்,

(அ) 1973 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயும், இருத்தல் வேண்டும்.

(ஆ) நல்லொழுக்கமும், நல்ல உடற்றிறன் உடையவராயும் இருத்தல் வேண்டும்.

(இ) ஒரு ஊர்திச்சாலையில் அல்லது வேலைக்களத்தில் 3 வருடகாலம் பொறித்துறையில் நடைமுறை அனுபவம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஈ) சி. த. ப. அல்லது க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் எண்கணிதம்/தூயகணிதம் உட்பட 4 பாடங்களில் சித்தி பெற்றவராயும் இருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பதாரர், பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலச் சான்றிதழ்களையல்ல) தங்கள் விண்ணப்பங்களுடன் இணைக்க வேண்டும் :—

(அ) பிறப்பு பதிவுச் சான்றிதழ்.
(ஆ) தாம் பெற்ற ஆகக்கூடிய கல்வித் தராதரப்பத்திரம்.
(இ) இரு நற்சாட்சிப் பத்திரங்கள்.
(ஈ) விண்ணப்பதாரரினதும் அன்னார் தந்தையினதும் தொழிலைக் குறித்து கிராம சேவகரிடமிருந்து ஒரு அத்தாட்சிப் பத்திரம்.
(உ) விண்ணப்பதாரர் பெற்றுள்ள இயந்திர வினைஞர் பயிற்சியைக் குறிக்கும் சான்றிதழ்.

7. அபேட்சகர் ஒரு குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்குப் பிரசன்னமாகத் தயாராக இருக்க வேண்டும். இது சம்பந்தமாகப் பிரயாணச் செலவோ அல்லது வேறு செலவுகளெதுவும் வழங்கப்படமாட்டாது.

8. இவ்வகுப்புகளில் சேர்வதற்கு தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களுக்கு வகுப்புகள் ஆரம்பிக்கும் திகதி அறிவிக்கப்படும்.

ஏ. ஐ. முகைதீன்,
கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்,
கொழும்பு 3,
1973.09.03.

*பழுதுபார்க்கும் இயந்திர வினைஞர் பயிற்சி வகுப்புக்கான விண்ணப்பப்படிவம் சிங்கள/தமிழ்மொழியில் 1074 ஜனவரி*

1. முழுப்பெயர் :———.
   (அ) முதற்பெயர் :———.
   (ஆ) ஏனைய பெயர்கள் :———.

2. தபால் முகவரி :———.

3. (அ) 1973 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதியில் சரியான வயது :———.
   வருடங்கள்———, மாதங்கள்———, தினங்கள்———.
   (ஆ) பிறந்த திகதி :———.

4. நாட்டினம் :———.

5. விண்ணப்பதாரரின் தற்போதைய தொழில் :———.

6. விண்ணப்பதாரர் தொழில் செய்யுமிடம் :———.

7. விண்ணப்பதாரர் விவாகமானவரா, விவாகமாகாதவரா, அல்லது தாரமிழந்தவரா. (விவாகமானவராயின் பிள்ளைகளின் எண்ணிக்கையைத் தருக.)

8. கல்வித் தராதரம் :———.

9. விண்ணப்பதாரர் பெற்றுள்ள இயந்திர வினைஞர் பயிற்சி பற்றிய விபரங்கள் :———.

10. இப்பயிற்சிக்கு உரிமை கோரும் விசேட காரணங்களின் விபரங்கள் :———.

———,
விண்ணப்பதாரரின் கைபொப்பம்.

திகதி :———.

9–287/2—14.09.73 ந் திரதிய வர்த்தமானி இல. 77

---

## விவசாயத் திணைக்களம்

இலங்கை விவசாயப் பாடசாலை விவசாய டிப்ளோமா பயிற்சி

இலங்கைப் பிரசைகளிடமிருந்து இலங்கை விவசாயப் பாடசாலையில் இரண்டாண்டு விவசாய " டிப்ளோமா " பயிற்சி பெறுவதற்காய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பயிற்சி பெறவிரும்புவோர் கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப்படிவத்தில் 1973 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியவாறு தமது விண்ணப்பத்தை பதிவுத்தபாலில் அதிபர், இலங்கை விவசாயப்பாடசாலை, குண்டசாலை என்ற விலாசத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

1. இரண்டாண்டு விவசாய " டிப்ளோமா " பயிற்சி இரு பகுதிகளைக் கொண்டது.

**முதற்பகுதி—முதலாம் வருடம்**

விவசாய இரசாயனவியல், விவசாயத்தாவரவியல், விவசாயப்பொருளாதாரமும் வெளிக்களப்பரிசோதனைகளும், கமப்பொறியியல் 1, பயிர் வேளாண்மை 1, மிருகபரிபாலனம் 1, பூங்கனியியல் 1, பண்ணைக் கைவேலை 1 (ஆண்களுக்கு) மனையியல் 1 (பெண்களுக்கு).

**இரண்டாம் பகுதி—இரண்டாம் வருடம்**

பயிர்பாதுகாப்பு, பண்ணைமுகாமை, விசாலிப்புக்கல்வி, கமப்பொறியியல் 2, பூங்கனியியல் 2, பயிர்வேளாண்மை 2, மிருகபரிபாலனம் 2, பண்ணைக் கைவேலை 2 (ஆண்களுக்கு) மனையியல் 2 (பெண்களுக்கு) இப்பயிற்சி ஆண்களுக்கும் பெண்களுக்குமானது.

2. விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகள் உடையோராக இருத்தல் வேண்டும் :—

**வயது**

1974 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ம் திகதி 17 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**கல்வி முன்னடியான தேவைகள்**

விண்ணப்பதாரிகள் கமத்தொழிற் சாதனுபயிற்சிப்பாடசாலை பயிற்சி பெற்றவர்கள் உட்பட கீழ்வரும் தகைமைகள் உடையோராக இருத்தல் வேண்டும் :—

(அ) கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரண) ப் பரீட்சையில் (1) சிங்களம் அல்லது தமிழ் பாஷை (அ அல்லது ஆ பாடத்திட்டம்) (2) தூய கணிதம்/எண்கணிதம் (3) இரசாயனம் (4) உயிரியல் அல்லது தாவரவியல் அல்லது விலங்கியல் உட்பட ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) ஒரேமுறையில் குறைந்தது ஐந்து (5) பாடங்களில் க. பொ. த (சாதாரண) பரீட்சையில் சித்தி, அந்த ஐந்து (5) பாடங்களில் பாஷை அல்லது எண்கணிதம்/தூய கணிதம் அப்படிப் பெறப்பட்ட பாடங்கள் ஐந்தில் (5) ஒன்றாக இருத்தல் வேண்டும். (2 (அ) வை பார்வையிடுக.)

(இ) க. பொ. த (சாதாரண) பரீட்சையில் அல்லது அதை ஒத்த அல்லது உயர் பரீட்சையில் கீழ்வரும் பாடங்கள் இரண்டில் திறமைச்சித்தி விவசாயம், உயிரியல் அல்லது தாவரவியல் அல்லது விலங்கியல், பௌதிகவியல், தூயகணிதம், புவியியல், இரசாயனவியல்.

3. இலங்கை விவசாயப்பாடசாலையில் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் போதனைகள் அளிக்கப்படும். மனுத்தார் சிங்களம் அல்லது தமிழ் மொழியியல் போதனை பெறக்கூடியவராகவும், பரீட்சைக்கு தோற்றக்கூடிய தகுதி உடையவராகவும் இருத்தல் வேண்டும். இப்பாடசாலை குண்டசாலையில் அமைந்துள்ளது. மாணவர்கள் பாடசாலை விடுதியில் முழுப்பயிற்சிக்காலமும் கட்டாயமாக வதிதல் வேண்டும்.

4. இலங்கை விவசாயப்பாடசாலையில் கொடுக்கும் இந்த விவசாய " டிப்ளோமா " பயிற்சி ஒரு தொழில் முறைப்பயிற்சியாகும். எனவே இப்பயிற்சியை முடித்தபின் விவசாயத்தை அப்பியாசம் செய்யவிரும்பும் மாணவர்களுக்கும், தனியார்துறையில் வேலையைப் பெறவிரும்பும் மாணவர்களுக்குமே உத்தேசிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசு இப் பயிற்சியில் சித்தியடைவோருக்கு இலங்கை விவசாயசேவையின் கீழ் உத்தியோகம் பெற வாய்ப்பு உண்டென்றோ அல்லது உத்தியோகம் கொடுக்குமென்றோ உத்தரவாதம் கொடுக்கவில்லை என்பதை மனுச் செய்வோர் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

5. 2 ம் பந்தியில் குறிப்பிட்ட தேவைகள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் கிடைத்தமை உறுதிப்படுத்தப்பட மாட்டாது.

குறிப்பு :— விண்ணப்பதாரி நேர் முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் கீழ்வரும் பத்திரங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் :—

1. பிறப்புச்சாட்சிப்பத்தரம்.
2. கல்வித்தராதரப்பத்திரங்கள் (2 ம் பந்தியைப் பார்க்க)
3. கடைசியாக கல்விகற்ற பாடசாலை அதிபரிடமிருந்து பெற்ற பத்திரம்.
4. விண்ணப்பத்தில் குறிப்பிட்ட இருவரிடமிருந்து பெற்ற பத்திரம்.

இ. அபயரத்ன,
பிரதி விவசாயப்பணிப்பாளர் (விசாலிப்பு).

விவசாயத்திணைக்களம்,
பேராதனை,
1973 ம் ஆண்டு செற்றெம்பர் மீ 01 ந் உ.

### இலங்கை விவசாயப் பாடசாலை

மாதிரி விண்ணப்பப்படிவம்.

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :———.
   (தெளிவான எழுத்தில்)
2. இதர பெயர்கள் :———.
3. தபால் விலாசம் மாவட்டம் உட்பட :———.
4. பால் :———.
5. பிறந்த திகதி :———. திகதி மாதம் வருடம்
   வயது 1.1.1974ல் வருடங்கள் மாதங்கள் நாட்கள்
6. விண்ணப்பதாரி பயிற்சியைப் பின்பற்ற இருக்கும் மொழி :———.
7. கடைசியாக எடுத்த பொதுப்பரீட்சை ; பரீட்சையின் பெயர் :———,
   திகதி :———,

8. (அ) ஐந்து (5) அல்லது அதற்கு மேற்பட்ட க. பொ. த (சாதாரண) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்கள் :

| | பாடம் | தரம் | வருடம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |
| 8. | | | |

(ஆ) 8 (அ) வில் கொடுக்கப்பட்ட பாடங்கள் தவிர்ந்த, விண்ணப்பதாரி க. பொ. த (சாதாரண) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்கள் :

| | பாடம் | தரம் | வருடம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |

(இ) விண்ணப்பதாரி க. பொ. த (சாதாரண) பரீட்சையில் அல்லது ஒத்த அல்லது உயர் பரீட்சையில் பெற்ற திறமைச்சித்திகள் :

| | பரீட்சை | பாடம் | தரம் | வருடம் |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |

(ஈ) வேறு தகைமைகள்

9. பெற்ருேர் அல்லது பாதுகாவலரின் பெயரும் விலாசமும்:———.

10. பெற்ருேர் அல்லது பாதுகாவலரின் தொழில் :———.

11. விண்ணப்பதாரி பயிற்சிக்குப்பின் விவசாயத்தை கைக்கொள்ள நாடிஞல் அவருக்குள்ள வழிவகை என்ன :———

12. இலங்கை விவசாயப்பாடசாலையில் பயிற்சி பெற விண்ணப்பதாரி தகுதியானவர் என்பதை உறுதிப்படுத்தும் இருவரின் பெயரும் விலாசமும் :———.

1.

2.

தரப்பட்ட விபரங்கள் உண்மையானவை என்பதை நான் வெளிப்படுத்து கின்றேன். இதில் தரப்பட்ட விபரங்கள் பிழையாகவோ அல்லது தவருகவோ இருப்பது தெரிவிற்கு முன் காணப்பட்டால் நான் தகுதி இழப்பேன் என்றும், தெரிவிற்குப்பின் காணப்பட்டால் எதுவித நஷ்டஈடும் இன்றி நீக்கப்படக்கூடியவன் என்றும் நான் அறிவேன் என்றும் வெளிப் படுத்துகின்றேன்.

.......................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :—

9–262—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77

---

## இலங்கை கடல்கடந்த சேவைக்கு ஆட்சேர்ப்புக்கான யாவர்க்குமுரிய போட்டிப் பரீட்சை—1973

### ஒழுங்குவிதிகள்

**பரீட்சைத் திகதி**—இலங்கைக் கடல்கடந்த சேவை ஆட்சேர்ப்புப் பரீட்சையொன்று, பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சார்பில் பரீட்சை ஆணையாளரினுற் கொழும்பில் நடாத்தப்பெறும்.

இப்பரீட்சை இரு பகுதிகளாக நடாத்தப்பெறும். பகுதி I, ஆனது (அ) வியாசம், (ஆ) பொது அறிவு, (இ) உலக அலுவல்கள், (ஈ) ஆங்கில மொழி ஆகியவற்றைப்பற்றி ஒவ்வொரு விஞத்தாளைக் கொண்டதாக இருப்பதோடு, 1973, நவெம்பர் 3 ஆம் திகதி தொடக்கம் நடைபெறும். பரீட்சைத் திகதியில் மாற்றம் ஏதும் ஏற்பட நேரின், அது பின்னர் அறிவிக்கப்படும்.

நேர்முகச் சோதனையொன்றைக் கொண்ட II ஆம் பகுதியானது, I ஆம் பகுதியின் பெறுபேறுகள் கிடைக்கற்பாலனவாகிய பின்பு நடாத்தப் பெறும். பகுதி I இன் ஒவ்வொரு பாடத்திலும் போதிய அளவு உயர் மட்டத்திற் புள்ளிகள் ஈட்டும் அபேட்சகர்களுக்கு மட்டுமே நேர்முகச் சோதனைக்கான திகதிகள் அறிவிக்கப்படும். II ஆம் பகுதிக்கு, அதாவது நேர்முகச் சோதனைக்கு, அழைக்கப்பெற அருகதையாகும்பொருட்டு அபேட்சகர்கள் ஈட்டவேண்டிய புள்ளிகளின் ஆகக்குறைந்த மட்டமானது, உள்ள வெற்றிடங்களைப்போல ஏறத்தாழ இருமடங்கு எண்ணிக்கையின ரான அபேட்சகர்கள் நேர்முகச் சோதனைக்கு அழைக்கப்பெறுதற்கு வசதியேற்படுத்தும் அத்தகைய நூற்றுவீதத் தளத்தில் இருக்கும்வண்ணம் நிருணயிக்கப்படும்.

2. **வெற்றிடங்களின் எண்ணிக்கை.**—இப்பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில் நிரப்பப்பட வேண்டிய இலங்கைக் கடல்கடந்த சேவையிலுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையும் அத்தகைய வெற்றிடங்களை நிரப்பும் திகதியும் பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சிஞல் நிருணயிக் கப்படும். பொதுமக்களின் நலனையிட்டு இவ்வெற்றிடங்களுள் எதனையோ எல்லாவற்றையுமோ நிரப்பாதுவிடுதல் அவசியமெனப் பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு கருதிஞல், அவ்வாறு நிரப்பாதுவிடும் உரிமையை அவ்வமைச்சு தன்மாட்டுக்கொண்டுளது.

3. **சேவை நிபந்தனைகள்**—மேற்போந்த 2 ஆம் பந்தியின் ஏற்பாட்டுக் கமைய, இப்பரீட்சைப் பெறுபேறுகளின்பேரில் தெரிவுசெய்யப்பெறும் பரீட்சாத்திகள், அரச சேவைகளில் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இலங்கைக் கடல்கடந்த சேவைப் பிரமாணக்குறிப்பில் எடுத்துக்காட்டப்பெற்ற நியதிகள், நிபந்தனைகளுக்கு இயையவும், அப்பிர மாணக் குறிப்புக்குச் செய்யப்பட்டிருக்கும் அல்லது இனிமேல் செய்யப்படும் எத்திருத்தங்களுக்கும் அமையவும் இலங்கைக் கடல்கடந்த சேவையில் தகுதிகாண்நிலையினராக நியமிக்கப்பெறுவர்.

இப்பரீட்சையின் பெறுபேறுகளின்பேரில் தெரிவுசெய்யப்பெறும் பரீட் சார்த்திகள், இலங்கைக் கடல்கடந்த சேவைக்கு நியமிக்கப்பெற நேரடுத்து முன் அரச சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் இளைப்பாற்றிச் சம்பளத்திற்கு உரித்துடைய நியமனங்கள் வகித்திருந்தாலல்லாது—அத்தகைய சந்தர்ப்பத்தில் இலங்கைக் கடல்கடந்த சேவையிலான அவர்களது நியமனங்கள் இளைப்பாற்றிச் சம்பள அடிப்படையிலாகவிருக் கும்—இலங்கைக் கடல்கடந்த சேவைக்குச் சேமலாப நிதி அடிப்படையில் நியமிக்கப்பெறுவர்.

இங்கைக் கடல்கடந்த சேவைக்கு நியமிக்கப்பெறுதற்கு நேரடுத்து முன்பு, எலவே விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றிச்சம்பள நிதிக்குப் பங்குதொகையிறுப்போராக இருப்பினன்றி, இப்பரீட்சையின் பெறு பேறுகளின்பேரில் இலங்கைக் கடல்கடந்த சேவைக்கு நியமிக்கப்பெறும் பரீட்சார்த்திகளுக்கு வி. அ. இ. நிதித்திட்டம் ஏற்புடையதாகாது.

4. **தகவுத்திறன்.**—இப்பரீட்சைக்குரிய பரீட்சார்த்திகள்—

(அ) வம்சாவழி அல்லது பதிவு இலங்கைப் பிரசைகளாகவும் ;

(ஆ) நன்குமதிக்கப்பெற்ற ஒரு பல்கலைக்கழகப் பட்டம் பெற்றுள்ளோ ராகவும் (நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் பரீட்சார்த்திகள் தத்தமது சான்றிதழ்களைக் காண்பிக்குமாறு வேண்டப்படுவர்);

(இ) 1973.09.14 இருபத்திரண்டு (22) வயதை எய்தியுள்ளோராகவும் முப்பது (30) வயதை எய்தியிராதோராகவும் ; அத்துடன்,

**குறிப்பு** :—(i) அரச சேவை, உள்ளூராட்சிச்சேவை, அரசயாக்கங்கள் ஆகியவற்றில் நிரந்தர ஊழியராகவுள்ளோர்க்கு முப்பது (30) ஆண்டுகளினதான இவ்வயது மேலெல்லை ஏற்புடைத் தாகாது. எவ்வாருயினும், 1973.09.14 அன்று இவ்வூழி யர்கள் நாற்பத்தைந்து (45) வயதை எய்தியுள்ளோராக இருத்தலாகாது.

(ii) (உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழுவினுல் நியமிக்கப் பட்டோர் தவிர்ந்த பிற) உள்ளூராட்சி அதிகாரசபைகளின் ஊழியர்கள் ; வங்கிகள், கடன் ஈயும் நிறுவனங்கள், பல் கலைக்கழகங்கள் ஆகியவற்றின் ஊழியர்கள் ; குழுமங்கள், யாக்கங்கள், அரசின் உடைமை முழுமையுமில்லா நிறுவ னங்கள், முதலாயினவற்றின் ஊழியர்களானோர் இதன் மேற் குறிப்பு (i) இல் தொடர்புறுத்தப்பட்ட வயதுச் சலுகைக்கு அருகதையுடையராகார்.

(ஈ) அரச சேவை, உள்ளூராட்சிச் சேவை, அரச யாக்கங்கள், அல்லது சபைகள் ஆதியவற்றில் உள்ளோராயின், ஒரு திருப்திகரமான சேவைக்காலவெல்லையை உடையோராகவும்,

இருத்தல் வேண்டும்.

1973.09.14 உக்கு நேரடுத்து முற்பட்ட ஐந்து (5) ஆண்டு சேவைக்காலத் தின்போது, அல்லது 1973.09.14 உக்கு நேரடுத்து முற்பட்ட சேவையின் மொத்தக் காலவெல்லை ஐந்து (5) ஆண்டுகளுக்குக் குறைந்ததாக

இருக்குமிடத்து அத்தகைய குறைவான சேவைக்காலவெல்லையின்போது ஒரு திருப்திகரமான சேவைப் பதிவுச்சுவடியை உடையவராக இருந்திருப்பினன்றி, அரசுப் சேவைகள், உள்ளூராட்சிச் சேவை, அரச யாக்கங்கள், சபைகள் அல்லது அரசாங்கத்தின் பிற நிறுவனங்கள் ஆகியவற்றிலுள்ள அலுவலர் எவரும் இப்பரீட்சைக்குத் தோற்ற அருகதையுடையரல்லர். சம்பந்தப்பட்ட சேவைக் காலவெல்லையின்போது கிடைக்கவேண்டிய இருந்தவான சம்பள ஆண்டேற்றங்கள் யாவற்றையும் ஓர் ஆண்/பெண் அலுவலரானவர் பெற்றிருந்ததோடு, மேலும், அத்தகைய காலவெல்லையின்போது எச்சரிக்கைகள் புறநீங்கலான எவ்வுருவிலான ஒழுங்காற்று நடவடிக்கைக்காயினும் உட்படுத்தப்பட்டிராதவராக இருக்கும்பட்சத்தில் மாத்திரமே அவர் ஒரு திருத்திகரமான சேவைப் பதிவுச்சுவடியை உடையவராக இருந்துள்ளார் எனக் கணிக்கப்பெறுவார்.

1973.09.14 க்கு நேரடுத்து முற்பட்ட ஐந்து (5) ஆண்டுகளுக்கு முன்னரான அலுவலர் ஒருவரினது சேவைப் பதிவுச் சுவடியானது முற்றிலுந் திருத்திகரமாக இல்லாதிருந்துள்ளவிடத்து அவ்வலுவலர் இப்பரீட்சைக்குத் தோற்ற அருகதையுடையரெனினும் நேர்முகச் சோதனையிற் புள்ளிகள் அளிக்கப்பெறுகையில் அவ்வாறு பெறப்பட்ட ஒழுக்காற்றுத் தண்டனை அத்துடன்/அல்லது அவருக்குக் கிடைக்கப்பெற்ற பாதகமான விமரிசனங்கள், கண்டனங்கள், எச்சரிக்கைகள் முதலாயின கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

5. **பரீட்சைக்கான கட்டணம்**—இப்பரீட்சைக்கான கட்டணம் வருமாறு:—

(அ) பகுதி I—எழுத்துருச் சோதனை—ரூ. 125 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படற்கான இறுதித் திகதிக்கு முன்னர் இக் கட்டணம் ஆகூ அண்மிய கச்சேரிக்கு அல்லது கொழும்பு, பொதுத் திறைசேரியில் இறுக்கப்படுவதுடன் வருமானத் தலைப்பு 6, உப தலைப்பு 2, விடயம் 5-உக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும். கச்சேரி, அல்லது திறைசேரிப் பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்பெறல் வேண்டும்.

(ஆ) பகுதி II—நேர்முகச் சோதனை—ரூ. 75 நேர்முகச் சோதனைக்குத் தகவீட்டும் அபேட்சகர்களானோர், இக்கட்டணம் எங்ஙனம் இறுக்கப்படல்வேண்டும் எனப் பின்னர் அறிவிக்கப்படுவர்.

குறிப்பு.—எவ்வகைத்தான காரணத்துக்காகவாயினும் பரீட்சைக்குச் சமூகமளியாதிருக்கும், அல்லது பரீட்சைக்குத் தோற்றியுள்ளாராயினும் தகவுத்திறனற்றவராகக் காணப்பெறும் ஆண்/பெண் பரீட்சார்த்தி எவரேனும் இக்கட்டணத்தின் முழுமையையும் அல்லது ஒரு பகுதியை மீளளிக்கப்பெற அருகதையுடையவராகார்.

6. **வைத்தியப் பரிசோதனை**—பரீட்சார்த்திகள் உடல்நலமும் நற்பண்பும் தொடர்பாகத் தாம் உரிய தகைமையுடையோரெனப் பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கு உளநிறைவு ஏற்படுத்துவித்தல் வேண்டும். அவர்கள் காலத்திரமான உடற்கட்டு, நல்ல கண்பார்வையும் உடையோராக இருப்பதோடு, உலகின் எப்பாகத்திலாயினும் சேவையாற்றற்கேற்ற உடற்றகுதி உடையோராகவும் இருத்தல்வேண்டும். தெரிவு செய்யப்பெறும் பரீட்சார்த்திகள் இந்த அம்சங்களை யொட்டிய கண்டிப்பான வைத்திய பரிசோதனை ஒன்றுக்கு ஆளாகுமாறும் வேண்டப்படுவர்.

இவ்வைத்தியப் பரிசோதனைக்குப் பத்து ரூபா ஐம்பது சத (ரூ. 10.50ச) தொகையினதான ஒரு கட்டணம் அறவிடப்படும். நியமனத்துக்குத் தெரிவு செய்யப்பெறும் பரீட்சார்த்திகள் இக்கட்டணம் இறுக்கப்படவேண்டிய வகைபற்றிய அறிவித்தல் கொடுக்கப்பெறுவர்.

7. **விண்ணப்பிக்கும் முறை**

(அ) இதன்கீழ் இணைந்துள்ள படிவ உருவிலமைந்த தமது விண்ணப்பங்களை இருமடித்தாளின் ஓரரைத்தாளின்மீது விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்தல் வேண்டும். காகிதத்தின் இருபுறமும் பயன்படுத்தப்படல்வேண்டும். விண்ணப்பதாரர் எம்மொழி ஊடாக வாயிலாக இப்பரீட்சைக்குத் தோற்றுவாரோ அம்மொழியிலேயே விண்ணப்பப் படிவமும் நிரப்பப்படல்வேண்டும்.

(ஆ) இப்பரீட்சைக்கு அனுமதிக்கப்பெறற்கான நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் 1973, ஒற்றோபர் மீ 6 ந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர், அஞ்சல் அலுவலகப்பெட்டி 1503, கொழும்பு-2, எனும் முகவரியை வந்தடையும்வண்ணம் பதிவுஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்கப்படல்வேண்டும். அத்திகதிக்குப் பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பம் எதுவும் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களானவை, அரசுச் சேவையிலுள்ளோரிடமிருந்தாயின் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களுக்கு ஊடாகவும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ளோரிடமிருந்தாயின் உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு ஊடாகவும், அரசு யாக்கங்களின் ஊழியர்களிடமிருந்தாயின் அவ்வந்நிறுவனங்களின் தலைவர்களுக்கு ஊடாகவும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு முன் பரீட்சை ஆணையாளரை வந்தடையும்வண்ணம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். திணைக்களங்களினதும் பிற நிறுவனங்களினதும் தலைவர்களானோர் விண்ணப்பங்கள் எல்லாவகையிலும் நிறைவாக்கப்பட்டுள்ளமையைப்பற்றித் தத்தமக்கு உளநிறைவு ஏற்படுத்திக்கொள்ளுதல் வேண்டும் ; விண்ணப்பப்படிவத்திலுள்ள சான்றிதழிற் தத்தமது கைச்சாத்தை இடுதலும் வேண்டும். பரீட்சைகள் ஆணையாளருக்குச் சொந்த வகையிலோ இத்திணைக்களத்தின் பிற தலைவர்களுக்கோ விண்ணப்பங்கள் முகவரியிட்டு அனுப்பிவைக்கப்படலாகா.

(இ) விண்ணப்பங்கள் எல்லா வகையிலும் முற்றமுழுதானவையாக இருத்தல் வேண்டும். கோரப்பட்டுள்ள தகவல் எல்லாவற்றையும் தன்னகத்துக்கொண்டிரா எவ்விண்ணப்பமாயினும் அதனதன் நலப்பாடுகளுக்கு ஏற்ப கணிக்கப்பெற்று, நிராகரிக்கப்படற்பாலதாம் நிலையை எய்தும்,

(ஈ) விண்ணப்பமொன்று அல்லது அத்தகைய விண்ணப்பம் தொடர்பான அஞ்சலொன்று அஞ்சற்படுத்தப்படுகையில் தொலைந்துள்ளது அல்லது தாமதப்படுத்தப்பட்டுள்ளது எனும் குற்றஞ்சார்த்துதல் எதுவும் கருத்திற்கொள்ளப்படக்கூடியதன்று இறுதிச் சில நாட்கள்வரை தத்தமது விண்ணப்பங்களைக் காலந்தாழ்த்தும் பரீட்சார்த்திகள் தாந்தாம் இடருக்காளாகும் நிலையிலேயே அவ்வாறு செய்வர்.

(உ) விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படும் அஞ்சலட்டையின்மீது பரீட்சார்த்திகளாகவுள்ளோர் தத்தமது பெயர்களையும் முகவரியையும் மாத்திரமே எழுதல்வேண்டும். விண்ணப்பம் கிடைத்துள்ளமையை அறியத்தர இது பயன்படுத்தப்பெறும். அங்ஙனமே தத்தமது பெயர்களையும் முகவரியையும் கூறுதுவிடும் பரீட்சார்த்திகளாகவுள்ளோரது விண்ணப்பங்கள் கிடைத்தமை அறியத்தரப்படமாட்டாது. பெயரையும் முகவரியையும் குறிப்பிட்டிருந்துள்ளோராயினும் விண்ணப்பங்கள் கிடைத்தற்கான முழுவுத் திகதியிலிருந்து மூன்று (3) வாரங்களுக்குள் விண்ணப்பம் கிடைத்துள்ளமையை அறியத்தரப்பெறு பரீட்சார்த்தியாகவுள்ளோர் ஒருவர், அதனை உடனடியாகப் பரீட்சை ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும். இவ்வேற்பாட்டுக்கு இணங்கத் தவறுதல் பரீட்சார்த்தியாகவுள்ளவர் பரீட்சைக்குத் தோற்றுதலை இழக்கச் செய்யக்கூடும்.

8. **பரீட்சைக்கு அனுமதிக்கப்பெறல்**

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பரீட்சார்த்தியாகவுள்ளோர் யாபெருக்கும் பரீட்சை ஆணையாளரானவர் அனுமதி அட்டைகள் வழங்குவார். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்குத் தத்தமது அனுமதி அட்டையைக் காண்பித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையைக் காண்பிக்கத் தவறும் ஆண்/பெண் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோன்ற அனுமதிக்கப்பெறுர். பரீட்சார்த்திகள் யாபேராலும் பின்பற்றப்படவேண்டிய விதிகளின் தொகுப்பொன்று இவ்வறிவித்தலின் ஈற்றில் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் இவ்விதிகளுக்கு அமைந்தொழுகக் கடவர்.

(ii) பரீட்சார்த்திகள் தத்தமக்கு ஒதுக்கப்பெற்ற பரீட்சை மண்டபங்களில் பரீட்சைக்குத் தோற்றல் வேண்டும். ஆண்/பெண் பரீட்சார்த்தி எவரும் தமக்கென ஒதுக்கப்பட்ட பரீட்சை நிலையந் தவிர்ந்த பிற எந்நிலையத்திலாயினும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பெறுர். பரீட்சைக்குத் தோற்றும் ஆண்/பெண் பரீட்சார்த்தி ஒவ்வொருவரும் பரீட்சைநாளன்று தத்தமது அனுமதி அட்டையை மேற்பார்வையாளர்வசம் ஒப்படைத்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் அனைவராலும் பின்பற்றப்படவேண்டியுள்ள விதிகளின் ஒரு தொகுப்பு இவ்வறிவித்தலின் ஈற்றில் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் இவ்விதிகளினால் பிணைக்கப்படுவர்.

(iii) ஆண்/பெண் பரீட்சார்த்தியாகவுள்ளவர் ஒருவர் பரீட்சை நாளுக்குக் குறைந்தபட்சம் ஏழு (7) நாட்களுக்கு முன்பாகுதல் தமது அனுமதி அட்டை கிடைக்கப்பெற்றிலராயின், அதனை உடனடியாகப் பரீட்சை ஆணையாளர், அஞ்சல் அலுவலகப் பெட்டி 1503, கொழும்பு-2 க்கு அவர் அறிவித்தல்வேண்டும். (தந்தி முகவரி : "எக்ஸாம்ஸ்," கொழும்பு. ஆகும்). அனுமதி அட்டை கிடைக்கப்பெறுமை பரீட்சை ஆணையாளருக்கு அறிவிக்கப்படுகையில் பின்வரும் விபரங்களும் அளிக்கப்படல்வேண்டும் :—

(அ) பரீட்சையின் பெயர் ;

(ஆ) பரீட்சார்த்தியின் முழுப் பெயர் ;

(இ) முகவரி ;

(ஈ) விண்ணப்பம் அஞ்சற்படுத்தப்பட்ட திகதி ;

(உ) பதிவு எண்ணும் அஞ்சல் அலுவலகமும்.

(iv) பரீட்சைக்கு அனுமதிக்கப்பெறலானது தகவுத்திறன் ஏற்பு ஆகமாட்டாது. எவ்வாறுமினும், பரீட்சை ஆணையாளரானவர் தமது தற்றுணிபின்படிக்கு பரீட்சார்த்தியாகவுள்ளவர் ஒருவர்க்குத் தற்பொழுதைக்கான அனுமதி வழங்கலாம். அத்தகைய பரீட்சார்த்தியாக விழைதல் அதன்பின்பு உறுதிப்படுத்தப்படும் அல்லது நீக்கப்படும்.

9. **ஆளடையாள அட்டைகள்.**—பரீட்சார்த்திகள் தாந்தாம் எழுத முன்வரும் ஒவ்வொரு பாடத்துக்கும் மேற்பார்வையாளரில் உளநிறைவுக் கேற்பப் பரீட்சை மண்டபத்திற் தத்தமது ஆளடையாளத்தைக் காண் பிக்குமாறு வேண்டப்படுவர். இந்நோக்கத்துக்காகப் பின்வரும் ஆவணங் களுள் எதுவாயினும் ஏற்றுக்கொள்ளப்படும் :—

(அ) அஞ்சலதிபர்—தலைமையதிபதியினுல் வழங்கப்பெற்ற ஓர் ஆளடையாள அட்டை

(ஆ) இப்பரீட்சைத் திகதிக்கு முற்பட்ட மூன்ருண்டுகளுக்கு அப்பாற் படாது வழங்கப்பெற்ற வலுவுள்ள ஒரு கடவுச்சீட்டு (" பாஸ் போற்")

(இ) இப்பரீட்சைத் திகதிக்கு முற்பட்ட மூன்ருண்டுகளுக்கு அப்பாற் படாது அரசுத் திணைக்களம், அரசாங்க யாக்கம், அல்லது சட்ட வாக்கமான நிறுவனம் ஒன்றன் அதிகாரத்தின்மீது வழங் கப்பெற்ற, உரிமையாளரின் நிழற்படத்தை உள்ளடக்கிய சான்றிதழ், அதிகாரப் பத்திரம் பிற ஆவணம் ஏதேனுமொன்று.

(ஈ) கடவுச்சீட்டுப் பருமன் (" பாஸ்போற் சைஸ்") அளவினதான ஒரு நிழற்படம் (பரீட்சாத்தியாகவுள்ளவரது கையொப்பம் இந்நிழற் படத்தின் மறுபுறத்தில் இடப்பெற்று, நிழற்படமும் கையொப் பமும் பரீட்சார்த்தியாகவுள்ளவருடையனவே எனத் திணைக் களத் தலைவரினுல் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பெற்ற ஓரலுவலரினுற் சான்றுபடுத்தப்படல்வேண்டும். சான்றுபடுத்து பவருடைய பெயர், பதவிப்பெயர், திகதி, முகவரி ஆகியனவும் ஆங்கு தரப்பட்டிருத்தல்வேண்டும். மேற்பார்வையாளர்வசமே இந்நிழற்படம் வைத்திருக்கப்படுதல் வேண்டும்).

(உ) ஆட் பதிவுத் திணைக்கள ஆணையாளரினுல் வழங்கப்பெற்ற ஓர் ஆளடையாள அட்டை.

10. **பொய்யான தகவல் அளித்தற்குத் தண்டனை**

ஒழுங்குவிதிகளுக்கிணங்க ஆண்/பெண் பரீட்சார்த்தியொருவர் இப்பரீட் சைக்குத் தகவுத்திறனற்றவர் எனக் காணப்படின், பரீட்சைக்கு முன், பரீட்சையின்போது அல்லது பரீட்சைக்குப்பின் எக்கட்டத்திலாயினும் தமது பரீட்சார்த்தியாந்தன்மை வலுவற்றுப்போவதற்கு அவர் ஆளாகற் பாலராவர். ஆண்/பெண் பரீட்சார்த்தி யொருவரினுல் அளிக்கப்பெற்ற விபரங்கள் எவையேனும் அவருடைய அறிவுக்கெட்டியவரையில் பொய் யானவையாகக் காணப்படின், அல்லது தொடர்புபட்ட மெய்ந்நிகழ்வு எதனையும் வேண்டுமெனவே அன்னுர் வெளிப்படுத்தாது அடக்கியிருப் பாராயின் அவர் (ஆண்/பெண்) அரசுச் சேவையிலிருந்தும் சேவைநீக்கத் துக்கு ஆளாகற்பாலராவர்.

11. இவ்வொழுங்குவிதிகளில் ஏற்பாடுசெய்யப்படா விடயம் எதுவும் பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரது தற்றுணி பின்படிக்குக் கையாளப்படும்.

வி. ரி, ஜயசிங்க,
செயலாளர்.
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு,
குடியரசுக் கட்டடம்,
கொழும்பு. 1973.8.31.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

**இலங்கை கடல்கடந்த சேவைக்கு ஆட்சேர்ப்புக்கான பரீட்சை—1973**

சுட்டு எண் :
(அலுவலக பயன்பாட்டுக்கு மாத்திரம்)

1. (i) சொந்தப் பெயர் முதல், எழுத்துக்களுடன் :————.
(ii) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :————.

2. முழு முகவரி :————.
(அரசு/உள்ளூராட்சி/அரசு யாக்கங்களில்/சபைகளில் சேவைகளி லுள்ளோர் அலுவலக முகவரியை அளித்தல் வேண்டும்)

3. தாங்கள் இலங்கைப் பிரசையாக இருப்பது வமிசாவழியாகவா அல்லது பதிவினுலா எனக் குறிப்பிடுக :————.

4. (i) பிறந்த திகதி :————.
(ii) 1973, செத்தெம்பர் 14 ஆம் திகதியன்று வயது :—

| ஆண்டுகள் | மாதங்கள் | நாட்கள் |
|---|---|---|
| ———— | ———— | ———— |

5. (i) அரசில்/உள்ளூராட்சியில்/அரசு யாக்கத்தில்/சபைச் சேவையில் வகிக்கப்படும் தற்போதைய பதவி :————.
(ii) நியமனத் திகதியைத் தருக :————.
(அரசுச் சேவையில்/உள்ளூராட்சியில்/அரசு யாக்கங்களில்/சபைகளின் சேவைகளில் உள்ள அபேட்சகர்களால் நிரப்பப்பட வேண்டியது)

6. ஆணு, பெண்ணு ? :————.

7. *பரீட்சைக்குத் தோற்றும் மொழி ஊடகம் :————.

8. (i) பல்லேக்கழகப் பட்டம் வழங்கப்பெற்ற திகதி :————.
(ii) பல்கலைக்கழகம் :————.
(iii) பாடங்கள் :————.
(iv) (சித்தியில் ஈட்டப்பெற்ற) வகுப்பு :————.
(v) உயர்தரமா, கீழ்த்தரமா ? :————.

9. கடல்கடந்த சேவைக்கு ஆட்சேர்ப்புக்கான பிற எப்பரீட்சைக்காயினும் தாங்கள் தோற்றியுள்ளீர்களாயின் :
(i) அத்தகைய தடவைகளின் எண்ணிக்கையும் :————.
(ii) அவை நடந்தேறிய ஆண்டுகளையும், குறிப்பிடுக :————.

10. பணப் பற்றுச்சீட்டை, ஒரு பகுதி (பசையிட்டு) ஆயின் உறுதியாக ஒட்டுக :————.

11. அபேட்சகரால் அளிக்கப்படும் சான்றிதழ் :————.
அரசுச் சேவையில்/அரசு யாக்கத்தில்/உள்ளூராட்சியில்/சபைச் சேவையில், அதாவது .................. இல் ஒரு ...................... யான் நிரந்தர நியமனம் வகிக்கிறேன் :————.

(அ) 1973, செத்தெம்பர் 14 ஆம் திகதிக்கு நேரடுத்து முந்திய ஐந்து (5) ஆண்டு காலவெல்லையொன்றுள் அரச/உள்ளூராட்சி/அரசு யாக்க/சபை சேவையில் (எச்சரிக்கைகள் புறநீங்கலான ) எவ்வகைத்தான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ;

(ஆ) .......... காலவெல்லைக்குள் யான் ஆளாகியுள்ளேனல்லேன் என உறுதியுடையளிக்கிறேன் :

எனது அறிவுக்கும் நிம்பிக்கைக்கும் எட்டிய அளவில் இப்படிவத்தில் தரப்பட்டுள்ள தகவல் உண்மையானது எனவும், பரீட்சைக் கட்டணம் இறு டபப்பட்டதற்கான ........ ஆம் திகதிய ........ ஆம் எண் கொண்ட பற்றுச்சீட்டையான் ஈண்டு ஒட்டியுள்ளேன். பரீட்சைகளைக் கட்டுப்படுத்தும் விதிகளுக்கும், இப்பரீட்சையினது ஒழுங்குவிதிகளின்படிக்கு யான் அருகதையற்றவன் எனப் பரீட்சைக்குமுன்பு, பரீட்சையின் போது, அல்லது பரீட்சையின் பின்பு, கண்டுபிடிக்கப்படின் எனது அபேட்சகராந்தன்மை நீக்கதத்துக்கு என எடுக்கப்படக்கூடிய எத்தீர்மானத்துக்கும், இயைந்தொழுக யான் உடன்படுகின்றேன்.

அபேட்சகரின் கையொப்பம்.

திகதி :————.

* இப்பரீட்சைக்கு அபேட்சகர் எம்மொழி ஊடகமூலம் தோற்றுகிருரோ, அம்மொழி ஊடகமூலமே விண்ணப்பப்படிவம் நிரப்பப் படல்வேண்டும்.

** விண்ணப்ப ஏற்பு இறுதித் திகதியின் பின்னர், விண்ணப்பப் படிவத்தில் காட்டப்பட்ட, பரீட்சைக்குத் தோற்றும் மொழி ஊடகத் தில் மாற்றம் எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது,

*** (அ) ஐந்து வருட அனுபவமோ அல்லது அதற்கு மேலுள்ள அலுவலர்க்குப்பொருந்தும்.

(ஆ) ஐந்து வருட அனுபவத்திற்குக் குறையாத சேவை அலுவலர்க்குப்பொருந்தும்.

**දෙපාර්තමේන්තු ප්‍රධානයාගේ සහතිකය**

රාජ්‍ය/රාජ්‍ය සංස්ථා/පළාත් පාලන/මංඩල සේවයේ නියුක්ත අපේක්ෂක අපේක්ෂිකාවන් පිළිබඳ සහතිකය

................................................................ මහතා/මහත්මිය/මෙනෙවිය/රාජ්‍ය/පළාත් පාලන/රාජ්‍ය සංස්ථා/මංඩල සේවයෙහි නියුක්තව සිටිමින් 1973. 9. 14 වැනි දිනට පූර්වාසන්නයන් වූ පස් අවුරුදු කාලය තුළ/1973. 9. 14 වැනි දිනට පූර්වාසන්නයන් වූ පස් අවුරුද්දකට අඩු වූ මුළු සේවා කාලය තුළ ඔහුගේ/ඇයගේ වේතනාධික සියල්ලම උපයාගෙන ඇති බවත්, ඔහු/ඇය මොනම ආකාරයක හෝ විනයානුකූල දඬුවමකට (අවවාද කිරීම හැර) භාජනය වී නොමැති බවත් මම සහතික කරමි.

මෙම ඉල්ලුම් පත්‍රයෙහි 4 සහ 8 යන කොටුවල සපයා ඇති තොරතුරු, වාර්තා හා සන්සන්දනය කොට පරීක්ෂා කළ බවත්, ඒවා නිවැරදි බවත්, අපේක්ෂකයා/අපේක්ෂිකාව මා ඉදිරිපිට දී අත්සන් කළ බවත්, තවදුරටත් මෙයින් සහතික කරමි.

..............................
දෙපාර්තමේන්තු/ආයතන ප්‍රධානියාගේ
හෝ ඔහු විසින් බලය පවරන ලද
නිලධාරියාගේ අත්සන.

..............................
නම.

දිනය : ........................

..............................
පදවි නාමය.

ස්ථානය : ..............................

(இணைப்பு 1)

## இலங்கைக் கடல்கடந்த சேவைக்கு ஆட்சேர்ப்புக்கான பரீட்சை

ஆட்சேர்ப்புத் திட்டம்

### பரீட்சை மொழி

இப்பரீட்சையானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்பெறும்.

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமிறுதித் திகதிக்குப் பின்பு பரீட்சை மொழியை மாற்றுதற்குப் பரீட்சார்த்திகள் அனுமதிக்கப்பெருர்.

(ii) பரீட்சார்த்தியொருவர் இப்பரீட்சையின் ஆங்கிலம் என்னும் விடைத்தாள் தவிர்ந்த எல்லா விடைத்தாள்களையும் ஒரு பரீட்சை மொழியில் மாத்திரமே எழுதல்வேண்டும்.

### பாடங்கள்

இப்பரீட்சை பின்வரும் பாடங்களை உள்ளடக்கும் :—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) வியாசம் | .. | 1 | விடைத்தாள் | 100 | புள்ளிகள் |
| (ii) பொது அறிவு | .. | 1 | விடைத்தாள் | 150 | புள்ளிகள் |
| (iii) உலக அலுவல்கள் | .. | 1 | விடைத்தாள் | 150 | புள்ளிகள் |
| (iv) ஆங்கில மொழி | .. | 1 | விடைத்தாள் | 100 | புள்ளிகள் |

போதிய அளவு உயர்மட்டத்திற் புள்ளிகள் ஈட்டும் பரீட்சார்த்திகள் நேர்முகச் சோதனையொன்றுக்கு வரவழைக்கப்பெறுவர். நேர்முகச் சோதனையில் வழங்கப்படற்பாலதான உச்சப் புள்ளிகள் இருநூறு (200) ஆகும்.

### இலங்கைக் கடல்கடந்த சேவையில் நியமனத்துக்குத் தெரிவுசெய்யும் முறை

எழுத்துருச் சோதனையிலும் நேர்முகச் சோதனையிலும் உச்ச, மொத்தப் புள்ளிகளை ஈட்டுவோருள்ளிருந்தே இலங்கைக் கடல்கடந்த சேவையின் தகுதிகாண் நிலையினரை நியமனஞ் செய்தற்பொருட்டான இறுதித் தெரிவு நடைபெறும்.

பிறவாறு குறித்துரைக்கப்பட்டிருந்தாலன்றி வினுத்தாள்கள் யாவும் மூன்று மணித்தியாலங்கள் நீடிப்பனவாகும்.

## எழுத்துருவிலான பரீட்சை

### வியாசம்

இவ்வினுத்தாளில் தரப்பட்டுள்ள பரந்த எல்லைக்குட்பட்ட பல விடயங்களுள்ளிருந்து தெரிவுசெய்யப்பெறும் ஒரு விடயத்தைப்பற்றிப் பரீட்சார்த்தியானவர் ஒரு வியாசம் எழுதும்வண்ணம் எதிர்பார்க்கப்படுவர். இவ்விடயங்கள், எவ்விசேட கல்வித் துறையுடனுவது தொடர்புடையனவாக இராது, ஆண்/பெண் பரீட்சார்த்தியினது பொது அறிவையும் புத்திக் கூர்மையையும் மாத்திரமன்றி, சிந்திக்கும், எடுத்துரைக்கும் ஆற்றல்களில் அன்னர் கொண்டுள்ள திறமையையும் சோதிக்கும் குறிக்கோளுடன் அமைக்கப்பட்டுள்ளன. விடயத்தை எடுத்தாளுதலிலுள்ள சூழ்சிந்தனை, தன்முதன்மை ஆகியவற்றின் தரத்தையும் கொண்டு இவ்வியாசங்கள் மதிப்பிடப்படும். துலாம்பரமாகவும் வாசிக்கக்கூடிய வகையிலும் வியாசங்கள் எழுதப்படல்வேண்டும்.

### பொது அறிவு

பரீட்சார்த்தி வாழவிருக்கும், வேலைசெய்யவிருக்கும், சூழலைப்பற்றி அவருக்குள்ள உணர்வைச் சோதிக்கும் குறிக்கோளுடன் இப்பொது வினுத்தாள் அமைக்கப்பட்டுள்ளது. இச்சூழலானது இலங்கையின் அரசியல், சமூக, கலாச்சார, பொருளாதாரச் சூழலும் அனைத்துநாட்டுப் புவியியல்—அரசியற் சூழலும், விஞ்ஞான, தொழில் நுட்பச் சூழலுமாகும்.

### உலக அலுவல்கள்

உலக அலுவல்கள்பற்றி, சிறப்பாக இன்றைய உலகுடன் தொடர்புபட்ட வகையில், பரீட்சார்த்தியின் அறிவைச் சோதிக்கும் குறிக்கோளுடன் இவ்வினுத்தாள் அமைக்கப்பட்டுள்ளது. இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை, வெளிநாட்டுத் தொடர்புகள், சம்பந்தமாக இலங்கை விசேட அக்கறை கொண்டுள்ள விடயங்கள் இவற்றுள் அடங்கும்.

### ஆங்கில மொழி

இவ்வினுத்தாளானது, அபேட்சகர் இம்மொழியை விளங்கிக்கொள்ளுமாற்றலைச் சோதிக்குந் நோக்கத்தைக்கொண்டிருப்பதோடு, சுருக்கியெழுதுதல், ஒரு கட்டுரை, விளங்கிக்கொள்ளுமாற்றலைச் சோதிக்கும் வகையிலமைந்த விடயங்கள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

### நேர்முகச் சோதனை

பரீட்சார்த்திகளின் பண்புநலங்களையும், வெளிநாடுகள், அனைத்து நாட்டலுவல்கள், அனைத்துநாட்டுச் சட்டம், பிறமொழிகள் ஆகியன பற்றிய விசேட அறிவையும், கருத்திற்கொண்டு, கடல்கடந்த சேவைக்கு அவர்களது பொருத்தமுடைமையை உறுதிப்படுத்தும் நோக்குடன் இந்நேர்முகச் சோதனை நடாத்தப்பெறும்.

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின் படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர்; ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்ருதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்ருதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தைபற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரச சேவைகள் ஆலோசனைச் சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

### விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணுமல் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்யவேண்டும்: பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனே வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானுல் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செயயப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்தாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைச் தமது விடைத்தாளில் குறிந்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்தாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாருக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. விஞத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்தபின்னர்தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்த வரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ விஞத்தாளிலோ மேசையிலோ

வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

**9.** ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ் விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப் பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியன வற்றை ஒழுங்காகக் கீறிவிட வேண்டும். பரீட்சை மண்டபத்தில எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடை யெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

**10.** கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால், சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்துவெளிப்பாட்டுச் சித்திர மும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றிேனாடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

**11.** பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டியமாதிரி வர்ணப்பெட்டி யையோ கணிதக் கருவிப்பெட்டியையோ விட கைப்பை, அழகு செய் செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை அட்டை. கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப் பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

**12.** பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்த கமோ குறிப்புக ளோவைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடல் வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

**13.** தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதிகொடுக்கப்பட மாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப் படுவர்.

**14.** பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்தி லிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படு கின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடை யெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்படல் வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

**15.** பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்ற மாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

**16.** பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மை யல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுதற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேனுமிருப்பின் அப்பாடம் தொடங்கு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான் பரீட்சார்த்தியென் நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டுவருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற் பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத் தாள், கண்ணரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுது வதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது மேல்மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றை யும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடை யெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்கு மிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்படல் வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்படல் வேண்டும் அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்படல் வேண் டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப் பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலை களையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டுரூபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானால், அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்படல் வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடியிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்க மாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும் அல்லது இவர் களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும்வரை உமது ஆசனத் தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லை யென் எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளிடமோ விடைத் தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்டல் வேண்டும்.

போகொட பிரேமரத்ன்,
பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி, கொழும்பு 2.

9–328—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77

இல. : 1/83/33(ஜி)

**அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த்தர உத்தியோகத்தர்களுக்கு I, II ஆம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகள் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்)—1973, நவம்பர் மாதம்**

1972, மே மாதம் 10 ஆந் தேதியின் இல. 15,011 கொண்ட அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவையின் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ளதான அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதியின் கட்டுப்பாட்டின் கீழுள்ள அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவையில் கீழ்த்தர உத்தியோகத்தர்களின் I ஆம், II ஆம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகள். 1973, நவம்பர் மாதம் 3 ஆந் தேதி கொழும்பில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. 1973 மார்ச்சு 02 ஆந் திகதிய 117 ஆம் இலக்க இப்பரீட்சை பற்றிய இணைந்த சேவைகள் சுற்றுநிருபத்திற்குப் பரீட்சார்த்திகளின் கவனம் வேண்டப்படுகின்றது.

2. இப்பரீட்சைகளைப் பரீட்சை ஆணையாளர் நடாத்துவார். இப்பரீட்சைகளை நடாத்துவதற்காக அவரால் விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவராவர். இவ்வறிவித்தலின் முடிவில் பரீட்சார்த்திகளுக்குரிய விதிகளும் பிரமாணங்களும் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளன.

3. இவ்வறிவித்தலின் முடிவில் இப்பரீட்சைக்குரிய மாதிரி விண்ணப்பப் படிவம் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் தமது சொந்த விண்ணப்பங்களை மாதிரிப் படிவத்துக்கிணங்க முழுத்தாளொன்றின் அரைத்தாளில் (வேறு எந்த அளவுப் பத்திரத்திலுமன்றி) தயாரித்தல் வேண்டும். இதன் பொருட்டு ஒரு தாள் மட்டும் உபயோகிக்கப்படல் வேண்டும். படிவம் தட்டெழுத்தில் தயாரிக்கப்படலாம்; ஆனல் அது செம்மையாகவும் தெளிவாகவும் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில் நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள், சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் மூலம் பதிவு அஞ்சலில் மலாய் வீதி, கொழும்பு 2 என்னும் முகவரியிலுள்ள பரீட்சை ஆணையாளரை 1973, செத்தெம்பர் மாதம் 25 ஆந் தேதியன்றோ அதற்கு முன்னரோ சென்றடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பும் விண்ணப்பத்தைக் கொண்டுள்ள உறையின் மேற்பக்க இடது மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்படல் வேண்டும். முடிவுத் தேதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பம் எதுவும் நிராகரிக்கப்படும்.

அரசகரும மொழிக் கொள்கை நோக்கத்திற்காகப் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அரசகரும மொழியில் தமது விண்ணப்பங்களைத் தயாரித்து அம்மொழியிலேயே அவற்றை நிரப்புதல் வேண்டும். எனினும் முன்னர் சேர்ந்த உத்தியோகத்தர் அரசகரும மொழியிலோ அல்லது தமிழிலோ/ஆங்கிலத்திலோ எது அவர்களின் ஆட்சேர்ப்பு மொழியோ அதில் தமது விண்ணப்பங்களைத் தயாரித்து நிரப்பும் விருப்புரிமை உடையவராவர்.

4. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள எல்லாப் பரீட்சார்த்திகட்கும் பரீட்சை ஆணையாளர் அனுமதி அட்டைகளை நேர அட்டவணைப் பிரதியொன்றுடன் கொடுப்பார். பரீட்சைத் தேதிக்கு ஏழு நாட்களுக்கு முன்னரேனும் அனுமதி அட்டையை ஒரு பரீட்சார்த்தி பெறுவிடின், அவர் காலந் தாழ்த்தாது மலாய் வீதி, கொம்பனித் தெரு, த. பெ. 1503 என்னும் முகவரியிலுள்ள பரீட்சை ஆணையாளருடன் தொடர்பு கொண்டு அனுமதி அட்டையைப் பெறவில்லையென அறிவித்துப் பின்வரும் தகவலையும் கொடுத்தல் வேண்டும் :—

(1) பரீட்சையின் பெயர் ;

(2) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;

(3) முழு அஞ்சல் முகவரி ;

(4) அஞ்சல் அலுவலகம், பதிவு இல. அனுப்பிய தேதி.

5. ஆளடையாள அட்டைகள்.—பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் எடுக்கும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளரின் திருப்திக்கமைய தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டப்படுவர். இந்நோக்கத்திற்காகப் பின்வரும் சாதனங்களிலொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :—

(அ) அஞ்சல் அதிபதியினுல் வழங்கப்படும் ஆளடையாள அட்டையொன்று ;

(ஆ) பரீட்சை தொடங்கும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு முற்படாமல் வழங்கப்பட்ட செல்லுபடியான கடவுச்சீட்டொன்று ;

(இ) பரீட்சை தொடங்குவதற்கு முன்னர் மூன்று ஆண்டுகளுக்கு முற்படாமல் அரசாங்க அதிகாரத்துடன் வழங்கப்பட்ட பரீட்சார்த்தியின் ஒளிப்படம் தாங்கிய சாதனம் அல்லது உத்தரவுச் சீட்டு அல்லது சான்றிதழ் ஏதாவதும் ;

(ஈ) கடவுச்சீட்டு பருமனுடைய ஒளிப்படமொன்று (ஒளிப்படத்தின் மறுபக்கத்தில் திணைக்களத்தின் தலைவர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் முன் பரீட்சார்த்தி கையொப்பமிட்டு, இக்கையொப்பமும் ஒளிப்படமும் சரியானதென அவ்வுத்தியோகத்தர் சான்றளித்தல் வேண்டும். சான்றளிப்பவரின் பெயர், பதவி, திகதி, முகவரி ஆகியன தெளிவாகத் தெரிவித்தல் வேண்டும். மேற்பார்வையாளர் இவ்வொளிப்படத்தை வைத்திருப்பார்).

(உ) ஆட்பதிவுத் திணைக்களத்தினுல் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை.

6. பின்வரும் அடிப்படையில் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து கட்டணங்கள் அறவிட முடிவு செய்யப்பட்டுள்ளது :—

(அ) முதல் அமர்வு கட்டணமில்லை.

(ஆ) தொடர்ந்த ஒவ்வோர் அமர்வுக்கும்—முழுப் பரீட்சை ரூபா 15 ; ஒரு பாடம் ரூபா 7.50.

**கட்டணங்கள் பரீசார்த்திகளினுல் அவர்களது கையொப்பமிடப்பட்டு முறையாகப் பெறுமதி நீக்கம் செய்யப்பட்ட அரசிறை முத்திரைகளால் கட்டப்படவேண்டும்.**

ஆர். எம். பீ. சேனனுயக்க,
அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதிக்காக.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
கொழும்பு 7,
1973 ஷ ஓகத்து மீ 31 ந் உ.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த்தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கான I ஆம், II ஆம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளுக்கு (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) அனுமதிக்கப்படுதற்கான விண்ணப்பம்—1973, நவம்பர் மாதம்**

| |
|---|
| சுட்டிலக்கம் : |
| அலுவலக உபயோகத்திற்கு மட்டும். |

1. விண்ணப்பகாரரின் குடும்பப் பெயர், முதலெழுத்துக்களுடன் (திரு./திருவாட்டி/செல்வி) :————.
(பெரிய எழுத்துக்களில்)

2. முதலெழுத்துக்களினுல் குறிப்பிடப்பட்ட பெயர்கள் : ————.
(பெரிய எழுத்துக்களில்)

3. அலுவலகத்தின் அல்லது திணைக்களத்தின் பெயரும் அலுவலக முகவரியும் :————.

4. அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவையில் சேர்ந்த தேதி : ————.

5. அரசகரும மொழிக் கொள்கை நோக்கத்திற்காக நீர் முன்னர் சேர்ந்தவரா அல்லது புதிதாகச் சேர்ந்தவரா ? : ————.

6. முன்னர் நடந்த பரீட்சை எதனிலும் சுருக்கெழுத்து, தட்டெழுத்து, சிங்களம்/தமிழ் ஆகிய பாடங்களில் சித்தியடைந்துள்ளீரா ? அவ்வாருயின் பரீட்சைத் தேதியைக் கூறுக :————.

7. 1964 செத்தெம்பர் மாதம் 9 ஆந் தேதிய இல. (ஜி) 31 கொண்ட திறைசேரியின் சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சிங்களப் பாடத்தினின்றும் உமக்கு விலக்களிக்கப்பட்டிருந்தால், அத்தகைய விலக்கினையளிக்கும் கடிதத்தினைத் தொடர்பு காட்டுக :————.

8. எந்த வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்கு (I அல்லது II) தோற்ற நீர் தகவுடையவரென்பதையும, பரீட்சைக்குரிய பாடங்கள், அவற்றின் மொழி என்பனவற்றையும் கூறுக :————.

9. இத்தடவை நீர் தோற்றுவதற்குத் தகவுடைய வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்கு (I அல்லது II) முன்னர் தோற்றியுள்ளீரா ? அவ்வாருயின் எப்பொழுது ?:————.

10. மேலே பந்தி 9 இல் குறிப்பிடப்பட்டுள்ள வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்கு நான் முன்னர் தோற்றியுள்ளேன். இவ்விண்ணப்பப்பத்திரத்தில் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் என்னால் பெறுமதி நீக்கம் செய்யப்படுமுன்னர் உபயோகிக்கப்படாதவையாகவும் பெறுமதியுடையனவாகவுமிருந்தன என உறுதிப்படுத்துகிறேன்.

| |
|---|
| முத்திரைக்கான கூடு |

————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :————.
பரீட்சை ஆணையாளர்,

அனுப்பப்படுகிறது.

(அ) இதனுள் விபரங்கள் தரப்பட்டுள்ள பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்ற தகவுடையவர் ;

*(ஆ) இப்பரீட்சார்த்தி முன்னர் இப்பரீட்சைக்குத் தோற்றியவரல்லர் ;

*(இ) இப்பரீட்சார்த்தி முத்திரைகளை ஒட்டி முறையாகப் பெறுமதி நீக்கம் செயதிருக்கிறார்.

*(பொருந்தாதவற்றை நீக்கிவிடுக)

திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவிப் பெயரும்.

திகதி :————.

**பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்**

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவிய காலம் வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தைபற்றி அவருடைய மேலதிகாரிக்கு தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்து விடல்.

பரீட்சைக்கு முன்னரோ பரீட்சை நடக்கும் பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சாதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

**விதிகள்**

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர்தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கைமுறை அல்லது வாய் மொழிப் பரீட்சையைப் பொறுத்த வரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக் கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப்புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பல விடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிலிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அழகிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப் பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப் பெட்டியையோ கணிதக் கருவிப் பெட்டியையோ விட_கைப்பை, அழகுசெய் செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந் நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்க

ளில், மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டு வரும்பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ, புத்தகத்திலிருந்தோ, கடதாசிகளிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக் கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக் கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்படவேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிபடுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகளுக்கு

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்கு தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதியைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்கு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ளவேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்கு தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்திற்குத் தோற்றும்பொழுது இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப் பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள் ஒற்றுத்தாள், கணனரேகைத் தாள், பேரேட்டுத் தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாருக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல்மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும். சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில் அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர் வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(v) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்கு மிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்படவேண்டும். முழுவிடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேணடும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vi) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில், வினுவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலது பக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(vii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப் படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும், பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப் படத்தை அல்லது கோட்டுருபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத் தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானல் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(viii) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல்மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(ix) வினுப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினக்கள், தெரிவுக்குரிய வினக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(x) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினல் உமது விடைத்தாள் காணமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xi) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெற வேண்டினல் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்ட வேண்டும்.

போகொட பிரேமரத்தின,
பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி,
கொழும்பு-2.

9-281—14.9.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77

இல.: 1/83/32/(ஜி)

**அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவையிலுள்ள (கீழ்த்தரம்) சுருக்கெழுத்தாளர்களுக்கான (மாநாட்டுத் தேர்வு—சிங்களம்) வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை—1973**

அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த்தரத்திலுள்ள கீழே குறிக்கப்பட்டுள்ள சுருக்கெழுத்தாளர்கள், அவர்களது பெயர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் நடாத்தப்பட்ட இரண்டாம் வினைத்திறமைகாண் தடை பரீட்சை சம்பந்தமான மாநாட்டுத்தேர்வில் (சிங்களம்) சித்தியடைந்துள்ளார்களென இத்தாலறிவிக்கப்படுகின்றது. ஆண்டொன்றுக்கு 5,736 ரூபாவிற்கு முன்னுள்ள வினைத்திறமைகாண் தடைக்கு மேலாகப் பதவியுயர்த்தப்படுவதற்காக விதிக்கப்பட்டுள்ள பரீட்சையை அவர்கள் இப்பொழுது பூர்த்தி செய்துள்ளனர்.

| பெயர் | திணைக்களம் | தேர்வு நடாத்தப் பட்ட தேதிகள் |
|---|---|---|
| கதரின், கே. டி. பீ. | கல்வி, பண்டாரவளை | 08.05.1973 |
| தர்மசேன, எம். டி. பி. | உள்நாட்டு இறைவரி | ஷை |
| பெர்ணுந்து, கே. எஸ். | தந்தித் தொடர்பு அமைச்சு | ஷை |
| குருப்பு, கே. ஏ. ஜே. டபிள்யு. | சுகாதாரம் | ஷை |
| முனசிங்க, ஈ. | உள்நாட்டு இறைவரி, கண்டி | ஷை |
| கருணசீலி, கே. கே. | மாவட்ட மன்று, மாத்தறை | 09.05.1973 |
| நிமல்சிறி, கே. வை. | நீர்ப்பாசன, மின்சக்தி, நெடுஞ்சாலைகள் அமைச்சு | ஷை |
| பாலிகக்கார, ஆர். பி. | கச்சேரி, மாத்தறை | ஷை |
| பியசீலி, கே. ஏ. | போக்குவரத்து அமைச்சு | ஷை |
| பீரிஸ், ஏ. வி. | புகையிரத | ஷை |
| பீரிஸ், எம். டபிள்யு. | புகையிரத | ஷை |
| பத்திரண, எஸ். ஐ. | மஜிஸ்ரேற் மன்று, கொழும்பு தெற்கு | ஷை |
| பியதாச, ஜி. டி. என். | மஜிஸ்ரேற் மன்று, மாத்தளை | ஷை |
| பெரேரா, டபிள்யு. எல். | கல்வி அமைச்சு | ஷை |
| கறியற் றொட்றிகோ, என். எம். எஸ். டீ | கல்வி அமைச்சு | ஷை |
| சமரசேகர, பி. சி. பி. | நில மீட்பு | ஷை |
| விஜேசிங்க, ஜே. ஏ. எச். | நில அளவை | ஷை |
| விக்கிரமசிங்க, ஜி. எம். எல். டபிள்யு. | இயந்திர | ஷை |
| பத்திரண, என். கே. | கலாச்சார அமைச்சு | ஷை |

ஆர். எம். பீ. சேனநாயக்க,
அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதிக்காக.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
இணைந்த சேவைகள் பகுதி,
றொறிங்டன் சதுக்கம்,
கொழும்பு 7,
1973, ஒகத்து 31.

9–282/1—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77

---

இல. : 1/83/32/ஜி)

**அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவையிலுள்ள (கீழ்த்தரம்) சுருக்கெழுத்தாளர்களுக்கான (மாநாட்டுத்தேர்வு—ஆங்கிலம்) வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை—1973**

அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த்தரத்திலுள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சுருக்கெழுத்தாளர்கள், அவர்களது பெயர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் நடாத்தப்பட்ட இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை சம்பந்தமான மாநாட்டுத் தேர்வில் (ஆங்கிலம்) சித்தியெய்தியுள்ளார்களென இத்தாலறிவிக்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு 5,736 ரூபாவிற்கு முன்னுள்ள வினைத்திறமைகாண் தடைக்கு மேலாகப் பதவியுயர்த்தப்படுவதற்காக விதிக்கப்பட்டுள்ள பரீட்சையை அவர்கள் இப்பொழுது பூர்த்தி செய்துள்ளனர்.

| பெயர் | திணைக்களம் | தேர்வு நடாத்தப் பட்ட தேதிகள் |
|---|---|---|
| திரு. என். கே. டீ. சில்வா | உள்நாட்டு இறைவரி | 11.05.1973 |
| திரு. வி. எம். யேசுதாசன் | கச்சேரி, மன்னார் | ஷை |
| திரு. ஜே. வி. பெரேரா | தொழில் நியாய சபை, கொழும்பு | ஷை |
| திரு. எஸ். பி. சிவசுப்பிரமணியம் | மாவட்ட மன்று, புத்தளம் | ஷை |
| திரு. எஸ். என். சிமீன் | ஆட்கள் பதிவு | ஷை |
| திரு. கே. எஸ். சண்முகம் | கச்சேரி, யாழ்ப்பாணம் | 14.05.1973 |
| திரு. ஜே. என். வாமதேவன் | திறைசேரி | ஷை |
| திரு. டி. விக்கிரமசிங்க | அரசாங்க நிருவாகம் | ஷை |
| திரு. எம். விமலரட்ன | சமூக சேவைகள் | ஷை |
| திரு. டபிள்யு. பி. மடகும்புர | மாவட்ட மன்று, மாத்தறை | ஷை |

ஆர். எம். பீ. சேனநாயக்க,
அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதிக்காக.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
(இணைந்த சேவைகள் பகுதி),
றொறிங்டன் சதுக்கம்,
கொழும்பு 7,

1973, ஒகத்து 31.

9–282/2—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77

இல.: 1/83/32/(ஜி)

**அரசாங்கச் சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த்தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கான முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை (சிங்களம்) — மே 1973**

1966, ஒற்றோபர் 23 ஆந் தேதிய 134 (ஜி) ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்திலும், 1973 மார்ச்சு 2 ஆந் தேதிய 117 ஆம் இலக்க இணைந்த சேவைகள் சுற்றுநிருபத்திலும் கூறப்பட்டுள்ள திட்டத்திற்கமைய கீழ் கூறப்படும் அரசாங்கச் சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த்தரத்திலுள்ள சுருக்கெழுத்தாளர்கள் திரட்டிய வேதனம் 4,584/- ரூபாவை அடையுமுன், 1973, மே 19 ஆம் தேதி நடாத்தப்பட்ட முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையிற் சித்தியடைந்துள்ளார்களென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| பெயர் | திணைக்களம் |
|---|---|
| இந்திரலதா பி. ஜி. | அரசாங்க நிருவாகம் |
| விமலவதி கே. எம். | திட்டமிடல் வேலைவாய்ப்பு அமைச்சு. |

ஆர். எம். பீ. சேனநாயக்க,
அரசாங்க நிருவாக பணிப்பாளர் நாயகத்திற்காக.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
(இணைந்த சேவைகள் பகுதி)
ரொறிங்டன் சதுக்கம்,
கொழும்பு 7,
1973 ம் ஆண்டு ஓகத்து மீ 31 ந உ.

9-282/3—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77

---

இல. : 1/83/32/(ஜி)

**அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த்தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கான முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை (ஆங்கிலம்) மே—1973**

1966, ஒற்றோபர் 23 ஆந் தேதிய 134 (ஜி) ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்திலும், 1973, மார்ச்சு 2 ஆந் தேதிய 117 ஆம் இலக்க இணைந்த சேவைகள் சுற்றுநிருபத்திலும் கூறப்பட்டுள்ள திட்டத்திற்கமைய கீழே கூறப்பட்டுள்ள அரசாங்கச் சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த்தரத்திலுள்ள சுருக்கெழுத்தாளர்கள், திரட்டிய ரூபா 4,584 வேதனத்தை அடையமுன், 1973, மே 19 ஆந் திகதி நடாத்தப்பட்ட முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையிற் சித்தியடைந்துள்ளார்களென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| பெயர் | | திணைக்களம் |
|---|---|---|
| அமீத், எஸ். ஏ. | .. | கமத்தொழில் காணி அமைச்சு |
| ஜியோர்ஜ், ஜி. ஐ. | .. | உள்நாட்டு இறைவரி |
| கொடிகார டபிள்யு. எஸ். | .. | சட்டவரையுநர் |
| சொலமன்ஸ், எம். ஐ. ஆர். | .. | கமத்தொழில் காணி அமைச்சு |

ஆர். எம். பீ. சேனநாயக்க,
அரசாங்க நிருவாக பணிப்பாளர் அதிபதிக்காக.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
(இணைந்த சேவைகள் பகுதி),
ரொறிங்டன் சதுக்கம்,
கொழும்பு 7, 1973 ம் ஆண்டு ஓகத்து 31 ந உ.

9-282/4—14.09.73 ந் திகதிய வாத்தமானி இல. 77

---

இல. : 1/83/32/(ஜி)

**அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவையிலுள்ள கீழ்த்தர உத்தியோகத்தர்களுக்கான 2 ஆம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை (சிங்களம்)—மே 1973**

1966 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் தேதிய ஜி. 134 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபம், 1968 ஆம் ஆண்டு பெப்ரவரி 7 ஆந் தேதிய ஜி. 170 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபம், 1973, மாச்சு 2 ஆந் தேதிய 117 ஆம் இலக்க இணைந்த சேவைகள் சுற்று நிருபம் என்பனவற்றில் குறிக்கப்பட்டுள்ள திட்டத்தின் நியதிகளுக்கு இணங்க ஆண்டொன்றுக்கு ரூபா 5,736 திரட்டிய வேதனதுக்கு முன்னருள்ள இரண்டாம் வினைத் திறமைகாண் தடைக்கு மேலாக உயர்ச்சியளிக்கப்படுவதற்காக 1973, மே 19 ஆந் தேதி நடாத்தப்பட்டுள்ள தகைமைத் தேர்வில் அரசாங்க சுருக்கெழுத்தாளர்கள் சேவையின் கீழ்த்தரத்திலுள்ள கீழே குறிக்கப்பட்டுள்ள சுருக்கெழுத்தாளர்கள் அவர்களுக்கெதிரே குறிக்கப்பட்டுள்ள பாடத்தில் சித்தியடைந்துள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| பெயர் | | திணைக்களம் | | | | பாடம் |
|---|---|---|---|---|---|---|
| திரு. எஸ். சுபசிங்க .. | .. | கலாச்சார | .. | .. | .. | சுருக்கெழுத்து தட்டெழுத்து |
| திரு. என். பி. ஜெயவர்த்தன | .. | திட்டமிடல் வேலைவாய்ப்பு | .. | .. | .. | ஷை |
| திரு. எம். என். பெரேரா | .. | வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சு | .. | .. | .. | ஷை |
| செல்வி. டபிள்யு. ஏ. டி. பேமாவதி | .. | உள்நாட்டு இறைவரி | .. | .. | .. | ஷை |
| திரு. எஸ். விஜேகூன் .. | .. | மஜிஸ்ரேற் மன்று, கண்டி | .. | .. | .. | ஷை |
| திரு. டி. விஜேசேன .. | .. | கல்வி அமைச்சு | .. | .. | .. | ஷை |

2. மாநாட்டுத் தேர்வுக்கு அனுமதிக்கப்படுதற்கு இப்பொழுது தகைமையடைந்துள்ள மேற்படி பரீட்சார்த்திகளும், முன்னர் தகைமையடைந்துள்ள ஏனையோரும் அடுத்த மாநாட்டுத் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவதற்காக, தமது திணைக்களத் தலைவர் மூலம் பரீட்சை ஆணையாளருக்கு உடனடியாகப் பதிவு அஞ்சலில் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஆர். எம். பீ. சேனநாயக்க,
அரசாங்க நிருவாக பணிப்பாளர் நாயகத்திற்காக.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
(இணைந்த சேவைகள் பகுதி),
ரொறிங்டன் சதுக்கம்,
கொழும்பு 7, 1973, ஓகத்து 31.

9-282/5—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77

---

இல. : 1/83/32/(ஜி)

**அரசாங்கச் சுருக்கெழுத்தாளர் சேவையிலுள்ள கீழ்த்தர உத்தியோகத்தர்களுக்கான 2 ஆம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை (ஆங்கிலம்)—மே 1973**

1966 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் தேதிய ஜி. 134 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபம், 1968 ஆம் ஆண்டு பெப்ரவரி 7 ஆந் தேதிய ஜி. 170 ஆம் இலக்கத் திறைசேரி சுற்று நிருபம், 1973, மார்ச்சு 2 ஆந் தேதிய 117 ஆம் இலக்க இணைந்த சேவைகள் சுற்று நிருபம் என்பனவற்றில் குறிக்கப்பட்டுள்ள திட்டத்தின் நியதிகளுக்கு இணங்க ஆண்டொன்றுக்கு ரூபா 5,736 திரட்டிய வேதனத்துக்கு முன்னருள்ள 2 ஆம் வினைத்திறமைகாண் தடைக்கு மேலாக உயர்ச்சியளிக்கப்படுவதற்காக 1973, மே 19 ஆந் திகதி நடாத்தப்பட்டுள்ள தகைமைத் தேர்வில் அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த்தரத்திலுள்ள கீழே குறிக்கப்பட்டுள்ள சுருக்கெழுத்தாளர்கள் அவர்களுக்கு கெதிரே குறிக்கப்பட்டுள்ள பாடத்தில் சித்தியடைந்துள்ளார்களென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| பெயர் | திணைக்களம் | | பாடம் |
|---|---|---|---|
| தகநாயக்க, ஏ. ஏ. எச். | பொலிசு | .. | சுருக்கெழுத்து |
| பெர்னாந்து, டி. எச். .. | உள்நாட்டிறைவரி | .. | தட்டெழுத்து |

2. மாநாட்டுத் தேர்வுக்கு அனுமதிக்கப்படுதற்கு இப்பொழுது தகைமையடைந்துள்ள மேற்படி பரீட்சார்த்திகளும் முன்னர் தகைமையடைந்துள்ள ஏனையோரும் அடுத்த மாநாட்டுத் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவதற்காக, தமது திணைக்களத் தலைவர் மூலம் பரீட்சை ஆணையாளருக்கு உடனடியாகப் பதிவு அஞ்சலில் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஆர். எம். பீ. சேனநாயக்க,
அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் நாயகத்திற்காக.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
(இணைந்த சேவைகள் பகுதி),
ரொறிங்டன் சதுக்கம்,
கொழும்பு 7, 1973 ம் ஆண்டு ஓகத்து 31 ந உ.

9-282/6—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| செத்தெம்பர் .. | 7.9.73 | வெள்ளி .. | 29.8.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி .. | 5.9.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி .. | 11.9.73 | செவ்வாய் .. | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி .. | 19.9.73 | புதன் .. | ந.ப. 12.00 |

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஒகத்து மீ 18 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.